
# 415,937 தபால் வாக்கு சீட்டுகள் விநியோகம்



“மே மாதம் 06ஆம் திகதி நடத்தப்படவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக, ஏப்ரல் 07, 10 மற்றும் 15ஆம் திகதிகளில், 415,937 தபால் வாக்குச்சீட்டுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன” என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதனைத் தவிர,...

» 02பக்கம்

Follow us:

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 05, இதழ்: 212 விசுவாவசு வருடம், சித்திரை மாதம் 05 ஆம் திகதி வெள்ளிக்கிழமை (18.04.2025) ஹிஜ்ரி 1446, ஷவ்வால் - 19, 0115 886187- விலை ரூ.40 பக்கங்கள் 12



# வேட்பாளர்கள் 18 பேர் மீது வழக்கு

தேர்தல் சட்டங்களை மீறிய சம்பவங்கள் தொடர்பாக 18 வேட்பாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும் குறிப்பிட்டுள்ளது.

இந்த நபர்கள் மார்ச் 03ஆம் திகதி முதல் ஏப்ரல் 16 வரையான காலப்பகுதிக்குள் கைது செய்யப்பட்டனர்.

» 02பக்கம்



## மகிழ்ச்சியுடன் வாழ்வோம்

பக்கம் 04

## அணு ஆயுத உருவாக்கத்தில் ஈரான்



பக்கம் 10

## சுப்பர் ஓவரில் த்ரில் வெற்றியீட்டி சாதனை படைத்த டெல்லி

பக்கம் 12



# பிள்ளையான் குறித்து விசேட புலனாய்வு!

## சி.ஐ.டி. குழு மட்டக்களப்பில் முகாம்

## முக்கியமான விபரங்கள் சேகரிப்பு



நமது விசேட நிருபர்

பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் சம்பந்தப்பட்ட வழக்குகள், சம்பவங்கள் குறித்து ஆராய்ந்து தகவல்களை பெறுவதற்காக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் விசேட குழுவொன்று இந்த நாட்களில் மட்டக்களப்பில் முகாமிட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக பிள்ளையான் கைது செய்யப்பட்டு பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல் சம்பவங்களுக்கும் பிள்ளையானுக்கும் தொடர்புகள் இருப்பதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபாலவும் அண்மையில் பாராளுமன்றத்தில் அறிவித்திருந்தார்.

» 02பக்கம்



# தங்கத்துக்கு கூடியது மவுசு

உலக சந்தையில் தங்கத்தின் விலை வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு உயர்ந்துள்ளது.

அதன்படி, நேற்றைய (17) நிலைவரப்படி உலக சந்தையில் ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை வரலாற்று உச்சமாக 3,345 டொலர்களை எட்டியது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் தீர்வை வரி அறிவிப்பால், உலக சந்தையில் தங்கத்தின் விலை புதிய உச்சத்தை எட்டியுள்ளது.

இதற்கிடையில், உலகளவில் தங்கத்தின் விலை உயர்வுக்கேற்ப, இலங்கையிலும் தங்கத்தின் விலை நேற்று சாதனை அளவை எட்டியுள்ளது.

இலங்கையில் தினசரி தங்க விலை குறித்த நம்பகமான தகவல்களை வெளியிடும் GOLDCeylon Gold News Network இன்...

» 02பக்கம்

# அநுரவிடம் கோரிக்கை முன்வைக்க இடையூறு

## ஊடகர்களை படமெடுத்த பலாலி பொலிஸார்



காணி விடுவிப்பு தொடர்பில் ஜனாதிபதியிடம் கோரிக்கை வைப்பதற்கான ஊடக சந்திப்புக்கு வந்தவர்களை அச்சுறுத்தும் வகையில் பொலிஸார் செயற்பட்ட சம்பவமொன்று யாழில் நேற்று...

» 02பக்கம்

## கமென்ட் கந்தர்...



செல்லும் செல்லாதது எல்லாம் செட்டியார் கணக்கில என்பதுபோல எல்லாமே பிள்ளையான் தலையிலதான் விடியும்போல...

# மன்னார்-இராமேஸ்வரம் இடையே படகுச் சேவை

## ஜூன் முதல் மேலும் 04 இலட்சம் பேருக்கு அஸ்வெசும

## ஜனாதிபதி அநுரகுமார நேற்று மன்னாரில் அறிவிப்பு



» 02பக்கம்




# கடன் அட்டைகளின் பாவனை அதிகரிப்பு

» 02பக்கம்

# திரவப் பால் மற்றும் தயிர் வற் வரியிலிருந்து விலக்கு

## டிஜிட்டல் சேவைகளுக்கும் விதிப்பு



» 02பக்கம்

# தபால்மூல வாக்களிப்பு திகதியில் திடீர் மாற்றம்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு எதிர்வரும் 22ஆம் திகதி ஆரம்பமாகவிருந்த நிலையில், தற்போது பிற்போடப்பட்டுள்ளது.

அதன்படி, 24 மற்றும் 25ஆம் திகதிகளில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தபால்மூல வாக்களிப்புகள் நடைபெறும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

முன்னதாக 22, 23ஆம் திகதிகளில் தபால்மூல வாக்கெடுப்பு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தபோதும், நிராகரிக்கப்பட்ட வேட்பு மனுக்கள் தொடர்பான தீர்ப்பின் அடிப்படையில் அந்தத் திகதிகளில்...

» 02பக்கம்



## உஷ்

தடுப்புக்காவலில் தன்னை சந்தித்து வெளியே வந்த உதய கம்மன்பில ஊடகங்களிடம் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் பிள்ளையான் அதிருப்தியாக இருப்பதாக தகவல்.

கம்மன்பிலவின் கருத்துகள் சிங்கள சமூகத்தில் நல்ல அபிப்பிராயத்தை தந்தாலும்...

» 02பக்கம்

# கண்டி ‘ஸ்ரீ தலதா யாத்திரை’ விசேட போக்குவரத்து ஏற்பாடு

ஸ்ரீ தலதா மாளிகை யாத்திரை இன்று வெள்ளிக்கிழமை (18) மாலை 3.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு மாலை 5.30 மணிவரைக்கும் அதன் பின்னர் நாளை சனிக்கிழமை (19) முதல் ஞாயிற்றுக்கிழமை (27) வரை பகல் 12.00 மணிமுதல் மாலை 5.30 மணிவரை கண்டி ஸ்ரீ தலதா மாளிகை வளாகத்தில் நடைபெறும்.

தலதா மாளிகை...

» 02பக்கம்

# சீனாவின் 76 திட்டங்கள் விரைவில் மீள் ஆரம்பம்

## கடல்வளத்தை பாதுகாக்க கடற்படையை பணித்துள்ளதாக ஜனாதிபதி அறிவிப்பு

கே. சுபானி

இடைநிறுத்தப்பட்ட 76 சீனத் திட்டங்களை மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று...

» 02பக்கம்

# யாழில் வசமாகச் சிக்கிய ஆட்டுத்திருடர்கள்

நீண்ட காலமாக தீவகப் பகுதியில் திட்டமிட்டு கால்நடைகளைத் திருடுவதில் ஈடுபட்டுவந்த திருடர் குழுவொன்று வேலணையில் மக்களது முயற்சியால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் வேலணை 06 ஆம் வட்டாரம் சங்கத்தார்கேணி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருகையில், வேலணை பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளிலும் திருட்டுத்தனமாகப் பிடிக்கப்பட்ட ஆடுகளின் ஒரு தொகுதி, வேலணை 06 ஆம் வட்டாரம் சங்கத்தார்கேணி பகுதியிலுள்ள இத்திருட்டுக் கும்பலின் சந்தேக நபராகக் கருதப்படும் ஒருவரது வீட்டில் இரகசியமாக அடைத்து வைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், குறித்த ஆடுகளை வெளியூரைச் சேர்ந்த சிலரின் ஒத்துழைப்புடன் நேற்றுமுன்தினம் இரவு மகேந்திரா வாகனம் மூலமாக யாழ்ப்பாணத்துக்கு சட்டவிரோதமாகக் கடத்திச்செல்லும் முயற்சியில் குறித்த குழு இறங்கியுள்ளது.

இதன்படி குறித்த திருட்டுக் குழு நேற்று இரவு



8 மணியளவில் 6 ஆடுகளை குறித்த வாகனத்தில் ஏற்றும் சந்தர்ப்பத்தில் அதைச் சிலர் கண்டு சந்தேகித்து சம்பவம் தொடர்பில் ஊரிலுள்ள முகியஸ்தர்கள் மற்றும் பொலிஸாருக்கு தகவல் கொடுத்ததுடன் அந்தத் திருட்டு முயற்சியில் ஈடுபட்டவர்களைப் பிடிக்கும் முயற்சியிலும் ஈடுபட்டனர்.

இந்நிலையில், சம்பவம் தொடர்பில் கேள்வியுற்ற ஆடுகளைப் பறிகொடுத்த உரிமையாளர்கள் சம்பவ இடத்துக்கு சென்றிருந்த நிலையில், அங்கிருந்த மக்களது ஒத்துழைப்புடன் களவாகப் பிடிக்கப்பட்டு கடத்திச் செல்ல வாகனத்தில் ஏற்றப்பட்ட 6 ஆடுகள், மகேந்திரா வாகனம் மற்றும் இரண்டு சந்தேக நபர்களையும் பிடித்துள்ளனர். குறித்த சம்பவத்துடன் தொடர்புபட்டிருந்த மற்றுமொருவர் தப்பியோடியுள்ள நிலையில், பிடிபட்ட இருவரையும் பொதுமக்கள் நையப்புடைத்த பின்னர், பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

தீவகப் பகுதியில் கட்டாக்காலி கால்நடைகள், வளர்ப்பு கால்நடைகள் என நாளாந்தம் பல கால்நடைகள் களவாடப்படுவதும் இறைச்சிக்காக கொல்லப்படுவதுமான சம்பவங்கள் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் நிலையில், அது தொடர்பில் பாதிக்கப்பட்ட தரப்பினர் துறைசார் தரப்பினருக்கு முறையிட்டும் கூட அத்திருட்டுச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த முடியாது திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் வேலணை பொதுமக்களாகிய தாம் ஒன்றிணைந்து குறித்த திட்டமிட்டுத் திருடும் திருட்டுக் குழுவைச் சேர்ந்த இருவரைக் கையும் களவுமாகப் பிடித்துள்ளாமையானது மக்கள் மத்தியில் குறித்த திருட்டுச் சம்பவங்களுக்கு தீர்வை எட்டமுடியுமென்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவித்தனர். இதனிடையே குறித்த இரு சந்தேக நபர்களுடன் 06 ஆடுகள் மற்றும் மகேந்திரா வாகனமும் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்துக்கு கொண்டுசெல்லப்பட்டதுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளதாகவும் சந்தேக நபர்களுடன் சான்றுப் பொருட்களும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் முக்கிய சூத்திரதாரிகள்: உதவியவர்கள் யார் என்பதை வெளிப்படுத்துங்கள்!

### கத்தோலிக்க ஆயர் பேரவை வேண்டுகோள்

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் முக்கிய சூத்திரதாரிகள் மற்றும் அந்தக் கொடூரமான செயலுக்கு உதவியவர்கள் யார் என்பதைக் கண்டறிவது அவசரமான விடயமென இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை தெரிவித்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினம் குறித்த தனது விசேட செய்தியிலேயே கத்தோலிக்க ஆயர் பேரவை இதனைத் தெரிவித்துள்ளது.

2025ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்துடன் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் இடம்பெற்று ஆறு வருடங்களாகின்றன எனத் தெரிவித்துள்ள கத்தோலிக்க ஆயர் பேரவை, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் குறித்து சுயாதீனமான பக்கச்சார்பற்ற விசாரணைகளை உறுதிசெய்வதற்காக அரசாங்கம் சில சாதகமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது எனக் குறிப்பிட்டுள்ளது.



இதுவரை எடுக்கப்பட்ட முயற்சிகளை நாங்கள் வரவேற்கும் அதேவேளை, விசாரணையின் இறுதி நோக்கம் குற்றவாளிகள் யார், அவர்களுக்கு உதவியவர்கள் யார் என்பதை வெளிப்படுத்துவதாகயிருக்கவேண்டுமென வலியுறுத்துவதாக கத்தோலிக்க ஆயர்கள் பேரவை தெரிவித்துள்ளது.





**தனது பிறந்ததினத்தை யொட்டி நாமல் ராஜபக்ஷ எம்.பி. தெவட்டகஹ பள்ளிவாசலுக்குச் சென்று ஆசி பெற்றார்.**

## கண்டி...

யாத்திரைக்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பக்தர்கள் 20 இலட்சத்துக்கும் அதிகளவானோர் தரிசிக்க வருகை தருவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆதலால், இக்காலப்பகுதியில் ஸ்ரீ தலதா மாளிகை வளாகத்தின் பாதுகாப்பு, பக்தர்களின் பாதுகாப்புக்காக இலங்கைப் பொலிஸாரால் விசேட பாதுகாப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய, பொதுமக்களை சோதனையிடுதல், பொதுப் போக்குவரத்துக் கட்டுப்பாடு, வீதிப் பாதுகாப்புக் கடமைகளில் பொலிஸார் ஈடுபடுத்தப்படுவதுடன், மேலும் பொலிஸ் உயர் பதவிநிலை உத்தியோகத்தர்கள் 35 பேரின் கண்காணிப்பின் கீழ் 10,000 க்கும் அதிகமான பொலிஸ் உத்தியோகத்தர்களை கடமையில் ஈடுபடுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

ஸ்ரீ தலதா யாத்திரைக்காக பக்தர்கள் வருகைதரும் வாகனங்கள் கண்டி நகருக்குள் வருகைதரும்போது நகரத்தினுள் தேவையற்ற வாகன நெரிசல்கள் ஏற்படுவதால் அதனைக் குறைக்கும் வகையில் நேற்று (17)முதல் வாகனங்களை நகரத்துக்குள் செல்வதைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ தலதா யாத்திரைக்காக வாகனங்களில் வருகைதரும் பக்தர்களின் வாகனங்களை பின்வரும் இடங்களில் நிறுத்திவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், பக்தர்களின் வசதிகளுக்காக வாகனங்களை நிறுத்திவைத்துள்ள இடங்களிலிருந்து பொதுப் போக்குவரத்துச் சேவையினூடாக சலுகையுடன் கூடிய கட்டணம் அறவிடப்பட்டு தலதா மாளிகை வரை போக்குவரத்துச் சேவைகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

கம்பளை மற்றும் கொழும்பிலிருந்து வருகைதரும் வாகனங்களை கெட்டம்பே சந்தியில் நிறுத்திவைத்து அவ்வாகனங்களை கெட்டம்பே விளையாட்டு மைதானம் மற்றும் கன்னொருவ வீதியில் நிறுத்தி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குருநாகல் - கட்டுகஸ்தோட்டை வீதியினூடாக வருகைதரும் வாகனங்களை 04 ஆவது கட்டை அருகில் நிறுத்தி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ தலதா யாத்திரை நடத்தப்படும் காலப் பகுதிகளில் பின்வரும் இடங்களில் வீதித் தடைகள் போடப்பட்டுள்ளன.

★ வில்லியம் கோபல்லாவ மாவத்தை ஹிரஸ்ஸகல சந்தி.

சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தை கெட்டம்பே விளையாட்டு மைதானம் வாயில் அருகாமையில்,

மஹயியான் வேவெல்பிட்டிய விளையாட்டு மைதானம் அருகில்

★ லேவெல்ல பாலம்

தென்னகும்புர வீதித் தடை

கட்டுகஸ்நோட்டை பாலத்தின் அருகாமையில்

கடுகண்ணாவை வீதித் தடை

தொடம்வல பாலத்தின் அருகாமையில்

ஹந்தானை வீதி IFS நிறுவனத்தின் அருகில்

★ பொல்கொல்ல வேல்ல அருகில்

போத்தலாபிட்டிய வீதித் தடை

பலகடுவ வீதித் தடை

திகன சந்தி

ஸ்ரீ தலதா யாத்திரைக்காக பக்தர்கள் வருகை தரும்போது வெள்ளை நிற ஆடைகளை அணிந்து வருமாறும் அதிகளவான பயணப் பொதிகள், கேமராக்கள், வீடியோ உபகரணங்கள் மற்றும் வேறு மின் உபகரணங்களை தலதா மாளிகையினுள் எடுத்துச் செல்வதை தவிர்க்குமாறும் கேட்கப்பட்டுள்ளனர். ஸ்ரீ தலதா மாளிகை யாத்திரையின் போது வருகைதரும் பக்தர்களின் பாதுகாப்பு போக்குவரத்துக் கட்டுப்பாட்டுக்காக கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான உதவிக்காக பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் பொலிஸ் மோப்ப நாய்கள் பிரிவு, இலங்கை முப்படையினர், கடற்படை மற்றும் விமானப் படையினர் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

## உஷ்...

தமிழ்ச் சமூகத்தில் மோசமான அபிப்பிராயத்தை தருமென்று கவலைப்பட்டுள்ளாராம் பிள்ளையான்.

இதேவேளை பிள்ளையானை சட்டத்தரணிகள் உட்பட வெளியார் சந்திப்பது வரையறுக்கப் படவுள்ளதாம்.

## தபால்...

மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எனினும், தபால் மூல வாக்களிப்புக்காக ஒதுக்கப்பட்ட மேலதிக நாட்களான 28ஆம் மற்றும் 29ஆம் திகதிகளில் மாற்றம் ஏற்படுத்தப்படவில்லையென்றும் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

## கடன் அட்டைகளின்...

இலங்கையில் கடனட்டைகளின் பாவனை 2025ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

மத்திய வங்கி தரவுகளின் அடிப்படையில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 2,018,996ஆக இருந்த கடனட்டைகளின் பயன்பாடு பெப்ரவரி மாதம் 2,020,766 ஆக அதிகரித்துள்ளது. இது 0.1 சதவீத அதிகரிப்பாகும்.

அத்துடன், இந்த ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் பாவனையிலுள்ள கடனட்டைகள் 0.6 சதவீதம் அதிகரிப்பைப் பதிவுசெய்துள்ளது.

## 4,15,937...

2025.04.21 ஆம் திகதி 112 உள்ளூராட்சி மன்றங்களுக்காக 2,32,558 தபால்மூல வாக்குச் சீட்டுகள் விநியோகிக்கப்படவுள்ளன என்றும் குறிப்பிட்டுள்ளது.

வாக்கெடுப்பு நடத்தப்படுவதற்குரிய 339 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் உரியவாறு அனைத்து வாக்காளர்களுக்கும் விநியோகிப்பதற்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் 2025.04.16 ஆம் திகதி தபாலகங்களுக்குக் கையளிக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் நாட்களில் அந்த வாக்காளர் அட்டைகள் வீடுகளுக்கு விநியோகிக்கப் படவுள்ளன எனவும் 2025.04.29 ஆம் திகதியன்று வாக்காளர் அட்டைகள் கிடைக்கப் பெறாவிடின் தமது வதிவிடத்துக்குரிய தமது வாக்குப் பதிவு செய்யப்பட்டுள்ள பிரதேசத்துக்குரிய தபால் அலுவலகத்துக்குச் சென்று அது பற்றி விசாரிக்க முடியுமெனவும் தேர்தல்கள் ஆணைக்குழுத் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தலதா யாத்திரையை முன்னிட்டு பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடும் முப்படையினருக்கான வாக்களிப்புக்காக கண்டி மகளிர் உயர் பாடசாலையில் விசேட ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## மன்னார்...

மன்னார் மற்றும் இராமேஸ்வரமிடையே படகுச் சேவைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படுமென்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நேற்று வியாழக்கிழமை (17) தெரிவித்தார்.

மன்னார் பசார் பகுதியில் இடம்பெற்ற தேசிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் மன்னாரிலிருந்து தமிழ்நாடு, இராமேஸ்வரத்துக்கான பயணிகள் படகுச் சேவையை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இதற்கான பேச்சுவார்த்தைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

மேலும் மன்னாரில் காற்றைக்கொண்டு மின் உற்பத்தி செய்யக்கூடிய வசதிகள் அதிகமாகக் காணப்படுகின்றன. ஆனால், கடந்த காலங்களில் சூழல் பாதுகாப்பைக் கருத்திற்கொள்ளாமல் குறித்த திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

இந்தநிலையில் , குறித்த திட்டங்கள் அனைத்தும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

எதிர்காலத்தில் மக்களின் கருத்துகளை அறிந்துகொண்டு, சூழலுக்கு பாதிப்பேற்படாத வகையில் குறித்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன், எதிர்வரும் ஜூன் மாதம் முதல், மேலதிகமாக 4 இலட்சம் நபர்களுக்கு அஸ்வெசும நிவாரணம் வழங்கப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த கூட்டத்தில் கடற்றொழில் அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகரன், பாராளுமன்ற உறுப்பினர்களான ஜெகதீஸ்வரன், திலகநாதன் மற்றும் மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர சபை, மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு ஆகிய பிரதேச சபைகளின் வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## சீனாவின்...

இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் கூறியதாவது,

''இடைநிறுத்தப்பட்ட 76 சீனத் திட்டங்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு எமது அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இந்நிலையில், இடைநிறுத்தப்பட்ட தெல்தெனிய நீர்ப்பாசனத் திட்டத்தை மீள ஆரம்பிப்பதற்கு சீனா இணக்கம் தெரிவித்துள்ளது.

பொருளாதார வீழ்ச்சியால் நாட்டில் ஆரம்பிக்கப்பட்ட பல்வேறு வெளிநாட்டுத் திட்டங்கள் இடைநடுவே கைவிடப்பட்ட நிலையில், தற்போது இடைநிறுத்தப்பட்ட 11 ஜப்பானிய திட்டங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சீன அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டு வந்த கடவத்தை – மீரிகம அதிவேக நெடுஞ்சாலைத் திட்டம் இடைநிறுத்தப்பட்டதால் நாளொன்றுக்கு ரூ.21 மில்லியன் நட்டஈடாக செலுத்தவேண்டி ஏற்பட்டது.

தற்போது நாட்டின் பொருளாதாரம் ஸ்திரத்தன்மையை அடைந்துள்ள நிலையில், இடைநிறுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் மீள ஆரம்பிக்கப்படவுள்ளன. கடந்த 5 முதல் 6 வருட காலமாக எவ்வித அபிவிருத்தித் திட்டங்களும் முன்னெடுக்கப்படவில்லை. இப்போது இந்தியாவின் திட்டங்களையும் இங்கே செயற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இந்நிலையில், தற்போது மீண்டும் பல்வேறு புதிய அபிவிருத்தித்திட்டங்களை முன்னெடுத்து நாட்டை தொழில்தளமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

30 ஆயிரம் பேர் அரச சேவையில் இணைக்கப்படுவர். அரச சேவைக்கு தமிழ் மொழி பணியாளர் பற்றாக்குறை உள்ளது. தமிழ் மொழி பேசுவோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். பொலிஸ் திணைக்களத்துக்கு 2,000 பேர் இணைக்கப்படுவர். இதில் குறைந்தபட்சம் 500 பேர் தமிழ் பிரஜைகள் இருக்க வேண்டும். கடற்படை , விமானப்படை போன்றவற்றுக்கும் தமிழ் இளைஞர்கள் தேவை. தேவையற்ற விரயங்களை நிறுத்தியிருக்கிறோம். காங்கேசன்துறையிலுள்ள ஜனாதிபதி மாளிகை எனக்குத் தேவையில்லை. அது இந்த மக்களுக்கும் தேவையில்லையென்று நினைக்கிறேன். வீதி அபிவிருத்திக்கு இங்கு பெருமளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மீனவர் பிரச்சினை குறித்து நான் இந்தியப் பிரதமருடன் கலந்துரையாடினேன்.

இங்குள்ள வளம் இங்குள்ளவர்களுக்குச் சொந்தமானது. எமது மீன் வளத்தைப் பாதுகாக்கத் தேவைப்படும் எல்லா நடவடிக்கைகளையும் எடுக்குமாறு நான் எமது கடற்படையினரைப் பணித்துள்ளேன். எமது நாட்டு மக்கள் வெளியேறி - கலவரங்களால் பாதிக்கப்பட்டு வெளியேறியோர் இப்போது வெளிநாடுகளில் சிறந்த முறையில் தொழிலதிபர்களாக இருக்கின்றனர். அவர்கள் இங்கே வரவேண்டும். அவர்களை இங்கே வருமாறு அழைக்கிறேன்.

நாட்டில் சட்டம், ஒழுங்கு இப்போது முறையாக இருக்கின்றன. அதனால்தான் பொலிஸ் மா அதிபராக இருந்தவரே பொலிஸுக்கு பயந்து ஓடி ஒளிகிறார். திருடர்கள் எவரையும் நாங்கள் பாதுகாக்கப்போவதில்லை. உள்ளூராட்சி மன்றங்களில் தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தால் நாங்கள் உடனடியாக நிதி ஒதுக்குவோம். ஏனெனில், நாங்கள் திருடமாட்டோம். ஆனால், வேறு யாரும் சபைகளுக்கு வந்தால் நாங்கள் பார்த்துத்தான் நிதி ஒதுக்குவோம். ஏனெனில், அவர்கள் திருடுவார்கள். அதுதான் வரலாறு. கொங்கிரீட் வீதிகளுக்கு பணம் எப்படி செலவழித்தார்கள் என்பது சகலருக்கும் தெரியும். எனவே, மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும்''- என்று ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

## பிள்ளையான்...

சூழ்நிலையில் சி.ஐ.டியின் விசேட குழுவொன்று மட்டக்களப்புக்கு விரைந்து அங்கு முக்கிய தகவல் சேகரிப்பில் ஈடுபட்டுள்ளது. பிள்ளையான் புலிகளிடம் இருந்து பிரிந்து வந்து மாதுறு ஓயா இராணுவ முகாமில் படைகளின் பாதுகாப்புடன் தங்கியிருந்துகொண்டு ஆட்கடத்தல் மற்றும் கொலைகளைப் பின்னின்று இயக்கினாரா என்பது குறித்தும் அது தொடர்பான ஆதாரங்கள் உள்ளனவா என்பது பற்றியும் மேற்படி சி.ஐ.டி. குழு துப்புத் துலக்கி வருகிறது. பிள்ளையான் தொடர்புபட்டார் என்று சொல்லப்படும் ஆட்கடத்தல் சம்பவங்கள், மிரட்டல் மற்றும் கப்பம் பெற்றமை தொடர்பில் அரசியல் சமூகத்தைச் சார்ந்த பிரமுகர்கள் சிலர் சில ஆவணங்களை இந்த சி.ஐ.டி. குழுவிடம் வழங்கியுள்ளதாகவும் அறியமுடிந்தது.

அம்பாறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் மனித உரிமை ஆர்வலருமான மாமனிதர் அரியநாயகம் சந்திரநேரு 07.02.2005 அன்று மட்டக்களப்பு இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியான புனானைப் பகுதியில் வைத்து கொல்லப்பட்ட சம்பவம் குறித்தும் பல முக்கிய தகவல்கள் மேற்படி சி.ஐ.டி. குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளதாக அறியமுடிந்தது. முக்கியமான தகவல்களைத் திரட்டும் மேற்படி குழு கொழும்பு திரும்பிய பின்னர் பிள்ளையானுக்கெதிராக மேலும் பல புதிய வழக்குகளை தாக்கல் செய்யவுள்ளதாகவும் தெரியவருகிறது.

## அநுரவிடம்...

இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் விடுவிக்கப்படாத காணிகள் தொடர்பாக வலி.வடக்கு காணிகள் விடுவிப்புக்கான அமையம் என்ற அமைப்பின் ஏற்பாட்டில் வசாவிளான் சந்தியில் ஊடகவியலாளர் சந்திப்பொன்று இடம்பெற்றது.

ஊடகவியலாளர் சந்திப்பு ஆரம்பிப்பதற்கு முன்னதாக அங்கு வந்த பலாலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் ஊடக சந்திப்புக்கு வந்திருந்தவர்களுடன் தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

இது உயர் பாதுகாப்பு வலயமெனவும் இங்கு கூட்டம் கூட முடியாதெனவும் ஊடக சந்திப்பு ஏற்பாட்டாளர்களுடன் பலாலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி முரண்பாட்டில் ஈடுபட்டார்.

எமது காணிகள் விடுவிப்பை வலியுறுத்தி ஊடக சந்திப்பை நடத்தவே தாம் வந்ததாகவும் போராட்டத்தில் ஈடுபடவில்லையென்றும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து அங்கு ஊடக சந்திப்புக்கு வந்திருந்தவர்களின் தேசிய அடையாள அட்டையை வாங்கி பெயர்களைப் பதிவு செய்த பொலிஸார் அங்கு ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தவர்களை காணொளி மற்றும் புகைப்படங்களை எடுத்து அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டனர். காணொளியை எடுத்த ஊடகவியலாளர்களையும் பொலிஸார் மற்றும் பொலிஸ் புலனாய்வாளர்கள் அச்சுறுத்தும் வகையில் காணொளி எடுத்தனர்.

ஊடகவியலாளர் சந்திப்பை முடித்து விரைவாகச் செல்லுமாறு அங்கு வந்திருந்தவர்களுடன் பொலிஸார் தொடர்ச்சியாகத் தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

## தங்கத்துக்கு...

தகவல்களின்படி, நேற்று செட்டியார் தெரு தங்க சந்தையில் 22 கரட் ஒரு பவுண் தங்கத்தின் விலை 2,42,000 ரூபாவாகவும் 24 கரட் ஒரு பவுண் தங்கத்தின் விலை 2,62,000 ரூபாவாகவும் உச்சத்தை எட்டியுள்ளது.

நேற்றுமுன்தினம் (16) இலங்கைச் சந்தையில் 22 கரட் ஒரு பவுண் தங்கத்தின் விலை 2,38,300 ரூபாவாகவும் 24 கரட் ஒரு பவுண் தங்கத்தின் விலை 2,59,000 ரூபாவாகவும் காணப்பட்டது.

## வேட்பாளர்கள்...

அதே காலகட்டத்தில் கட்சி ஆதரவாளர்கள் 62 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அத்துடன், 14 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

## திரவப் பால்...

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் திரவப் பால் மற்றும் தயிர் ஆகியவற்றுக்கு வற் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, ஏப்ரல் 11 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் திரவப் பால் மற்றும் தயிர் மீதான வற் வரி நீக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிவிப்புக்கமைவாக, புதிய பால் குறைந்தபட்சம் நூற்றுக்கு 50 சதவீதம் இருக்கவேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது.

வற் வரி திருத்தச் சட்டமூலம் ஏப்ரல் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இதற்கு சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன ஏப்ரல் 11 ஆம் திகதி கையெழுத்திட்டு அனுமதி அளித்தார்.

அதன்படி, தொடர்புடைய சட்டம் குறித்த திகதியில் அமுலுக்கு வந்ததிலிருந்து, உள்நாட்டு இறைவரித் திணைக்களம் பல வரித் திருத்தங்களைச் செயற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

திரவப் பால் மற்றும் தயிர் தவிர, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் மின்சார உற்பத்திக்காக இலங்கை மின்சார சபைக்கு வழங்கப்படும் நாப்தா மீதான வற் வரியும் நீக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

புதிய வரி திருத்தத்துக்கமைவாக வெளிநாடு வாழ் தனிநபர்கள் வழங்கும் டிஜிட்டல் சேவைகளுக்கு வற் வரியை விதிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, ஒக்டோபர் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் வெளிநாட்டு நபர்கள் இலங்கை தனிநபர்களுக்கு மின்னணு தளங்கள் மூலம் வழங்கும் சேவைகளுக்கு வற் வரி பொருந்துமென்று உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும், வணிக நோக்கங்களுக்காக பொருட்களை இறக்குமதி செய்யும் அல்லது ஏற்றுமதி செய்யும் அனைத்து நபர்களும் வற் வரி திருத்தச் சட்டத்தின் கீழ் பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

## தினசரி பலாபலன்கள்

**விசுவாவசு வருடம் சித்திரை மாதம் 05ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**மேஷம்** எதற்கும் அவசரம் வேண்டாம். தேவையற்ற டென்ஷனால் மனதையும் உடலையும் கெடுத்துக்கொள்ளாதீர்கள்.

**ரிஷபம்** இன்று உங்கள் உழைப்புக்கு முக்கியத்துவம் கொடுக்காவிட்டால் பொருளாதாரச் சிக்கல்களைச் சந்திப்பீர்கள்.

**மிதுனம்** சுயதொழில் மூலம் நன்மைகள் இலாபங்கள் உண்டு. உடல், மன நோய்களால் சற்றுத் தொந்தரவுகள் உண்டு.

**கடகம்** வீணான மனக் கவலைகளை விட்டு அமைதியுடன் இருங்கள். பயணங்களைக் குறைத்துக்கொள்வது நல்லது.

**சிம்மம்** யாரையும் நம்பி புதிய தொழில் வியாபாரங்களில் இறங்க வேண்டாம். வாகனப் பயணங்களில் கவனம் வேண்டும்.

**கன்னி** உங்கள் தேவைக்காகப் பணம் கிடைக்கும். மனத் துணிவுடன் உங்கள் காரியங்களில் வெற்றி கொள்வீர்கள்.

**துலாம்** யாருக்கும் வாக்களிக்காதீர்கள். கடன் கொடுப்பது, பெறுவதுசில பிரச்சினைகளை ஏற்படுத்தும். எச்சரிக்கை வேண்டும்.

**விருச்சிகம்** மனதில் ஒருவித பய உணர்வு, படபடப்பு தோன்றும். வீண் டென்ஷன் வேண்டாம். பொறுமையாக இருங்கள்.

**தனுசு** தேவையற்ற பயணங்களையும் செலவுகளையும் குறைத்துக் கொள்ளுங்கள். வீண் டென்ஷன் வேண்டாம்.

**மகரம்** தொழில் வியாபார அதிர்ஷ்டங்களை அடைவீர்கள். நினைத்த காரியத்தை வெற்றியுடன் நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்** நீங்கள் தொழிலில் எதிர்பார்த்த நன்மைகள், உயர்வுகள் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டு.

**மீனம்** தடைப்பட்டிருந்த பயணத்தால் நன்மைகளை அடைவீர்கள். மனதை மகிழ்விக்கும் பல சம்பவங்கள் நடந்தேறும்.

**திதி:** பஞ்சமி பி.ப.5.07 வரை பின் சஷ்டி
**நட்சத்திரம்:** கேட்டை மு.ப.8.21 வரை பின் மூலம்
**பிறை:** தேய்பிறை
**யோகம்:** மரண யோகம் மு.ப.8.21 வரை பின் அமிர்த யோகம்
**வார சூலை:** மேற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது.
**நல்ல நேரம்:** காலை 6.00 – 9.00 மணி வரை
காலை 10.00 – 10.30 மணி வரை
பகல்1.00 – 3.00 மணி வரை மாலை 5.00 – 6.00 மணி வரை
**ராகு காலம்:** 10.30 – 12.00 மணி வரை
**எமகண்டம் :** 3.00 – 4.00 மணி வரை
**குளிகை :**7.30 – 9.00 மணி வரை
**சந்திராஷ்டமம்:** மேஷ-இடப ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும்
(முற்பகல் 8.21 மணி வரை மேஷ ராசியினருக்கு)

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**

**இன்று முற்பகல் 8.21 மணி வரை**
அஸ்வினி, பரணி, ரோஹிணி, திருவாதிரை, பூசம், மகம், பூரம், அஸ்தம், சுவாதி, அனுஷம், மூலம், பூராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி
இன்று முற்பகல் 8.21 மணிக்கு மேல்
பரணி, கார்த்திகை, மிருகசீரிடம், புனர்பூசம், ஆயிலியம், பூரம், உத்திரம், சித்திரை, விசாகம், கேட்டை, பூராடம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, ரேவதி

**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கும் தொழில், வியாபார இலாபங்கள், கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும். அதிர்ஷ்டம், சுகம் உண்டு.**

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**



(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325 078-6759739

# அடுத்த போகத்துக்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளபோதும் விவசாயிகளுக்கு இதுவரை உரமானியம் வழங்கப்படவில்லை

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சாடல்







''எமது நாட்டில் ஆட்சிக்கு வந்துள்ள ஜே.வி.பி. அரசாங்கம் மக்களை ஏமாற்றி தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளை மீறி நடந்து வருகிறது. ஒட்டுமொத்த 2.2 மில்லியன் மக்களையும் ஏமாற்றி வருவதை மக்கள் இன்று நன்கு உணர்ந்துள்ளனர். விவசாயப் பகுதிகளில் அடுத்த போகத்துக்குரிய பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இருந்தபோதிலும் உர மானியம் இதுவரை அவர்களுக்கு கிடைக்கவில்லை. பயிர்ச்சேதங்களுக்கு இழப்பீடுகளோ கிடைக்கவில்லை. யானை-மனித மோதலினால் பாதிக்கப்பட்ட மக்களின் பயிர்கள், உடைமைகள் மற்றும் உயிர்ச் சேதங்களுக்கு இன்னும் இந்த அரசாங்கம் தீர்வு காணவில்லை''- என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டு பொலனறுவை தேர்தல் தொகுதியில் நேற்று (17) இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

''இம்முறை உரங்களின் விலையும் அதிகரித்து வரும் சூழ்நிலையில், விவசாயிகளைத் தூக்கி விடுவோம், விவசாயிகளைப் பாதுகாப்போம், விவசாயியைக் கடவுளாகக் கருதுகிறோம் என்று கூறிய திசைகாட்டி தலைமையிலான மக்கள் விடுதலை முன்னணியினர் ஒட்டுமொத்த விவசாய சமூகத்தினரையும் அழிக்கும் கொள்கையை முன்னெடுத்து வருகின்றனர்.

இன்று மக்கள் வாழமுடியாத அளவுக்கு பொருட்களின் விலைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. பொருட்களின் விலைகள் தாறுமாறாக அதிகரித்துள்ளன. பொதுமக்களுக்கு ஒன்றும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மூன்று வேளை உணவு கூட சாப்பிட முடியாத நிலையை நாடு எட்டியுள்ளது. அத்தியாவசிய உணவு மற்றும் பாடசாலைப் பொருட்களுக்கான VAT வரிகளும் விதிக்கப்பட்டுள்ளன. மேலும், அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அரிசி, பால் மா, தேங்காய், உப்பு ஆகியவற்றின் விலைகளும் தாறுமாறாக அதிகரித்துள்ளன.

இவ்வாறான நிலையில், ஜனாதிபதி, திசைகாட்டிக்கு அதிகாரம் கிடைக்காத சபைகளுக்கு நிதியொதுக்க மாட்டோம் எனக் கூறி மக்களை ஏமாற்றி வருகின்றார். பொய், ஏமாற்று அடிப்படையிலான அரசியலுக்கு அதிக ஆயுட்காலம் இல்லை. மின்கட்டணத்தை 33% குறைப்போம் என்று இந்த ஆளும் தரப்பினர் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் கூறினர். மக்கள் எழுச்சியால் தான் 20% கூட மின்கட்டணம் குறைக்கப்பட்டது. அரசாங்கம் தீர்மானம் எடுத்து இதனை நிறைவேற்றவில்லை. மக்களின் கருத்துகளுக்கேற்ப இது குறைக்கப்பட்டது. எஞ்சிய 13% குறைப்பை இந்த அரசாங்கம் விரைந்து எடுக்கவேண்டும். எரிபொருள் விலைகள் தொடர்பில் அரசாங்கம் இவ்வாறான கொள்கைகளைப் பின்பற்றி வருகிறது. புதிய அரசாங்கத்தில் மக்கள் கண்ட பயன் எதுவும் இல்லை. சுத்த பொய்களைக் கொண்டு மக்களை ஏமாற்றி வரும் இந்த அரசியலைக் கண்டு மக்கள் ஏமாந்துவிடக் கூடாது''- எனவும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்தார்.

# தமிழ்த் தேசியம் என்பது வெற்றுக்கோஷமல்ல; அதுவே எமது இருப்பின் அடிப்படையாகும்

## சிறீதரன் எம்.பி. சுட்டிக்காட்டு





''இலங்கைத் தீவின் சுதேசிய இனமான ஈழத் தமிழினத்தின் பண்பாடு, மொழி, கலை, கலாசார, மரபியல்களையும் இனத்துவ உரிமைகளையும் பாதுகாக்கவல்ல அரசியல் கட்டமைப்பான தமிழ்த் தேசியமே எமது இருப்பின் அடிப்படையாகும்'' - என பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலை முன்னிட்டு பூநகரி பிரதேச சபையின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

''ஈழத் தமிழினத்தின் இருப்புக்கான அடிப்படையான தமிழ்த் தேசியத்தை அடியோடு சிதைத்தழிக்கும் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலில் இயங்குபவர்கள், தமிழ்த் தேசியத்தை வெற்றுக் கோஷமென வரையறை செய்வதைக் காண்கிறோம். தனது இருப்பை நிலைநிறுத்தும் தமிழினத்தின் அடியாதாரமே அதுதான் என்பதை இந்தத் தேர்தலின் முடிவுகளே உறுதிசெய்யும்'' - என்றார்.

கரியாலைநாகபடுவான் வட்டார வேட்பாளர் பத்மசேனன் லிடான்ரியூடர் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் பூநகரி பிரதேச சபையின் மேனாள் தவிசாளரும் வேட்பாளருமான சிவகுமாரன் ஸ்ரீரஞ்சன், இரணைதீவு வட்டார வேட்பாளர் பிலிப்றெஜினோல்ட் நிவிந்தன் ஆகியோர் உரையாற்றியிருந்ததுடன் குறித்த வட்டாரத்தின் வேட்பாளர் சுகந்தி சிவகுமார் உட்பட கட்சியின் வட்டாரக்கிளை உறுப்பினர்கள், செயற்பாட்டாளர்கள், ஆதரவாளர்கள் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் இதுவரை 176 முறைப்பாடுகள்

## பொலிஸ் திணைக்களம் தெரிவிப்பு

உள்ளூராட்சித் தேர்தல்கள் தொடர்பாக இதுவரை 176 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவற்றில் 38 முறைப்பாடுகள் குற்றச்செயல்களுடன் தொடர்புடையவை, 138 முறைப்பாடுகள் தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பானவை.

இதேவேளை, தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் உட்பட 80 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# கண்டி தலதா கண்காட்சியை பார்வையிட மாற்றுத் திறனாளிகளுக்கு விசேட ஏற்பாடு

**(எம்.ஏ.அமீனுல்லா)**

மாற்றுத்திறனாளிகள் எவ்வித சிரமமுமின்றி தலதா கண்காட்சியைப் பார்வையிடுவதற்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சுதத் மாசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்காக 100 சக்கரநாற்காலிகள் தயார் செய்யப்பட்டுள்ளதாகவும் மாற்றுத்திறனாளிகள் வந்தால் ஸ்ரீ தலதா மாளிகைக்குச் சொந்தமான மின்சார வாகனங்களில் தலதா மாளிகை வளாகத்துக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து சக்கர நாற்காலிகளில் ஏற்றி ஸ்ரீ தலதா மாளிகை தரிசனம் நடக்கும் பிரித் மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்படுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

கண்டியிலுள்ள பிரதிப் பொலிஸ் மா அதிபர் காரியாலயத்தில் நேற்று (17) நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரையாற்றிய மத்திய மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சுதத் மாசிங்க,

''ஸ்ரீ தலதா மாளிகையின் தியவதன நிலமே உள்ளிட்ட ஏற்பாட்டுக் குழுவினர் இவ்விடயம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி அதற்கான வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

மேலும், பௌத்த மதகுருக்களுக்கு வழமையான வரிசைகளின்றி தந்தத்தைத் தரிசிக்கும் வாய்ப்பும் கிடைக்குமெனத் தெரிவித்துள்ள சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர், மகா சங்கத்தினர் உட்பட அனைவரும் தலதா மாளிகை வளாகத்துக்குள் நுழைவதற்கு முன் இரண்டு தடவைகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்களெனவும் இதற்குத் தேவையான ஆதரவை வழங்குமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கின்றேன்''- எனவும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

# மக்களுக்காக தன்னை அர்ப்பணித்து செயற்படுவது ரௌடித்தனம் எனில் நானும் ரௌடி என்பதில் மகிழ்ச்சி

## கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு





மக்களுக்காக தன்னை அர்ப்பணித்து செயற்படுவதுதான் ரௌடித்தனம் எனில், நானும் ரௌடி என்பதில் மகிழ்ச்சி என்று கடற்றொழில் மற்றும் நீரியல், கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையில் யாழில் நேற்று (17) நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இந்நிகழ்வில், தேசிய மக்கள் சக்தியின் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், ஜெ.ரஜீவன், ஸ்ரீ பவானந்தராஜா, யாழ்.மாநகர சபையின் வேட்பாளர் சு.கபிலன் மற்றும் அமைப்பாளர்கள், வேட்பாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"கடந்த காலங்களில் இலஞ்ச, ஊழல், மோசடிகளில் ஈடுபட்ட நபர்களுக்கெதிராக சட்டம் செயற்படும். அவர்களின் முகவரி மகசின் சிறைச்சாலையென மாறுவது உறுதியாகும்.

முன்னாள் அமைச்சர்கள் மற்றும் முதலமைச்சர்களும் கம்பி எண்ணி வருகின்றனர்.

அதேபோல, படுகொலைகளில் ஈடுபட்டவர்கள், ஆட்கடத்தல்களில் ஈடுபட்டவர்களுக்கெதிராகவும் சட்டம் செயற்படும்.

நாம் இவ்வாறு செயற்படும்போது தேசிய மக்கள் சக்தி அரசியல் பழிவாங்கலில் ஈடுபடுவதாகக் கொக்கரிக்கின்றனர். எமக்கு எவருடனும் தனிப்பட்ட பிரச்சினை கிடையாது. குற்றமிழைத்தவர்களுக்கு மன்னிப்பும் கிடையாது. சட்டத்தை நாம் கையில் எடுக்கமாட்டோம். நீதிமன்றமூடாகவே அதற்குரிய பணி இடம்பெறும்.

வடக்கிலும் மண் கடத்தல்காரர்கள் உள்ளனர். ஆட்களைக் கடத்தியவர்கள் உள்ளனர். ஊடகவியலாளர்களைக் கொலை செய்தவர்கள் இருக்கின்றார்கள். மக்களின் காணிகளை அபகரித்தவர்கள் இருக்கின்றார்கள். இவர்களுக்கெதிராகவும் வெகுவிரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

மக்களின் நிம்மதியை சீர்குலைத்தவர்கள், தற்போது நடுங்க ஆரம்பித்துள்ளனர். சந்திரசேகரன் ரௌடி எனவும் கூறத்தொடங்கியுள்ளனர். என்னை ரௌடி என அழைப்பது மகிழ்ச்சி. மக்களுக்காக செயற்படுகின்றபோது, மக்களுக்காக குரல் கொடுக்கின்றபோது, மக்களுக்காக எம்மை அர்ப்பணிக்கின்றபோது அதைப் பார்த்து ரௌடித்தனம் என்கின்றனர்.

இதுதான் ரௌடித்தனமெனில் அதனை ஏற்றுக்கொள்ள நான் தயார். கடந்தகாலங்களில் ரணில் விக்கிரமசிங்கவின் கோப்புகளைத் தூக்கித் திரிந்தவர்கள்தான் இப்படிச் சொல்கின்றனர்.

புலிகள் அமைப்பு தடைசெய்யப்பட்டபோது அதனை வரவேற்றவர்கள், இன்றைக்கு தாங்கள்தான் புலிகள் அமைப்பின் அர்ப்பணிப்புமிக்க தலைவர்கள் எனக் கூறிக்கொள்கின்றனர். புலிகள் காலத்தில் துரோகி முத்திரை குத்தப்பட்டவர்கள் இவர்கள்" - என்றார்.

# உயிர்த்த ஞாயிறு தினத்தை முன்னிட்டு தேவாலயங்களுக்கு விசேட பாதுகாப்பு

உயிர்த்த ஞாயிறு தினத்தை முன்னிட்டு மத அனுஷ்டானங்களை நடத்தும் தேவாலயங்களுக்கு சிறப்பு பாதுகாப்பு நடவடிக்கைகளை இலங்கை பொலிஸார் ஏற்பாடு செய்துள்ளனர்.

இன்று வெள்ளிக்கிழமை (18) மற்றும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (20) சிறப்பு பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனவே, பக்தர்களின் பாதுகாப்புக்காக சிறப்பு பொலிஸ் பாதுகாப்பை செயற்படுத்துமாறு பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய அறிவுறுத்தியுள்ளார்.

இந்தக் காலகட்டத்தில் மக்கள் கூட்டம் அதிகமாக இருக்கும் தேவாலயங்களை அடையாளம் கண்டு அப்பகுதியில் பாதுகாப்பைப் பலப்படுத்துமாறு பதில் பொலிஸ் மா அதிபர் பொலிஸாருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக பொலிஸ், பொலிஸ் விசேட அதிரடிப்படை மற்றும் முப்படை வீரர்கள் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2025 ஏப்ரல் 18 ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலும் ஆளுங்கட்சியின் பிரசாரமும்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஆளும் தேசிய மக்கள் சக்தி வேட்பாளர்களுக்கு வாக்களிக்குமாறும் அவ்வாறு செய்யாவிட்டால் ஒதுக்கப்பட்ட நிதியைக் கையாள்வதில் தடைகள் ஏற்படுமென மிரட்டல் தொனியில் அமைச்சர்கள் தேர்தல் பிரசாரம் செய்வதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் விடுத்திருக்கும் அறிக்கை எமது கவனத்தை ஈர்த்திருக்கிறது.

மன்னாரில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்ட மத்திய சுற்றாடல் அமைச்சர் இந்த வருடம் வரவு - செலவுத்திட்டத்தில் இதுவரை எந்த அரசாங்கங்களும் செய்யாத அளவுக்கு வடக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்காக நிதி ஒதுக்கியுள்ளோம், இந்த நிதியை முறையாக அபிவிருத்திப் பணிகளுக்குப் பயன்படுத்தவேண்டுமாகவிருந்தால் தேசிய மக்கள் சக்தி அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும். அவ்வாறில்லாவிட்டால் இந்த நிதியைச் செலவழிப்பதில் தடைகள் ஏற்படலாம். ஆகவே மக்கள், தேசிய மக்கள் சக்தி வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டுமென்று தெரிவித்திருந்ததை சத்தியலிங்கம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது மிகமோசமான பிரசார யுக்தியாகும். ஒரு நாட்டின் அரசாங்கத்தால் மாகாணங்களின் அபிவிருத்திக்காக நிதியொதுக்கீடு செய்வது ஆட்சியிலுள்ள அரசாங்கத்தின் கடமையாகும். அதனை அவர்கள் தவிர்க்க முடியாது. அப்படிப் பார்த்தால் கடந்த 30 வருடங்களாக நடைபெற்ற கொடிய யுத்தத்தால் உட்கட்டுமானங்கள் நீண்டகாலமாக அபிவிருத்தி செய்யப்படாதுள்ளன.

அங்குள்ள மக்களின் தேவைகள் நாட்டின் ஏனைய மாகாணங்களில் வாழுகின்ற மக்களின் தேவையைவிட வேறுபட்டவை. ஆகவே, வடக்கு மாகாணத்துக்கு விசேடமாக அதிக நிதி ஒதுக்கீடுகளை இந்த அரசாங்கம் செய்திருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு நிதியொதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை. இந்த நிலையில், உங்களுக்கு அதிக நிதி ஒதுக்கியுள்ளோம், அதனை முறையாகப் பயன்படுத்த எங்களுக்கு மட்டுமே நீங்கள் வாக்களிக்க வேண்டுமென்று கூறுவதன் அர்த்தம் நீங்கள் வேறு யாருக்காவது வாக்களித்தால் அந்த நிதியை நாங்கள் விடுவிக்கமாட்டோம் என்றே அர்த்தப்படவேண்டியுள்ளது.

மத்திய அரசால் மாகாணங்களின் அபிவிருத்திக்காக ஒதுக்கப்படும் நிதியானது இந்த நாட்டின் அனைத்து பிரஜைகளுக்கும் சொந்தமானது. அதனை அனுபவிக்க அனைத்து மக்களுக்கும் உரிமையுள்ளது. அதுவே ஜனநாயகம். வரவு - செலவுத்திட்ட நிதி என்பது தேசிய மக்கள் சக்தியின் கட்சி நிதியோ ஜனாதிபதியின் சொந்த நிதியோ அல்ல. இந்த நாட்டு மக்களின் வரிப்பணத்திலிருந்து பெறப்படுகின்ற நிதியாகும். எனவே, இவ்வாறான மிரட்டும் தொனியிலான பாணியில் தேர்தல் பிரசாரம் செய்வதை தமிழ் மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்ற சத்தியலிங்கம் எம்.பியின் கூற்று நியாயமானது.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றங்களில் அதிகாரத்தைக் கைப்பற்றும் கட்சிகள் தொடர்பில் ஆராய்ந்து பார்த்தே குறித்த மன்றங்களுக்கு நிதி வழங்குவோமென ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க கருத்து வெளியிட்டிருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கண்டனம் தெரிவித்திருக்கிறார்.

இனம், மதம், சாதி, வர்க்கம், கட்சி வேறுபாடின்றி நாட்டு மக்களுக்கு சேவையாற்றுவதற்காகவே ஜனாதிபதி நியமிக்கப்படுகின்றார். அவ்வாறில்லாது ஜே.வி.பிக்கு மாத்திரம் சேவையாற்றுவதற்காக நியமிக்கப்படவில்லை. ஜனாதிபதியானவர் கட்சி, சாதி, இனம், மதம் பாராமல் அனைவருக்கும் சமமான சேவையை வழங்கவேண்டுமெனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கோரிக்கை விடுத்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வரும் தற்போதைய சந்தர்ப்பத்தில் ஜனாதிபதியினதும் ஆளுந்தரப்பினரினதும் தேர்தல்கால கருத்துகள் ஜனநாயக பண்புகளைக் கொண்டிராமல் இருப்பது ஏமாற்றமளிக்கிறது.கடந்தகால ஆட்சிகளை விமர்சித்து ஆட்சியைக் கைப்பற்றிய தற்போதைய ஆட்சியாளர், பழைய ஆட்சியாளர்கள் கூட நடந்துகொள்ளாத வகையில் மோசமாக செயற்படுவதை ஏற்க முடியாது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கடந்த ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களில் வெற்றிபெற்றாலும் எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் அது சவாலை எதிர்கொள்கிறது.மக்களுக்களித்த வாக்குறுதிகளை நிறைவேற்றமுடியாமல் தடுமாறும் தேசிய மக்கள் சக்தி அரசு என்ன விலை கொடுத்தாவது, எதனைச் செய்தாவது உள்ளூராட்சி மன்றங்களைக் கைப்பற்றிவிடவேண்டுமென எதிர்பார்க்கிறது. அதன்படி செயற்படுகிறது.

அதனால் கடந்தகால ஞானோபதேசங்களை மறந்து தெருச்சண்டியன் போல செயற்பட ஆரம்பித்துள்ளது இந்த அரசு. எப்படியோ மக்களின் தீர்ப்பு எல்லா நேரங்களிலும் ஒரே மாதிரி இருக்காதென்பதை ஆட்சியாளர் புரிந்துகொள்ளும் நாள் வெகு தொலைவில் இல்லையென்பதைக் கூறிவைக்க விரும்புகிறோம். நாட்டு மக்களின் அதிகபட்ச ஆதரவுடன் ஆட்சியைக் கைப்பற்றிய பெருந்தலைவர்கள் எல்லாமே மோசமான எதேச்சதிகாரத்தால் மண் கவ்வியதைக் கண்ட தேசமிது. அதனை இந்த ஆட்சியாளர்களும் கருத்திற் கொள்வார்களாக.

# மகிழ்ச்சியுடன் வாழ்வோம்

பிரித்தானியாவின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம், ஐ.நா.சபை, அமெரிக்காவின் முன்னணி கருத்துக்கணிப்பு நிறுவனமான கேலப் ஆகியவை இணைந்து உலகின் மகிழ்ச்சியான நாடுகள் பட்டியலை ஆண்டுதோறும் வெளியிட்டு வருகின்றன. அண்மையில் வெளியிடப்பட்டுள்ள இந்த ஆண்டுக்கான பட்டியலில் முதல் இடத்தை ஐரோப்பிய நாடான பின்லாந்து பிடித்துள்ளது. டென்மார்க் இரண்டாம் இடத்தையும் ஐஸ்லாந்து மூன்றாம் இடத்தையும் பிடித்துள்ளன.

ஒரு நாட்டின் மொத்த பொருளாதார உற்பத்தி, நோயற்ற ஆரோக்கியமான வாழ்க்கை, சுதந்திரம் உள்ளிட்டவற்றின் அடிப்படையில் மகிழ்ச்சியான நாடுகளின் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு தீவிரவாதம், அண்டை நாடுகளுடன் போர் போன்றவையும் ஒரு நாட்டு மக்களின் மன மகிழ்ச்சியைச் சிதைக்கும் காரணிகளாகும். மகிழ்ச்சியாக வாழும் மக்கள் உள்ள நாடுகளின் பட்டியலில் முன்னணியில் முதல் 20 இடங்களில் பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள் உள்ளன. இதற்குக் காரணம், ஐரோப்பிய நாடுகளில் உக்ரைன், ரஷ்யா நாடுகள் தவிர்த்து பிற நாடுகளில் பாரியளவில் உள்நாட்டுக் கிளர்ச்சி, அரசியல் ஸ்திரத்தன்மையின்மை, அண்டை நாடுகளுடன் மோதல் போக்கு ஆகியவை இல்லாததே. விதிவிலக்காக, ஆசிய நாடான இஸ்ரேல் தனது அண்டை நாடுகளுடன் பல ஆண்டுகளாக மோதல் போக்கைக் கடைப்பிடித்து வருகின்றபோதிலும் அந்நாடு மகிழ்ச்சியாக வாழும் மக்களைக் கொண்ட நாடுகளின் பட்டியலில் 8ஆம் இடத்தில் உள்ளது. இதற்குக் காரணம் அந்நாட்டு மக்களுக்கிடையே உள்ள புரிதலே எனத் தெரியவந்துள்ளது.

அடிக்கடி ஏற்படும் புயல், பூகம்பம் போன்ற இயற்கைச் சீற்றங்களை எதிர்கொள்ளும் நாடுகளில் மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்வது அரிது.

வருவாய்க்கேற்ற வகையில் திட்டமிட்டு செலவு செய்து வாழாமல் ஆடம்பரமாக வாழ்ந்து, தங்கள் மகிழ்ச்சியை மட்டுமல்லாது, தற்கொலை செய்வதன் மூலம் வாழ்க்கையையே தொலைத்தவர்கள் பலர். ஆடம்பரமாக வாழ்பவர்கள் எல்லாம் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என நாம் நினைத்தால் அது முற்றிலும் உண்மையல்ல. ஆடம்பரம் மிக்க வாழ்க்கைக்கு அவசிய தேவை அதிகப்படியான பணம் என்பதால் அதனைத் தேடியே இடைவிடாது ஓடிக்கொண்டிருப்பது, அவ்வாறு ஓடும் வேகத்தில் தம் நலன் விரும்பும் பெற்றோர், உறவினர், நண்பர்களையும் பல சமயங்களில் உதாசீனம் செய்யும் சூழல் உருவாகிவிடுகிறது. நமக்கு மனமகிழ்ச்சியைத் தரக்கூடியவர்களை பணயம் வைக்கும் இத்தகைய பணம் தேடும் ஓட்டம், கண்களை விற்று சித்திரம் வாங்குவதற்கு நிகரானதே!

மனதைக் கவரும் விளம்பரங்கள், இலகு தவணை முறையில் விற்பனை, கடன் தருவதற்காகக் காத்திருக்கும் நிதி நிறுவனங்கள் ஆகியவற்றால் அத்தியாவசிய தேவைக்கும் அதிகமானவற்றை வாங்கிக் குவிக்கும் நுகர்வோர் கலாசாரம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இச்சூழல் தற்காலிகமாக மகிழ்ச்சியைத் தந்தாலும் நீண்ட காலத் துயரத்தில் நம்மைத் தள்ளிவிடுகின்றன என்பதே பெரும்பாலான நுகர்வோரின் அனுபவமாக உள்ளது.



எதுவுமே நிரந்தரமில்லாத உலகில் நாம் படும் துயரமும் நிரந்தரமானதல்ல என்பதை உணர்ந்தாலே மனதுக்கு ஆறுதல் ஏற்பட்டு, மகிழ்ச்சி ஏற்படும் மனநிலை உருவாகும்.

மன அழுத்தத்தைக் குறைத்து, மகிழ்ச்சியை ஏற்படுத்துவதற்காக இயங்கும் நகைச்சுவை மன்றங்கள் கூட ஓரளவே மகிழ்ச்சியை அளிக்கக்கூடியவை. தாங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை எண்ணிக் கவலைப்படுவதால் எதுவும் மாறிவிடப் போவதில்லை எனத் தெரிந்தும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முயற்சியில் ஈடுபடாமல் தம் தலைவிதியென நொந்து துன்பத்தில் உழல்பவர்கள் ஏராளம். தீர்வே இல்லாத பிரச்சினைகள் ஒருபோதும் இல்லை. ஒரு பிரச்சினை உருவாகும்போதே அதற்கான தீர்வும் உருவாகி விடுகிறது. துரதிர்ஷ்டவசமாக நம்மில் பலர் பிரச்சினைகளை மட்டுமே பார்க்கிறோம். தீர்வுகளின் பக்கம் திரும்பிப்பார்ப்பதில்லை.

பெரும்பாலானவர்களின் மகிழ்ச்சியின்மைக்கு அவர்கள் தம்மைவிட மேலானவர்களோடு தம்மை ஒப்பிட்டுப் பார்த்துக்கொள்வதே காரணமாக அமைகிறது.

உடல் ஆரோக்கியத்தைக் கெடுக்கும் உணவுப் பழக்க வழக்கம், மன நலனைக் கெடுப்பதோடு, உடல் உறுப்புகளையும் சிதைக்கும் போதைப் பழக்கம் ஆகியவை மகிழ்ச்சியை நம் மனதிலிருந்து அகற்றுவதில் முக்கிய பங்காற்றுகின்றன. போதைப் பழக்கத்தால் பெரிய அளவில் உடல் நலம் நலிவுற்ற ஒரு நபரின் மனமகிழ்ச்சி மட்டுமல்ல, அவரது குடும்பத்தாரின் மனமகிழ்ச்சியும் இல்லாமல் போய்விடும் என்பதில் ஐயமில்லை.

ஒரு நாடு பொருளாதார வளர்ச்சியிலும் வல்லரசு நாடுகளின் பட்டியலிலும் இடம் பிடிப்பது போன்றவற்றோடு அந்நாட்டுக் குடிமக்கள் மகிழ்ச்சியோடு வாழ்வதும் மிக மிக முக்கியம். ‘விட்டுக் கொடுப்பவர், கெட்டுப் போவதில்லை’ என்பர்.

நம்மிலும் மேலான வசதியுடன் வாழும் பிறரைப் போல் வாழ நினைப்பதைக் காட்டிலும் பிறருக்காக நாம் வாழ்ந்தால், மகிழ்ச்சி தானே நம்மை வந்து சேரும். நாம் மகிழ்ச்சியாக வாழ்வது நம் மனம் சார்ந்தது தான். எனினும், சமூகச் சூழலும் நாம் மகிழ்ச்சியாக வாழ்வதில் முக்கிய பங்கு வகிக்கிறது. சமூகத்தில் நாமும் ஓர் அங்கம் என்ற வகையில், பிறரின் மகிழ்ச்சியும் நம் செயற்பாடுகளைச் சார்ந்தது. இதனை உணர்ந்து பிறர் மகிழ்வுடன் வாழ வழி வகுத்து, நாமும் மகிழ்வுடன் வாழ்வோம்.

**நன்றி - தினமணி**

## நக்கல் நமசிவாயம்

***பிள்ளையானுக்கு சப்போர்ட் பண்ணுறதா நினைச்சு கம்மன்பில பேசுற பேச்சு பிள்ளையானின் அரசியல் எதிர்காலத்தையே நாசமாக்கப் போகுது பாருங்கோ..***



## இன்றைய நாளில்...

- **1897 – கிரேக்கத்துக்கும் உதுமானியப் பேரரசுக்குமிடையே போர் மூண்டது.**
- **1912 – கடலில் மூழ்கிய டைட்டானிக் கப்பலில் உயிர் பிழைத்த 705 பேர் நியூயோர்க் வந்து சேர்ந்தனர்.**
- **1930 – பி.பி.சி. வானொலி தனது வழமையான மாலைச் செய்தியறிக்கையில் இந்நாளில் எந்தச் செய்திகளும் இல்லையென அறிவித்தது.**
- **1946 – அனைத்துலக நீதிமன்றம் முதல் தடவையாக நெதர்லாந்தின் டென் ஹேக் நகரில் கூடியது.**
- **1955 – 29 நாடுகள் பங்குபற்றிய முதலாவது ஆசிய - ஆபிரிக்க மாநாடு இந்தோனேஷியாவின் பண்டுங் நகரில் ஆரம்பமானது.**
- **1958 – பண்டா - செல்வா ஒப்பந்தம் முறிவடைந்தது.**

# ஆண்டவரின் பாடுகளின் பெரிய வெள்ளி

விண்ணில் கடவுள் அவர்! மண்ணில் அவதரித்ததால் மானிட மகனானார். பரமபிதா தொடக்கிய மீட்பு திட்டத்தின் முழுமையும் நிறைவும் அவரே! படைப்பில் ஆதி பெற்றோர் இழைத்த பாவத்தின் நீட்சியாக மனுக்குலத்தை சாபமும் பாவமும் கூறுபோட, இறைமகன் தன் புனித குருதி கொண்டு, உயர்த்தியாகம் செய்து மனுக்குலத்தின் பாவங்களையெல்லாம் கழுவி புனிதம் செய்த நாளே புனித வெள்ளி.

இன்று புனித வெள்ளி. பெரிய வெள்ளி என்று அழைக்கப்படும் நாளும் இதுவே. இன்றைய நாள் உலகில் உள்ள ஒட்டுமொத்த கிறிஸ்தவர்களுக்கும் மிக மிக முக்கியமான பரிசுத்தமான நாள். இன்று பலர், கிறிஸ்துவினுடைய துன்பியலான சிலுவை சாவுக்கும் அவர் மனிதர் நமக்காக செய்த அளப்பரிய தியாகத்துக்காகவும் உண்ணா நோன்பு இருக்கின்றார்கள். களியாட்டம், கொண்டாட்டங்களைத் தவிர்க்கின்றார்கள். இது கிறிஸ்தவர்களைப் பொறுத்தமட்டில் துக்கமான நாள். புனிதமான நாளும் கூட! அவமானம் என்று கருதப்பட்ட சிலுவை, அவமானத்தின் அடையாளம் என்று யூதர்களால் அழைக்கப்பட்ட இந்தச் சிலுவை இன்று இயேசுவின் விலைமதிப்பில்லா குருதிபட்டு புனிதம் பெறுகின்றது. அவமானத்தின் சின்னம் என்று அழைக்கப்பட்ட சிலுவை, திருச்சிலுவையாக மாறுகின்றது.

மனுக்குலத்தின் இரட்சணியமாகவும் மாறுகின்றது! ரோமைத் தலைவர்களும் யூத சமயத் தலைவர்களும் இயேசுவுக்கு சாவுக்குரிய தண்டனை வழங்குகின்றார்கள். பின் அவரைச் சிலுவையில் அறைந்து கொல்லவேண்டுமென்று தீர்ப்பளித்தனர். ரோமை அரசின் உச்சபட்ச தண்டனை இயேசுவுக்கு வழங்கப்பட்டது. புனித வெள்ளி அன்று இயேசு கொடுமையாகத் தாக்கப்பட்டார், அடிக்கப்பட்டார், மரத்திலான ஒரு பெரிய சிலுவையைச் சுமக்குமாறு வற்புறுத்தப்பட்டார், இறுதியாக அந்தச் சிலுவையில் அவருடைய கைகளும் கால்களும் இணைக்கப்பட்டு ஆணிகளால் அடிக்கப்பட்டன. கிறிஸ்துவின் இத் தும்பியல் நிலைமையை வர்ணிக்க வார்த்தைகள் இல்லை. தன்னுடைய இறுதி மரண வேளையில் எல்லோராலும் கைவிடப்பட்டவராகவே கருதினார். இறுதியாக தன் தந்தையை நோக்கி எழுப்பிய அவலம் நிராகரிக்கப்பட்டபோதும் இறை தந்தையிடமிருந்து எந்தவித பதிலும் கிடைக்காதபோதும் தன் தந்தையிடம் கொண்ட நம்பிக்கையில் இருந்து இம்மியளவும் பின்வாங்காமல் சிலுவையின் ஆணிகள் நடுவில் எல்லோரையும் மன்னித்து, தான் போதித்த வார்த்தைகளை எல்லாம் மெய்ப்பித்து மனக்குலத்துக்கு பாவ மன்னிப்பு ஈர்ந்து தன் உயிரை தன் தந்தையிடம் கையளிக்கின்றார்.



இயேசு, இந்த மனித குலம் மீட்படைய வேண்டுமென்பதற்காக இவ்வாறு தனது உயிரைத் தியாகம் செய்தார் என்பதை ஒவ்வொரு கிறிஸ்தவரும் இன்றைய நாளில் மட்டுமல்ல, ஒருபோதும் மறப்பதில்லை. இன்றைய நாளில் தேவாலயங்கள் அலங்காரங்கள் இல்லாமல், விளக்குகள் ஏற்றப்படாமல் வெறுமையாக இருக்கும். இன்றைய நாளில் பிற்பகல் 3 மணி, அதாவது, கிறிஸ்து மரணமடைந்த மாபெரும் இரக்கத்தின் நேரத்தில் தேவாலயங்களில் மாலை ஆராதனை இடம் பெறுகின்றது. கிறிஸ்துவின் மரணத்தை முழுமையாக நினைவுகூருகின்ற இந்த மாலை வழிபாட்டில் கிறிஸ்துவின் தியாகத்தை நினைவில் கொண்டு வழிபாடுகளில் பங்கெடுப்போம். எனவே, இந்தப் புனிதமான வெள்ளி தரும் வாழ்வை புனிதமாகக் காப்போம். கிறிஸ்து தம் விலை மதிப்பில்லா குருதி கொடுத்து தந்த இந்தப் புனித வாழ்வை அர்த்தத்தோடு வாழ்வோம். வன்மமும் பகையும் குரோதம் நிறைந்த வாழ்வில் கிறிஸ்துவின் சிலுவையின் சாட்சிகளாய் ஒருவர் ஒருவரை மன்னித்து ஏற்றுக் கொண்டு கிறிஸ்தவ வாழ்வின் அர்த்தங்களைச் சரி செய்து வாழ எமக்காய் அறையப்பட்ட கிறிஸ்துவின் பாதங்களைத் தொட்டு புனிதம் பெறுவோம். குறிப்பாக, இன்றைய வழிபாட்டில் திருச்சிலுவை நாம் முத்தி செய்கின்ற போது அவர் நமக்காய் பாடுபட்ட அந்த உன்னத அன்புக்காக நன்றி கூறி அவருடைய காயப்பட்ட பாதங்களை முத்தி செய்வோம்.

**அருட்பணி S.X. ரவிகாந்**
**CMF பங்குத்தந்தை - தூய மருதமடு அன்னை ஆலயம், என்சல்வத்த பங்கு.**

# கேலிசெய்த இளைஞனை கோபத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை

தெல்தோட்டையில் சம்பவம்





(கம்பளை நிருபர்)

தேங்காய் பறிக்கும் இளைஞரை தினமும் கேலி செய்துவந்த இளைஞன், கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொலைசெய்யப்பட்டுள்ளதாக கலஹா பொலிஸார் தெரிவித்தனர்.

தேங்காய் பறிப்பதை தொழிலாக கொண்டி ருந்த சந்தேக நபர் சன்கிளாஸ் மற்றும் தொப்பி ஜாக்கெட் என நவீனரக ஆடைகளை அணிந்து கொண்டு வழக்கமாக தொழிலை செய்து வந்துள்ளார். இவரின் இந்த செயற்பாட்டை உயிரிழந்த இளைஞர் ஏனையவர்கள் முன்னிலை யில் தினமும் கேலி செய்துவந்துள்ளார்.

இந்நிலையில் சம்பவதினமான கடந்த 15ஆம் திகதி மாலை வழக்கம்போல் கேலிசெய்த சந்தர்ப்பத்தில் சினம்கொண்டு தனது கையிலிருந்த கூரிய ஆயுதத்தினால் சரமாரியாக தாக்கியதில் குறித்த இளைஞர் உயிரிழந்துள்ளதாக தெரிய வருகிறது.

இதன்போது தெல்தோட்டை கொட்டகேப்பிட்டிய பகுதியைச் சேர்ந்த 26 வயது இளைஞனே உயிரிழந்துள்ளார்.

சந்தேகநபர் தனது தாத்தா பாட்டியின் பராமரிப்பில் வளர்ந்தவர். இவர் 18 வயதை எட்டிய பிறகு, இராணுவ சேவையில் சேர்ந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, தப்பித்து கொழும்பு பகுதியில் ஆலையொன்றில் வேலைசெய்து வந்துள்ளார். அங்கு சந்தித்த பெண்ணை, திருமணம் செய்து அவரது கிராமமான நவனெலியாவையில் வாழ்ந்து வந்த நிலையிலேயே மேற்படி எதிர்பாராத சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபரை கலஹா பொலிஸார் கைது செய்துள்ளதுடன், தடயவியல் சோதனைகளை கம்பளை தடயவியல் பொலிஸார் மேற் கொண்டனர். ஸ்தல விசாரணைகளை கண்டி நீதிமன்ற பதில் நீதவான் மஹிந்த லியனகே மேற் கொண்டார்.

# கண்டி ஸ்ரீ தலதா யாத்திரையில் பிரமுகர்களுக்கு சிறப்பு வரிசை இல்லை




ஸ்ரீ தலதா யாத்திரையில் நிகழ்வுக்காக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் VIPஅல்லது VVIP என்ற பிரமுகர்களுக்கான சிறப்பு வரிசை இல்லை என்று கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களுக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் சுதத் மாசிங்க தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ தலதா கண்காட்சியில் யாத்திரிகர்களின் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து வழிநடத்தல் தொடர்பாக நேற்று பிற்பகல் (17) நடைபெற்ற விசேட பொலிஸ் ஊடக சந்திப்பில் பங்கேற்றபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும், குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மதகுருமார்களுக்கு மட்டுமே தலதா மாளிகைக்குள் நுழைய விசேட அனுமதி வழங்கப்படும் என்றும் அவர்களுக்கும் விசேட பாதுகாப்பு அளிக்கப்படும் என்றும் பிரதி பொலிஸ் மா அதிபர் சுதத் மாசிங்க கூறியுள்ளார்.

இதற்கிடையில், பிரமுகர்களாக, வெளிநாட்டுத் தூதுவர்களும் விசேட பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு, பொதுமக்கள் யாத்திரையைத் தொடங்குவதற்கு முன்பு, வழிபட வாய்ப்பு வழங்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

தலதா மாளிகை யாத்திரையின் போது 98% யாத்திரிகர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படுவதுடன், காலை பால் உணவு பூஜைக்கு வரும் பக்தர்கள் எந்த இடையூறும் இல்லாமல் யாத்திரையை மேற்கொள்ளலாம்.


இருப்பினும், அவர்கள் அனைவரும் காலை 10.30 மணிக்குள் தலதா மாளிகையை விட்டு வெளியேற வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

தலதா யாத்திரைக்கு மூன்று வரிசைகள் காணப்படுவதுடன், வெளியேறுவதற்கு இரண்டு வரிசைகள் காணப்படும்.

வரிசையில் நிற்கும் யாத்திரிகர்கள் வீடியோவில் பதிவு செய்யப்படுவதால், "யாரும் இடையில் நுழைய முடியாது" என்றும் பிரதி பொலிஸ் மா அதிபர் சுதத் மாசிங்க சுட்டிக்காட்டினார்.

# புத்தாண்டு காலத்தில் தனியார் பஸ் சேவை குறித்து இதுவரை 190 முறைப்பாடுகள் பதிவு

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவிப்பு



புத்தாண்டு காலத்தில் தனியார் பஸ் சேவைகள் தொடர்பாக இதுவரை சுமார் 190 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நேற்று (17) தெரிவித்துள்ளது.

நீண்ட தூர தனியார் பஸ்கள் தொடர்பாக 165 முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன், 25 முறைப்பாடுகள் மாகாணங்களுக்கு இடையேயான சேவைகள் தொடர்பாக பதிவுசெய்யப்பட்டுள்ளன.

புத்தாண்டு காலத்தை முன்னிட்டு தற்காலிக உரிமங்களுடன் வழங்கப் பட்ட தனியார் பஸ்கள் தொடர்பாக மூன்று முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.


இதுவரை 14 பிற முறைப்பாடுகளும் பதிவுசெய் யப்பட்டுள்ளன.

தற்போது நடைபெற்று வரும் புத்தாண்டு பஸ் சேவைகள் ஏப்ரல் 21 வரை தொடர்ந்து இயங்கும் என்பதால், பொதுமக்களின் முறைப்பாடுகள் குறித்த விசாரணைகள் ஏப்ரல் 21ஆம் திகதிக்குப் பிறகு முன்னெடுக்கப்படும் என போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

1955 என்ற துரித இலக்கத்துக்கு அழைப்பதன் மூலம் பயணிகள் புத்தாண்டு பருவ தனியார் பஸ்கள் தொடர்பான முறைப்பாடுகளைத் தொடர்ந்து தெரிவிக்கலாம் என்று ஆணைக்குழு மேலும் குறிப்பிட்டுள்ளது.

# வெலிக்கடை பொலிஸ் நிலைய காவலில் உயிரிழந்த இளைஞனின் மரணத்தில் சந்தேகம்

உடலை தோண்டியெடுக்க நீதிமன்றம் உத்தரவு



வெலிக்கடை பொலிஸாரால் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, பொலிஸ் காவலில் இருந்தபோது இறந்த நிமேஷ் சத்சார என்ற இளைஞரின் உடலை தோண்டி எடுக்க கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று (17) உத்தரவிட்டது.

இதற்கிணங்க இளைஞரின் உடலை மீண்டும் பிரேத பரிசோதனை செய்வதற்காக, ஏப்ரல் 23ஆம் திகதி தோண்டி எடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

குற்றப் புலனாய்வுத் துறையினர் (CID) சமர்ப்பித்த கோரிக்கையைத் தொடர்ந்து, கொழும்பு மேலதிக நீதிபதி முஹம்மது ரிஸ்வான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

குறிப்பிட்ட திகதியில் தோண்டி எடுப்பு மற்றும் பிரேத பரிசோதனையைத் தொடர கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி (JMO) சட்டப்பூர்வ அனுமதி கோரியுள்ளதாக குற்றப்புலனாய்வுப் பிரிவு நீதிமன்றத்துக்குத் தெரிவித்தது.

தோண்டி எடுக்கும் செயல்முறையின்போது தேவையான உதவிகளை வழங்குமாறு பதுளை நீதவானுக்கும் மேலதிக நீதிபதி உத்தரவிட்டார்.

முன்னதாக, தோண்டி எடுக்கும் பணியை மேற்கொண்டு புதிய பிரேத பரிசோதனையை நடத்த மூன்று பேர் கொண்ட மருத்துவ நிபுணர் குழுவை நியமிக்குமாறு கொழும்பு பிரதம சட்ட வைத்திய அதிகாரிக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் அறிவுறுத்தியிருந்தது.

அத்தகைய குழு இப்போது நியமிக்கப்பட்டுள்ளதாக சி.ஐ.டி. நீதிமன்றத்துக்கு உறுதிப்படுத்தியது. இந்தக் குழுவில் விசேட சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் பிரியந்த அமரரத்ன, விசேட சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் பி.ஆர். ருவன்புர மற்றும் மூத்த பேராசிரியர் மற்றும் விசேட சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் முதித விதானபத்திரன ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இறந்தவரின் தாயார் தனது மகனின் மரணம் சந்தேகத்துக்குரியது என்று தாக்கல் செய்த மனு மீதான விசாரணையைத் தொடர்ந்து இறந்தவரின் உடலை தோண்டி எடுப்பதற்கான முடிவு எடுக்கப்பட்டது. அவரது மனுவை பரிசீலித்த கொழும்பு மேலதிக நீதவான் கெமிந்த பெரேரா, உடலை தோண்டி எடுப்பதற்கும் பிரேத பரிசோதனை செய்வதற்கும் விரிவான அறிக்கையை சமர்ப்பிப்பதற்கும் முன்னதாக உத்தரவிட்டிருந்தார்.

இதற்கு பதிலளிக்கும் விதமாக, கொழும்பு பிரதம சட்ட வைத்திய அதிகாரியுடன் சேர்ந்து, நீதிமன்றத்தின் உத்தரவை நிறைவேற்ற சி.ஐ.டி. நடவடிக்கை எடுத்துள்ளது.

ஏப்ரல் 02, 2025 அதிகாலையில் வெலிக்கடை பொலிஸாரின் காவலில் இருந்தபோது அந்த இளைஞர் ஆபத்தான காயங்களுக்கு ஆளானதாகக் கூறப்படுகிறது.

பின்னர் அவர் அங்கொடையில் உள்ள தேசிய மனநல மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# தலதா யாத்திரைக்கு வரும் பக்தர்களின் வசதிக்காக உத்தியோகபூர்வ பொலிஸ் இணையதள சேவைகள்

(எம்.ஏ.அமீனுல்லா)

''ஸ்ரீ தலதா கண்காட்சிக்காக கண்டிக்கு வருகை தரும் பக்தர்களின் வசதிக்காக பொலிஸ் தகவல் தொழில்நுட்பப் பிரிவு உத்தியோகபூர்வ பொலிஸ் இணையதளத்தின் ஊடாக பல சேவைகளை நடைமுறைப்படுத்தியுள்ளதுடன், பக்தர்கள் கண்டிக்கு வருவதற்கு முன்னர் அதுபற்றிய ஆலோசனைகளைப் பெற்று புரிந்துகொள்வதன் மூலம் பல அசௌகரியங்களை தவிர்க்க முடியும்'' என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க கண்டியில் தெரிவித்துள்ளார்.

இணையதளத்தில் பிரவேசித்ததன் பின்னர், 'ஸ்ரீ தலதா வந்தனாவ' என்ற ஐகனைக் கிளிக் செய்வதன் மூலம் புனித தலதா கண்காட்சி தொடர்பான அனைத்து தகவல்களையும் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கண்டி பிரதி பொலிஸ் மா அதிபர் காரியாலயத்தில் நேற்று (17) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மத்திய மாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் சுதத் மாசிங்க, கண்டி பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அனுருத்த பண்டாரநாயக்க, பொலிஸ் அத்தியட்சகர் டி.பி.டி. இளங்ககோன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.



தொடர்ந்து உரையாற்றிய பொலிஸ் ஊடகப் பேச்சாளர்,

இதன்மூலம் தலதா கண்காட்சிக்காக கண்டிக்கு வருகை தரும் மக்களுக்கு வழங்கப்படும் ஆலோசனைகள் மற்றும் சேவைகள் பற்றிய தகவல்களும் சம்பந்தப்பட்ட நாளில் வாகன நிறுத்துமிடங்கள் பற்றிய தகவல்களும் வழங்கப்படும் என்றார்.

இது தொடர்பான தகவல்கள் மற்றும் தரவுகளை உள்ளிடுவதற்காக அனைத்து வாகன நிறுத்துமிடங்களுக்கும் முன்பாக தகவல் தொழில்நுட்பப் பிரிவின் அதிகாரிகள் நிறுத்தப்படுவார்கள்.

தலதா கண்காட்சிக்காக அமைக்கப்பட்டுள்ள மூன்று வரிசைகள் மற்றும் அவர்களின் இறுதி இலக்கு தொடர்பான விபரங்களை இணையதளத்துக்கு சென்று பெற்றுக்கொள்ள முடியும்.

தலதா கண்காட்சிக்காக கண்டிக்கு வருவதற்கு முன்னர், இலங்கை பொலிஸின் தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் உத்தியோகபூர்வ பொலிஸ் இணையதளத்தில் உள்ளிடப்பட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட தகவல்கள் தொடர்பில் அவதானம் செலுத்துமாறு பக்தர்கள் கேட்டுக் கொள்ளப்படுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# இரண்டு வாரங்களில் வீதி விபத்துகளில் 105 பேர் பலி

வீதி விபத்துகளில் ஏப்ரல் 01 முதல் 15 வரையான காலப்பகுதியில் 105 பேர் உயிரிழந்துள்ளதாக இலங்கை பொலிஸ் தெரிவித்துள்ளது.

இந்த இரண்டு வார காலத்தில் நாடு முழுவதும் தனித்தனி விபத்துச் சம்பவங்களில் இந்த உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன.

மேலும் விபத்துகளைத் தடுக்க, வாகன சாரதிகள் மற்றும் பாதசாரிகள் சாலை பாதுகாப்பு விதிகளைப் பின்பற்றுமாறு அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

# சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட அழகுசாதனப் பொருட்கள் மீட்பு

சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டுவர முற்பட்ட அழகுசாதனப் பொருட்கள் மன்னார் வடக்கு கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கடற்படையினரால் நேற்று முன்தினம் (16) மேற்கொண்ட சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது, சட்டவிரோதமாக நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டதாக சந்தேகிக்கப்படும் கடல் பகுதியில் மிதந்து கொண்டிருந்த அழகுசாதனப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இறக்குமதி செய்யப்பட்டதாக சந்தேகிக்கப்படும் 3,200 ஷாம்போ பக்கெட்டுகள், 376 அழகுசாதனப் பெட்டிகள் மற்றும் 75 சவர்க்காரங்கள் உள்ளிட்ட அழகுசாதனப் பொருட்களை கடற்படையினர் கைப்பற்றினர். இந்த நடவடிக்கையின்போது கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட அழகுசாதனப் பொருட்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக ஜெயபுரம் பொலிஸ் நிலையத்திடம் ஒப்படைக்கப்பட்டன.

# புத்தாண்டு நிகழ்வில் வழுக்கு மரத்திலிருந்து தவறி விழுந்த மாணவன் உயிரிழப்பு

எல்பிட்டியில் சோகம்

எல்பிட்டிய பகுதியில் புத்தாண்டு நிகழ்வில் கலந்துகொண்ட பாடசாலை மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

எல்பிட்டிய, பிட்டிகல பகுதியிலுள்ள அமுகொடை ஸ்ரீ விஜயராம விகாரைக்கு அருகிலுள்ள விளையாட்டு மைதானத்தில் ஏற்பாடுசெய்யப்பட்ட புத்தாண்டு நிகழ்விலேயே இந்த துரதிர்ஷ்டவசமான சம்பவம் நிகழ்ந்துள்ளது.

நிகழ்வுக்கு தயாராகி கொண்டிருந்தபோது 40 அடி உயரமான கிரீஸ் மரத்திலிருந்து தவறி கீழே விழுந்த பாடசாலை மாணவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது உயிரிழந்துள்ளதாக பிட்டிகல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த 16 வயதுடைய மாணவன் அண்மையில் நடைபெற்று முடிந்த க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றியவராவார்.

பிரேத பரிசோதனை எல்பிட்டிய ஆதார வைத்தியசாலையில் நடத்தப்படுவதோடு, சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பிட்டிகல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வாழ்க்கைப் பாடம்

ஏ.சி.அகார் முஹம்மத், முதல்வர், ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம்

# மறுமை நம்பிக்கைக்கு முன்னால் மனிதர்கள்!

மறுமை நம்பிக்கைக்கு முன்னால் மனிதர்களில் மூன்று பிரிவினர் இருக்கின்றார்கள்.

ஒரு சாரார் மரணத்துக்கு பிறகுள்ள வாழ்வை நம்பாதவர்கள்; அதனை நிராகரிப்பவர்கள்.

இரண்டாம் சாரார் மறுமையை நம்புபவர்கள். ஆனால் அதனை மறந்து அலட்சியமாக வாழ்பவர்கள்.

மறுமையை நம்பி அதனை எப்போதும் நினைவில் வைத்து அதற்காக தம்மைத் தயார் செய்பவர்கள். இவர்கள் மூன்றாம் சாரார். இவர்கள்தான் வெற்றியாளர்கள்; ஈடேற்றம் பெறுபவர்கள்.

நானும் நீங்களும் இந்த மூன்றாம் சாராராக இருக்க வேண்டும். தினமும் அந்த மகத்தான தினத்தை நினைவுகூர வேண்டும்; அதற்காக நம்மை நாம் தயாராப்படுத்த வேண்டும்.

அல்குர்ஆன் கூறுகின்றது:

"வணிகமோ வர்த்தகமோ அவர்களை அல்லாஹ்வின் நினைவை விட்டும் தொழுகையை நிலைநாட்டுவதை விட்டும் ஸகாத் கொடுப்பதை விட்டும் திசை திருப்பாது. பார்வைகளும் உள்ளங்களும் தடுமாறும் நாளை அவர்கள் அஞ்சுவார்கள்."(24:37)

மறுமை பற்றிய சிந்தனை உள்ளத்தில் எப்போதும் பசுமையாக இருக்கின்றபோது கிடைக்கின்ற நன்மைகள் பல.

மறுமை பற்றிய சிந்தனை பொறுமை, திருப்தி, பிறரை மன்னிக்கும் மனப்பான்மை முதலான பண்புகளை வளர்த்துக் கொள்ளவும் பெருமை, அகம்பாவம், பொறாமை, மித மிஞ்சிய உலக ஆசை, வெறுப்பு, பகைமை, அடுத்தவருக்கு அநியாயம் செய்தல் முதலான பாவச் செயல்களிலிருந்து விலகவும் துணை செய்யும். மறுமையை நினைக்கின்ற அளவுக்கு உள்ளம் அமைதி காணும்.

கப்லா எனும் அல்லாஹ்வை அவனது கட்டளைகளை மறந்து அலட்சியமாக நடந்து கொள்ளும் ஆபத்தான போக்கிலிருந்து ஒருவர் விடுபடவும் மறுமை பற்றிய நினைவு துணை நிற்கும்.

எனவே, எந்த நினைவு தினத்தை மறந்தாலும் அந்த மகத்தான தினத்தை அதனையடுத்து வரும் மறுமை நாளை மறவாமல் என்றும் எப்போதும் அதனை நினைவு கூருவோம்; அந்த தினத்துக்காக நம்மை நாம் தயார்படுத்துவோம்!






புங்குடுதீவு 9ஆம் வட்டாரம் ஸ்ரீ ஐயனார் கோவிலுக்கான புதிய கோபுரத்தின் சங்கு ஸ்தாபனம் ஆலய தர்மகர்த்தா வீர மைலன் வீரா சுப்பிரமணியம் ஆனந்தரூபனின் ஏற்பாட்டில் இடம்பெற்றது. பூஜைகளை எஸ்.சிவநேசன் குருக்கள் மற்றும் இராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா, யாழ். பல்கலைக்கழக பாலகைலாசநாத சர்மா, கோண்டாவில் ஐயப்பன் கோவில் அரிகரசுதன் குருக்கள் ஆகியோர் நடத்தி வைத்தனர். கலட்டி விநாயகர் ஆலயத்தில் கனடா பஞ்சாச்சர குருக்கள், கனடா விஜயகுமார குருக்கள் சார்பாக குருமார்களும் ஆலய தர்மகர்த்தா ஆனந்தரூபர் மற்றும் இளங்குமரன் எம்.பியும் கௌரவிக்கப்பட்டனர்.

# ஸ்ரீ தலதா மாளிகைக்கு வரும் பக்தர்களின் சுகாதாரப் பாதுகாப்புக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி

ஸ்ரீ தலதா மாளிகைக்கு வரும் பக்தர்களின் சுகாதாரப் பாதுகாப்புக்காக 50 பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மத்திய மாகாண சுகாதாரப் பணிப்பாளரின் ஆலோசனைக்கிணங்க கண்டி மாநகர சபையின் பிரதான சுகாதார வைத்திய அதிகாரிகளின் பூரண மேற்பார்வையின் கீழ் இந்த சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

நகரின் சகல உணவு தயாரிப்பு நிலையங்கள் பொதுச்சுகாதார பரிசோதகர்களினால் சோதனை செய்யப்படுவதுடன் அதன்படி உணவுப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்.

இக்காலப் பகுதியில் இடம்பெறும் சகல விதமான அன்னதானங்களும் கண்டி மாநகர சபையின் சுகாதாரத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட வேண்டும் என்பதுடன், அந்த சகல அன்னதானங்கள் மற்றும் வீதி உணவு வழங்கும் இடங்கள் தொடர்ந்தும் பொதுச்சுகாதாரப் பரிசோதர்களினால் சோதனைக்கு உட்படுத்தப்படும்.

கண்டி நகரை சுத்தமாகவும் அலங்காரமாகவும் வைத்திருப்பதற்காக பொதுச் சுகாதாரப் பரிசோதர்களின் தொடர்ச்சியான கண்காணிப் பின் கீழ், முறையாகக் கழிவுகளை அகற்றும் செயற்பாடும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பாவனையைக் குறைப்பதற்காக, கழிவுகளை உரிய இடங்களில் இடுமாறு இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதர்களின் சங்கம் பக்தர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பக்தர்களின் சுகாதார நடவடிக்கைகளுக்காக 150 நடமாடும் மலசல கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், அவற்றின் கழிவுகளை அகற்றும் செயற்பாடு நகரக் கழிவு நீர் அகற்றும் திட்டம் ஊடாக மேற்கொள்ளப்படும்.

பக்தர்களின் குடிநீர் தேவைக்காக முறையான நீர் விநியோகம் 24மணி நேரமும் செயற்படுத்தப்படுவதுடன், அந்த நீரின் சுகாதார நிலைமை குறித்து ஒரு மணித்தியாலத்துக்கு ஒரு தடவை பரிசோதனை செய்யப்படும்.

பாதுகாப்பு பிரிவின் அங்கத்தவர்களின் தங்குமிடம் அமைந்துள்ள இடங்களில் சுகாதார செயற்பாடுகள், உணவு விநியோகம், தொற்று நோய்த் தடுப்பு போன்றவை குறித்த தொடர்ச்சியான கண்காணிப்புக்காகப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் தலைமையில் சுகாதாரக் குழு ஒன்று ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

# அம்பாறை மாவட்டத்தில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுத்த ரிஷாத்

அம்பாறைக்கு அண்மையில் (13) விஜயம் மேற்கொண்ட அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன், தொடர்ந்து இரு தினங்களாக (13,14) மாவட்டத்தின் பல பகுதிகளில் உள்ளூராட்சித் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தார்.

அந்தவகையில், அக்கரைப்பற்று மாநகர சபை, அக்கரைப்பற்று பிரதேச சபை, சம்மாந்துறை பிரதேச சபை, இறக்காமம் பிரதேச சபை, அட்டாளைச்சேனை பிரதேச சபை, பொத்துவில் பிரதேச சபை, காரைதீவு பிரதேச சபை, நாவிதன்வெளி பிரதேச சபை மற்றும் நிந்தவூர் பிரதேச சபை ஆகியவற்றில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பாகப் போட்டியிடும் வேட்பாளர்களின் கட்சிக் கிளைக் காரியாலயம் திறந்துவைக்கும் நிகழ்வுகள் மற்றும் மக்கள் சந்திப்புகளும் இடம்பெற்றன.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வுகளில், கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், அம்பாறை மாவட்ட மத்திய குழு உறுப்பினர்கள், கட்சியின் முக்கியஸ்தர்கள், ஊர்ப்பிரமுகர்கள், பொதுமக்கள் எனப் பலரும் பங்கேற்றிருந்தனர்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்திலுள்ள 09 உள்ளூராட்சி மன்றங்களில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி, தனது மயில் சின்னத்தில் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# முறைப்பாட்டை பதிவுசெய்ய மறுத்த இளவாலை பொலிஸார்!

## பாதிக்கப்பட்டவர் குற்றச்சாட்டு





(பு.கஜிந்தன்)

தனது தந்தையின் பணம் கடந்த 10 ஆம் திகதி களவாடப்பட்டதாகவும் இது குறித்து முறைப்பாடு செய்வதற்கு பொலிஸ் நிலையம் சென்றவேளை இளவாலை பொலிஸார் அந்த முறைப்பாட்டை பதிவுசெய்யவில்லையெனவும் பாதிக்கப்பட்ட இளைஞரொருவர் குற்றஞ்சாட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 10ஆம் திகதி எனது தந்தையின் பணம் களவாடப்பட்டது. இது குறித்து முறைப்பாடு செய்வதற்கு வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையம் சென்றோம். சம்பவம் நடந்த இடத்தைப் பார்வையிட்ட வட்டுக்கோட்டைப் பொலிஸார் அது இளவாலை பொலிஸ் பிரிவுக்குள் வரும் எனக் கூறினர்.

ஆகையால், நாங்கள் இளவாலை பொலிஸ் நிலையத்துக்கு பி.ப. 3.00 மணியளவில் சென்றோம். எங்களை 6.00 மணிவரை காக்க வைத்தனர். பின்னர் முறைப்பாடும் பதிவுசெய்யாமல் ஒரு வெற்றுக் கடதாசியில் குறித்து வைத்துவிட்டு எங்களைத் திருப்பி அனுப்பினர்.

களவெடுத்த நபர் சைக்கிளை கைவிட்டுவிட்டு தப்பிச்சென்றார். அந்தவகையில், அந்த சைக்கிள் யாருடைய பெயரில் பதிவில் உள்ளதென்பதை வைத்து நடவடிக்கை எடுக்குமாறு கூறினேன். இதன்போது இளவாலை பொலிஸார் "உனக்கு மண்டைக்குள் அறிவில்லையா, மூளை இல்லையா, வேறு ஆட்களின் கதையை வைத்து ஏன் கதைக்கிறாய்" என மிரட்டினார்கள்.

எமது பணம் தொலைந்தது தொடர்பாக இதுவரை முறைப்பாடு பதிவுசெய்யவும் இல்லை, பணத்தைக் கண்டுபிடித்துக் கொடுப்பதற்கு பொலிஸார் முயற்சிக்கவும் இல்லையென குறித்த இளைஞன் குற்றஞ்சாட்டினார்.

இளவாலை பொலிஸாரின் இவ்வாறான முறைகேடான செயற்பாடுகள் அண்மைக் காலமாக இடம்பெற்று வருகின்ற நிலையில், உயரதிகாரிகளும் நடவடிக்கை எடுக்காமல் இருப்பது மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# 158ஆவது வருட ஷாதுலியா மனாகிப் மஜ்லிஸ்



(பீ.எம்.முக்தார்)

பேருவளை, மருதானை அஸ்ஸாவியதுல் பாஸியா லித்தரீகதுஷ் ஷாதுலியா மருதானை ஸாவியாவில் வருடாந்தம் நடைபெற்று வரும் ஷாதுலியா மனாகிப் மஜ்லிஸ் நாளை சனிக்கிழமை (19) இரவு கலீபதுஷ் ஷாதுலி மௌலவி ரபீக் பஹ்ஜி தலைமையில் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து ஒன்பது நாட்கள் மனாகிபுஷ் ஷாதுலி ஓதி பத்தாவது நாள் தமாம் மஜ்லிஸ் (28)திங்கட்கிழமை இரவு நடைபெறும்.

முதல் நாள் மஜ்லிஸ் மஹ்ரிப் தொழுகைக்கு பிறகு வலீபா யாகூத்தியா ஹம்ஸியா இஷா தொழுகைக்குப் பிறகு மனாகிப் ஷாதுலி முஸாக்கரா நடைபெறும்.

கலீபதுஷ் ஷாதுலி மௌலவி அஹ்மத் சூபி மஹ்லரி முஸாக்கரா நிகழ்த்துவார். துஆ மற்றும் யாஸீன் ஜலாலாவுடன் நிகழ்வு நிறைவுபெறும்.

அனைவரும் கலந்து சிறப்பித்து ஷாதுலி நாயகத்தின் துஆ பரகத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு பள்ளிவாசல் மற்றும் ஸாவியா நிர்வாகம் கேட்டுக்கொள்கின்றது.

# சட்ட வைத்திய அதிகாரி வராமையால் வவுனியாவில் மீட்கப்பட்ட சடலத்தை ஒப்படைப்பதில் தாமதம்



சட்ட வைத்திய அதிகாரி வராமையால் வவுனியாவில் குளத்தின் அலைகரைப் பகுதியிலிருந்து இரத்தக்கறைக் காயங்களுடன் மீட்கப்பட்ட இளைஞனின் சடலத்தை ஒப்படைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

வவுனியா, பாவற்குளத்தின் சூடுவெந்தபுலவு அலைகரைப் பகுதியிலிருந்து நேற்று முன்தினம் (16) மாலை இளைஞரொருவரின் சடலம் இரத்தக் கறைகளுடன் மீட்கப்பட்டிருந்தது.

சடலமாக மீட்கப்பட்டவர் கடந்த புதுவருட தினமன்று காணாமல் போயிருந்த வவுனியா விநாயகபுரம் பகுதியைச் சேர்ந்த கோபிதாசன் (வயது 33) என்பவருடையது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

குறித்த சடலத்தை நேற்று முன்தினம் (16) மாலை பார்வையிட்ட பதில் நீதவான் அன்ரன் புனிதநாயகம் சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டதுடன், இது தொடர்பான துரித விசாரணைகளை முன்னெடுக்குமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தார்.

வவுனியா வைத்தியசாலையின் பிணவறை குளிரூட்டிகள் பழுதடைந்த நிலையில் காணப்படுவதால், குறித்த சடலம் செட்டிகுளம் வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

இந்நிலையில், வவுனியா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி வராமையால சடலம் உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ளப்படாது, செட்டிகுளம் வைத்தியசாலையின் பிரேத அறையில் தொடர்ந்தும் வைக்கப்பட்டுள்ளதாக இறந்தவரின் உறவினர்கள் தெரிவித்தனர்.


## Now you can subscribe the following Newspapers

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| தமிழன் | One Month | 40.00 | 22 | 880.00 |
| | Three Month | | 64 | 2560.00 |
| | Six Month | | 129 | 5160.00 |
| | One Year | | 261 | 10440.00 |
| தமிழன் | One Month | 130.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 1690.00 |
| | Six Month | | 26 | 3380.00 |
| | One Year | | 52 | 6760.00 |

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| the daily morning | One Month | 70.00 | 22 | 1540.00 |
| | Three Month | | 64 | 4480.00 |
| | Six Month | | 129 | 9030.00 |
| | One Year | | 261 | 18270.00 |
| the sunday morning | One Month | 180.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 2340.00 |
| | Six Month | | 26 | 4680.00 |
| | One Year | | 52 | 9360.00 |

FOR MORE INFORMATION PLEASE CONTACT

Address : - The Manager Circulation
Liberty Publishers Private Limited
46/8, Dompe Road,
Kalukondayawa,Malwana.

DELIVERY FREE

Hotline :- 076 136 7623

Tel No: - 0112 127 209


# மரச்சின்னத்துக்கு வாக்களித்து முஸ்லிம் காங்கிரஸின் கரத்தைப் பலப்படுத்துங்கள்

## ஹிஸ்புல்லாஹ்எம்.பி. வலியுறுத்து



இந்தத் தேர்தலில் மரச்சின்னத்துக்கு வாக்களித்து முஸ்லிம் காங்கிரஸின் கரத்தைப் பலப்படுத்தவேண்டும். குறிப்பாக, நீர்கொழும்பு மாநகர சபை அதிகாரத்தைத் தீர்மானிக்கும் சக்தியாக நமது கட்சியை மாற்றவேண்டுமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டு நேற்று முன்தினம் (16) கம்பஹா மாவட் டத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

''அரசியலிலேயே உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரம் முக்கியமானதொன்றாகக் காணப்படுகிறது. அதைக் கைப்பற்றுகின்றபோதுதான் எதிர்காலங்களில் மாகாணசபை மற்றும் பாராளுமன்றம் போன்ற அதிகாரங்களைக் கைப்பற்ற முடியும்.

நீர்கொழும்பானது முதலாவது முஸ்லிம் மாகாண சபை உறுப்பினர் மர்ஹூம் அனீஸ் ஷரீப்பை பெற்ற பிரதேசம். ஆகவே, அந்தப் பிரதே சம் மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும். கடந்த தேர்த லில் 30ஆயிரத்துக்கும் அதிக மான வாக்கு களைப் பெற்றும் பாராளு மன்றப் பிரதிநிதித்துவத்தைப் பெறமுடியாமல் போனது. ஆகவே, எதிர்காலத்தில் எங்களுடைய பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தைப் பாதுகாப்பதற்கு இச்சந்தர்ப்பத்தை நீங்கள் பயன்படுத்தவேண்டு மென்பதோடு உச்ச அதிகாரங்களையும் பெற்றுக்கொள்ளவேண்டும்.

அதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கும். எனவே, நீங்கள் அனைவரும் இந்தத் தேர்தலில் மரச்சின்னத்துக்கு வாக்களித்து முஸ்லிம் காங்கிரஸின் கரத்தைப் பலப்படுத்தவேண்டும். குறிப்பாக, நீர்கொழும்பு மாநகரசபை அதிகாரத்தைத் தீர்மானிக்கும் சக்தியாக நமது கட்சியை மாற்றவேண்டும். அதேபோன்று, கட்டான பிரதேச சபைத் தேர்தலிலும் எமது கட்சியில் பலத்தை அதிகரிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்''- என்றார். இந் நிகழ்வில் மேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஷாபி றஹீம், கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், கம்பஹா மாவட்ட முக்கியஸ்தர்கள், கட்டான பிரதேச கட்சியின் மத்திய முழு உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் பங்கேற்றனர்.

# தென்னிலங்கை கட்சிகள் தமிழ் மக்களுக்கு நியாயம் வழங்குகின்ற கட்சிகளாக இல்லை

## சிங்களக் கட்சிகள் படுகொலைகளைச் செய்தாலும் அவர்கள் நடவடிக்கை எடுக்கமாட்டார்கள் என்கிறார் ஸ்ரீநேசன்

**(வீரமுனை செய்தியாளர்)**

''எந்தச் சந்தர்ப்பத்திலும் சிங்களக் கட்சிகள் அல்லது தென்னிலங்கைக் கட்சிகள் தமிழ் மக்களுக்கு நியாயம் வழங்குகின்ற கட்சிகளாக இல்லை. எந்தச் சிங்களக் கட்சி வந்து படுகொலைகளைச் செய்தாலும் அதற்கு அவர்கள் நடவடிக்கையெடுக்க மாட்டார்கள்'' - என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மண்முனை தென்மேற்கு பிரதேச சபைக்கான வேட்பாளர் அறிமுகமும் தேர்தல் பிரசாரக் கூட்டமும் நேற்றுமுன்தினம்(16) மாலை முதலைக்குடா விக்னேஸ்வரா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், ஞா.ஸ்ரீநேசன் மற்றும் இ.சிறிநாத்,இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் துரைராஜசிங்கம், பட்டிப்பளைக் கிளைத் தலைவர், நிர்வாக உறுப்பினர்கள், வேட்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வு ஆரம்பமாகி உயிர்நீத்த தமிழ்த் தேசியப் பற்றாளர்கள் மற்றும் தியாகிகளை நினைவுகூரும் முகமாக பொதுச்சுடரேற்றி அகவணக்கம் செலுத்தப்பட்டது. இதனைத்தொடர்ந்து இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் மண்முனை தென்மேற்கு பிரதேச சபைக்காகப் போட்டியிடும் வட்டார வேட்பாளர்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

''மூன்று வகையான கட்சிகள் இந்த மண்ணில் போட்டியிடலாம். ஒன்று, தென்னிலங்கை சார்ந்த பேரினவாதக் கட்சிகளின் அனுசரணையுடன் போட்டியிடுகின்ற கட்சிகள் ஒருவகை. இன்னுமொரு வகை கட்சி இந்தத் தென்னிலங்கைக் கட்சிகளுக்கு வாக்குகளைச் சேர்த்துக் கொடுக்கின்ற அல்லது தென்னிலங்கைக் கட்சிகள் எங்கள் மீது மேற்கொள்கின்ற இடர்கள் அல்லது துயர்களுக்கு பக்கபலமாக இருக்கின்ற கட்சிகள். மூன்றாவது வகை, எமது கட்சி தமிழரசுக் கட்சி



போட்டியிடுகின்றது.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் முத்து பண்டாக்கள் முத்துலிங்கத்துக்கு வாக்களிப்பதில்லை. அதேபோன்று, முஸ்தபாக்களும் முத்துலிங்கத்துக்கு வாக்களிக்க மாட்டார்கள். அதாவது, சிங்கள இனத்தைச் சார்ந்தவர்களும் முஸ்லிம் இனத்தைச் சார்ந்தவர்களும் ஒருபோதும் தமிழ் வேட்பாளர்களுக்கு வாக்களிப்பதில்லை. ஆனால், முத்துலிங்கம் என்ன செய்வாரென்றால் முத்துலிங்கத்துக்கும் வாக்களிப்பார் முஸ்தபாவுக்கும் வாக்களிப்பார் முத்து பண்டாக்கும் வாக்களிப்பார்.

இந்த நாடு பொதுவாக இனவாத ரீதியாகப் பிரிந்திருக்கின்ற நாடு. சமத்துவ அடிப்படையில் சிந்திக்காத ஒரு நாடு. இந்த நாட்டில் தமிழர்கள் தமது உரிமையைப் பெறவில்லை, தரவில்லை. இவ்வாறிருக்கின்றபோது எங்களுடைய வாக்குகளைச் சிதறடிப்பதன் மூலமாக தமிழர்களின் பிரச்சினை தீர்ந்து விட்டது, தென்னிலங்கை சார்ந்த கட்சிகளுக்கு வாக்களித்து விட்டார்கள், பாராளுமன்றத் தேர்தலில் எங்களோடு நின்றார்கள், உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் எங்களோடுதான் நிற்கின்றார்கள் என்று அவர்கள் பாராளுமன்றத்திலும் சர்வதேச மட்டத்திலும் குரல் கொடுப்பதற்கு இந்தத் தேர்தல் தென்னிலங்கைக் கட்சிக்கு சாதகமாக அமைந்தால் அது அவர்களுக்கு வாய்ப்பாக அமையும்.

இந்தச் சபையைக் கைப்பற்றக்கூடிய - ஆளக்கூடிய ஒரு கட்சியாக இருக்கக்கூடிய தமிழரசுக் கட்சிக்கு வாக்களியுங்கள். கொக்கட்டிச்சோலையில் 1987இல் ஒரு படுகொலை இடம்பெற்றது. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி செய்த காலத்தில் மகிழடித்தீவிலும் ஒரு படுகொலை இடம்பெற்றது. கொத்தணி படுகொலைகளைக் கூறுகின்றேன். இந்த இரண்டு படுகொலைகள் இடம்பெற்றதன் பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 1994ஆம் ஆண்டு ஆட்சியைக் கைப்பற்றியது. அந்தக் கட்சி எந்தச் சந்தர்ப்பத்திலும் ஐக்கிய தேசியக் கட்சியினரின் காலத்தில் நடைபெற்ற படுகொலையை விசாரிப்பதற்கு முற்படவில்லை, எங்களுக்கு நீதி தரவில்லை.

இதேபோன்று, சந்திரிகா அம்மையார் ஆட்சி செய்த காலத்தின்போது செம்மணி புதைகுழிப் படுகொலைகள் இடம்பெற்று குழிகளுக்குள் போட்டு மூடி விட்டார்கள். அந்தச் சந்தர்ப்பத்திலும் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வருகின்றபோது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி செய்த படுகொலைகளை விசாரிக்க மாட்டார்கள்.

இப்போது 77 ஆண்டுகளுக்குப் பின்னர் தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்துள்ளது. இவர்களைப் பொறுத்தளவில் இவர்கள் என்ன செய்யப் போகின்றார்கள்? எமக்கு 56ஆம் ஆண்டு படுகொலைகள் இருக்கின்றன, 58ஆம் ஆண்டு படுகொலைகள் இருக்கின்றன, 61, 64, 74, 77 என தொடர் படுகொலைகள் இருக்கின்றன.

அவ்வாறென்றால், அதிகமான படுகொலைகளைச் சந்தித்த இனம் தமிழினம். இதற்கான ஆணைக்குழுக்களை வைத்து அவர்கள் விசாரிப்பார்கள் என்று எதிர்பார்த்தோம். ஆனால், அவர்கள் பட்டலந்த படுகொலை சம்பந்தமாக விசாரணை நடத்துகின்றார்கள். வடக்கு, கிழக்கிலும் விசாரணைகள் நடத்துவோமென்று கூறுகின்றார்கள்.

ஆனால், 56, 83 படுகொலைகள் மிகவும் மோசமான படுகொலைகள். இதற்கான ஆணைக்குழுக்கள் அமைக்கப்படவில்லை. எந்தச் சந்தர்ப்பத்திலும் சிங்களக் கட்சிகள் அல்லது தென்னிலங்கைக் கட்சிகள் தமிழ் மக்களுக்கு நியாயம் வழங்குகின்ற கட்சிகளாக இல்லை. எந்தச் சிங்களக் கட்சி வந்து படுகொலைகளைச் செய்தாலும் அதற்கு அவர்கள் நடவடிக்கை எடுக்க மாட்டார்கள். ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் கொக்கட்டிச்சோலையில் பாரிய படுகொலை இடம்பெற்றது. அந்தக் கட்சியிலும் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஆட்கள் இருக்கின்றார்கள்.

சந்திரிகா அம்மையார் காலத்திலும் ஸ்ரீமாவோ அம்மையார் காலத்திலும் படுகொலைகள் இடம்பெற்றன. நீதி கிடைக்கவில்லை. ஆனால், போட்டியிடுவதற்கு வேட்பாளர்கள் இருக்கின்றார்கள். இந்தக் கட்சிகளுக்கு பக்கபலமாக ஒட்டுண்ணிகளாக அல்லது ஒட்டுறவாளர்களாக சில கட்சிகளும் இருக்கின்றன. அதற்கும் வாக்களிக்கின்றார்கள்.

எனவே, தென்னிலங்கைக் கட்சிகளுக்கு வாக்களிக்க வேண்டிய அவசியமும் இல்லை. அந்தக் கட்சிகளுக்கு ஒத்தூதுகின்ற கட்சிகளுக்கு வாக்களிக்க வேண்டிய அவசியம் இல்லை. இந்தச் சபையைக் கைப்பற்றக்கூடிய ஒரேயொரு கட்சியான தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும்'' - என்றார்.

# நிந்தவூரில் தொற்றாநோய்கள் பற்றிய விழிப்புணர்வு நடைபவனி





**(மாளிகைக்காடு செய்தியாளர்)**

தொற்றா நோய்களிலிருந்து மக்களை விழிப்புணர்வூட்டும் முகமாக நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே.சிவசுப்பிரமணியம் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் ஏற்பாட்டில் நிந்தவூர் 11ஆம் பிரிவு மக்களுக்கு தொற்றாநோய் சம்பந்தப்பட்ட மருத்துவ பரிசோதனைகள் நேற்று(17) இடம்பெற்றன.

இன்றைய காலகட்டத்தில் தொற்றுநோய் மூலம் நிகழும் மரணங்களை விட தொற்றாநோய்கள் மூலம் நிகழும் இழப்புகளும் மரணங்களும் அதிகரித்து வருகின்றன.

தொற்றாநோய்கள் மூலம் நிகழும் இழப்புகள் மற்றும் பொருளாதார இழப்புகளிலுமிருந்தும் மீள முடியாமல் பல குடும்பங்கள் தவிக்கின்றன. மக்களிடையே தொற்றாநோய்கள் பற்றிய விழிப்புணர்வும் மிகக் குறைவாகவே காணப்படுகிறது.

அத்துடன், தொற்றாநோய்கள் பற்றிய விழிப்புணர்வு நடைபவனி ஏற்பாடு செய்யப்பட்டு சிறப்பாக இடம்பெற்றது. இதன்போது 'ஆரோக்கியமான உணவு, ஆரோக்கியமான வாழ்க்கை' எனும் தொனிப்பொருளில் தொற்றா நோய்கள் தொடர்பான விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்திய வண்ணம் நிந்தவூர் 11ஆம் பிரிவைச் சேர்ந்த மகளிர் சங்க உறுப்பினர்கள் இந்த நடைபவனியை ஜின்னா பள்ளிவாசல் வீதியில் ஆரம்பித்து நிந்தவூர் பிரதேச செயலகம் வரை சென்றனர். இந்நிகழ்வில் பிரதேச செயலக ஊழியர்களும் கலந்துகொண்டனர்.



**கிண்ணியா அல்-அக்ஸா ஆரம்பப் பாடசாலையில் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த எட்டு மாணவர்களையும் மற்றும் 137 புள்ளிகளைப் பெற்ற இரண்டு மாணவர்களையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை (15) பாடசாலை மண்டபத்தில் அதிபர் எம்.ஐ.ரஹ்மத்துல்லா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளர் சீனத்துல் முனவ்வரா நளீம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு மாணவர்களுக்கு மாலை அணிவித்து, நினைவுச் சின்னங்கள், சான்றிதழ்கள் மற்றும் பரிசில்கள் வழங்கி கௌரவித்தார். (தம்பலகாமம் செய்தியாளர்)**

# மட்டக்களப்பு மாவட்ட செயலக வளாகத்தை சுத்தப்படுத்தும் பணி



**(மட்டக்களப்பு)**

கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தின் கீழ் சூழல் மேம்பாட்டு நோக்கின் பங்களிப்பாக திராய்மடு மாவட்ட செயலக வளாகத்தின் கட்டிடத் தொகுதியை சூழவுள்ள நிலப்பரப்பை சுத்தப்படுத்தும் பணியில் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் கிழக்கு வலய அலுவலகம், மாவட்ட காணிப்பதிவகம் ஆகியன நேற்றுமுன்தினம் (16) ஈடுபட்டன.

மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் மேலதிக அரசாங்க அதிபர் சுதர்ஷினி ஸ்ரீகாந்தின் மேற்பார்வையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில், பிரதிப் பதிவாளர் நாயகம் கே.நடராஜா தலைமையில் நடைபெற்ற சுத்தப்படுத்தும் பணியை பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் கிழக்கு வலய அலுவலகம் மற்றும் மாவட்ட காணிப்பதிவகம் என்பவற்றில் சேவையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமைத்துவ சேவை அலுவலர்கள் எனப் பலர் முன்னெடுத்தனர்.

அதனடிப்படையில், பயன் தரும் மரங்கள் மற்றும் அழகுத் தாவரங்களை நட்டு பூந்தோட்டம் அமைத்தல் போன்ற செயற்பாடுகள், மாவட்ட செயலகத்தில் இயங்கி வரும் சகல அரச திணைக்களங்கள், மாவட்ட அலுவலகங்கள் மற்றும் பிரிவுகளில் பணிபுரியும் அரசாங்க உத்தியோகத்தர்களால் நடை முறைப்படுத்துவதற்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

# வீதி அபிவிருத்தி அமைச்சின் பதில் செயலாளராக பைஷல் கடமையேற்பு



**(மீனோடைக்கட்டு செய்தியாளர்)**

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மோட்டார் போக்குவரத்து மற்றும் பயணிகள் போக்குவரத்து, கட்டிடங்கள் மற்றும் நிர்மாணம், வீடமைப்பு, கிராமிய மின்சாரம் மற்றும் நீர்வழங்கள் அமைச்சின் பதில் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள இஷட்.ஏ.எம்.பைஷல் தனது கடமைகளை நேற்றுமுன்தினம் (16) பொறுப்பேற்றுக் கொண்டார்.

வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றி வந்த எம்.எம்.நஸீர் கடந்த 11 ஆம் திகதி ஓய்வுபெற்றுச்சென்றதையடுத்தே, கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளராகக் கடமையாற்றி வந்த பைஷல் அப்பதவிக்கு மேலதிகமாக வீதி அபிவிருத்தி அமைச்சின் பதில் செயலாளராக பொருட்டு ஆளுநர் ஜயந்தலால் ரட்ணசேகரவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண அமைச்சின் செயலாளர்கள், மாகாணத் திணைக்களத் தலைவர்கள், அமைச்சின் உயரதிகாரிகள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.



உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பில் காரைதீவு பிரதேச சபைக்குப் போட்டியிடும் மாவடிப்பள்ளி, மாளிகைக்காடு வேட்பாளர்களுடனான சந்திப்பு புதன்கிழமை(16) இடம்பெற்றது. கட்சியின் பிரதித் தலைவர் டாக்டர் ஷரீஃப் ஹக்கீம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், பிரமுகர்கள் மற்றும் வேட்பாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (கோணாவத்தை செய்தியாளர்)



கிழக்கு மாகாணத்தின் மிகப்பெரிய நீர்ப்பாசனக் குளங்களில் ஒன்றான உன்னிச்சை குளம் வெளிநாட்டு, உள்நாட்டு சுற்றுலாப்பயணிகளை கவர்ந்த பிரதேசமாக மாறிவருகிறது. உன்னிச்சை குளத்தில் பெரும் எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் நீராடி வருவதை அவதானிக்க முடிகின்றது. இங்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கான அடிப்படை வசதிகளை செங்கலடி பிரதேச சபை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (காத்தான்குடி மேலதிக செய்தியாளர்)

# ஞாயிறன்று திருமலையில் தொற்றாநோய், இரத்ததானம் தொடர்பான விழிப்புணர்வு

**(கிண்ணியா செய்தியாளர்)**

இரத்ததான முகாம் மற்றும் தொற்றாநோய்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்வு எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிமுதல் மதியம் 1.00 மணிவரை திருகோணமலை கடற்படைத்தள வீதியின் பெரியகடை சந்தைக் கட்டிடத் தொகுதியில் அமைந்துள்ள தளம் நிறுவக வளாகத்தில் நடைபெறவுள்ளது.

அகில இலங்கை சுதேச மருத்துவ எதிர்கால சேவைச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் குறித்த விழிப்புணர்வு நிகழ்வில் தொற்றாநோய்களைத் தடுத்தல் மற்றும் சிகிச்சையளித்தல் குறித்து விளக்கமளிக்கப்படும்.

'நம்பிக்கையின் ஒரு துளி, வாழ்வின் ஒரு பரிசு' என்ற கருப்பொருளுடன், இரத்ததானத்தின் உயிர்காக்கும் சக்தியை எடுத்துக்காட்டுகிறது. இரத்ததானமானது, அவசர சிகிச்சை, அறுவை சிகிச்சைகள் மற்றும் கடுமையான நோய்களால் பாதிக்கப்படுபவர்களுக்கு சிகிச்சையளிப்பதில் ஒரு முக்கியமான மாற்றத்தை ஏற்படுத்தும்.

இதில் கலந்துகொள்ளுமாறு அனைத்து பொதுமக்களும் அழைக்கப்படுகின்றார்கள்.

# யாழில் ஒட்டப்பட்ட அநுரவின் சுவரொட்டியால் வெடித்தது சர்ச்சை!

## கிளீன் ஸ்ரீலங்கா திட்டம் எங்கே என விசனம்

(பு.கஜிந்தன்)


யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் படம் உள்ளடங்கிய சுவரொட்டிகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க கலந்துகொள்ளும் கூட்டமானது நேற்று (17) யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நிலையில், அந்தக் கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கும் முகமாக ஜனாதிபதியின் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

ஜனாதிபதி அநுரகுமார ஆட்சிக்கு வந்த பின்னர் வாகனங்களில் இருக்கும் அலங்காரங்கள், வீதி மதில்களில் இருக்கும் சுவரொட்டிகள் அனைத்தையும் கிளீன் ஸ்ரீலங்கா என்ற வேலைத்திட்டத்தின் கீழ் தூய்மைப்படுத்தி வரும் நிலையில், அவரது கூட்டத்துக்கான அழைப்பு சுவரொட்டிகள் இவ்வாறு காட்சிப்படுத்தப்பட்டிருந்தமை மக்கள் மத்தியில் விசனத்தையும் தேசிய மக்கள் சக்தி மீது நம்பிக்கையீனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.தாங்கள் எவ்வாறு வேண்டுமானாலும் நாட்டை அசுத்தமாக்கலாம். இதுவே வேறு யாராவது செய்தால் அது குற்றம் என்ற வகையில் தற்போதைய அரசு செயற்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.



# கம்பளை அம்புலுவாவ சுற்றுலாத்தளத்தில் புதிய பார்வையாளர் மண்டபம் திறப்பு







(கலஹா செய்தியாளர்)

கம்பளை, அம்புலுவாவ சுற்றுலாத்தளத்தில் அமைந்துள்ள தி.மு.ஜயரட்ண மத மையம் மற்றும் பன்முக கலாசார வளாகத்தில் புதிதாக நவீன வசதிகளுடன் கட்டப்பட்ட பார்வையாளர் மண்டபத் திறப்பு விழா பாராளுமன்ற உறுப்பினர் அநுராத ஜயரட்ணவின் ஏற்பாட்டில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சர்வமதத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது அஸ்கிரிய பீடத்தின் அனுநாயக்கர் வணக்கத்துக்குரிய ஆனமடுவே தம்மதஸ்சி தேரர் நினைவுப் படிகத்தை திரை நீக்கம் செய்து வைத்தார்.இந்த நிகழ்வில் சர்வமதத் தலைவர்கள், கம்பளையில் உள்ள மூவின சமூகங்களையும் சேர்ந்த முக்கியஸ்தர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# அரச சேவையின் முன்மாதிரியான நிறுவனமாக மாறி பொறுப்புகளை முறையாக நிறைவேற்றுவோம்

## ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத் குமாநாயக்க





நாட்டில் புதிய மாற்றத்தை ஏற்படுத்துவதன்மூலம் புதிய நாட்டை உருவாக்கும் ஜனாதிபதியின் திட்டத்தை வலுப்படுத்த, அரச சேவையில் உள்ள அனைவரும் புதிய ஆற்றலுடனும் உறுதியுடனும் செயற்படுவார்கள் என்று தான் எதிர்பார்ப்பதாக ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலக ஊழியர்கள் சிங்கள, தமிழ்ப் புத்தாண்டுக்குப் பிறகு புதிய வருடத்துக்கான பணிகளை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (16) முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க தலைமையில் நடைபெற்றது. அதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க மேலும் தெரிவிக்கையில், அரச சேவையில் முன்மாதிரியான நிறுவனமாக மாறுவதன்மூலம், புதிய மனப்பாங்குகளை வளர்த்துக் கொண்டு தங்களுக்கு வழங்கப்படும் பொறுப்புகளை முறையாக நிறைவேற்றுமாறு ஊழியர்களுக்கு அழைப்புவிடுத்தார்.

அதனைத் தொடர்ந்து சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டை கொண்டாடுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட தேநீர் விருந்திலும் ஜனாதிபதியின் செயலாளர் உட்பட ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர்களான கபில ஜனக பண்டார, ரோஷன் கமகே மற்றும் ஜனாதிபதி செயலக ஊழியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# உலகில் அதிக சிறுத்தைகள் வாழும் காடுகளின் பட்டியலில் குமண தேசிய பூங்கா இரண்டாமிடம்




உலகில் அதிக சிறுத்தைகள் வாழும் காடுகளின் பட்டியலில் இலங்கையின் குமண தேசிய பூங்கா இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளதாக ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் விலங்கியல் துறையைச் சேர்ந்த வனவிலங்கு ஆராய்ச்சியாளர்கள் குழு நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

குமண தேசிய பூங்காவில் நூறு சதுர கிலோமீற்றர் பரப்பளவில் சுமார் 41 சிறுத்தைகள் வாழ்வதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

இந்த ஆய்வில் சிறுத்தைகளின் எண்ணிக்கை அடர்த்திக்கு மேலதிகமாக ஆராய்ச்சியாளர்கள் அவற்றின் இடஞ்சார்ந்த பரவல் மற்றும் செயற்பாட்டு முறைகளிலும் அவதானம் செலுத்தியுள்ளனர்.

இலங்கையின் காடுகளில் வாழும் மிகப்பெரிய சிறுத்தை இனமான Panthera Pardus Kotiy, நாட்டில் மிகவும் அழிந்து வரும் ஒரு உயிரினமாக இருப்பதால், இந்த ஆராய்ச்சித் தரவு பாதுகாப்பாளர்களுக்கு அவர்களின் பாதுகாப்பு முயற்சிகளில் உதவியாக இருக்கும் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

## ஹெரோயினுடன் ஒருவர் கைது

ராமு தனராஜா

ஹாலி-எல பகுதியில் ஹெரோயினுடன் நேற்று முன்தினம் (16) ஒருவர் கைது செய்யப்பட்டதாக ஹாலி-எல பொலிஸார் தெரிவித்தனர்.

கெடவல வீதி, துனுவங்கிய, சமகிபுர, ஹாலி-எல பகுதியை சேர்ந்த 32 வயதுடைய நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஹாலி-எல பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய வீதியில் சென்று கொண்டிருந்த குறித்த நபரை சோதனைக்குட்படுத்தியபோது சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 5500 மில்லி கிராம் ஹெரோயினை மீட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# கைவிடப்பட்ட வயல்களை பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்தும் அரசாங்கத்தின் திட்டம் ஆரம்பம்

கைவிடப்பட்ட வயல்களை பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தும் அரசாங்கத்தின் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கைவிடப்பட்ட வயல்களை பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தும் அரசாங்கத்தின் திட்டத்தின் கீழ் மாத்தறை மாவட்டத்தில் 5000 ஏக்கருக்கும் மேற்பட்ட வயல்கள் பயிர்ச்செய்கைக்குட்படுத்தப்படவுள்ளன.

அதற்கமைய, பஸ்கொட பிரதேச செயலாளர் பிரிவின் ரொட்டும்ப வயல்வெளியை பயிர்ச் செய்கைக்குப் பயன்படுத்துவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன், ரொட்டும்ப பிரதேச விவசாயிகளின் தலைமையில் நெல் விதைப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# தேசிய மக்கள் சக்தி வேட்பாளர் மீது தமிழரசுக் கட்சி வேட்பாளர் தாக்குதல்

## ஜெகதீஸ்வரன் எம்.பி. குற்றச்சாட்டு





(சி.திவியா)

தேசிய மக்கள் சக்தியின் மாந்தை மேற்கு ஆண்டான்குளம் வேட்பாளர் மீது மது போதையில் தமிழரசுக் கட்சி வேட்பாளர் உள்ளிட்ட குழுவினர் தாக்குதல் நடத்தியுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் ஜெகதீஸ்வரன் எம்.பி. மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை தமிழரசுக் கட்சியின் வட்டக்கண்டல் வேட்பாளர் உட்பட்ட சிலர் மாந்தை கிழக்கு ஆண்டான்குளம் தேசிய மக்கள் சக்தி வேட்பாளர் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். தாக்குதல் நடத்தியவர்கள் அடம்பன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். எமது கட்சி வேட்பாளர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதியின் கட்சியில் கேட்பவர் இவர் தான் எனக் கூறி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதற்கு மன்னார் மாவட்ட சட்டத்தரணிகள் சிராஸ்வா, டெனீஸ்வரன் ஆகியோர் தாக்குதல் நடத்தியவர்கள் சார்பாக ஆஜராகினர்.

தாக்குதல் நடத்தியவர்கள் கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# புதையல் தோண்டிய ஐவர் கைது

(அநுராதபுரம் நிருபர்)

புதையல் தோண்டிய சம்பவத்துடன் தொடர்புடைய பெண் சந்தேக நபர் உள்ளிட்ட ஐவர் அநுராதபுரம், மரதன்கடவல பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலொன்றுக் கமைய நேற்று முன்தினம் (16) மரதன்கடவல பொலிஸ் பிரிவின் இஹலபுளியங்குளம பகுதியிலுள்ள தொல்பொருள் பாதுகாப்பு வனப்பகுதியில் நடத்திய சுற்றிவளைப்பின் போது புதையல் தோண்டிக் கொண்டிருந்த சந்தேக நபர்கள் ஐந்து பேரை கைதுசெய்துள்ளதுடன், புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்திய உபகரணங்களையும் மரதன்கடவல பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் 40, 42, 45, 48, 52 வயதுகளையுடைய கெக்கிராவ, கலாவெவ ,மரதன்கடவல மற்றும் இஹலபுளியங்குளம பகுதியை வசிப்பிடமாகக் கொண்டவர்கள் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய தப்பியோடிய மேலும் நான்கு பேரை கைது செய்வதற்காக பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மரதன்கடவல பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்கள் கெக்கிராவ நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.





**ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச கலந்துகொண்ட பிரசாரக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை (15) அக்கரைப்பற்று அதாவுல்லா அரங்கில் நடைபெற்றது. ஐக்கிய மக்கள் சக்தியின் அக்கரைப்பற்று பிரதேச அமைப்பாளரும் வேட்பாளருமான சமீம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், உயர் பீட உறுப்பினர்கள், மாவட்ட அமைப்பாளர்கள் எனப் பெருந்திரளான ஆண், பெண் ஆதரவாளர்கள் கலந்துகொண்டனர்.**
**(கோணாவத்தை செய்தியாளர்)**

# லொறி – சைக்கிள் மோதி விபத்து

## ஒருவர் பலி

(அநுராதபுரம் நிருபர்)

கண்டி - யாழ்ப்பாணம் ஏ9 பிரதான வீதி மரதன்கடவல பகுதியில் லொறி யொன்று சைக்கிள் ஒன்றுடன் மோதி விபத்துக் குள்ளானதில் பலத்த காயங்களுக்குள்ளான சைக்கிள் ஓட்டுனர், மரதன்கடவல வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக மரதன்கடவல பொலிஸார் தெரிவித்தனர்.

மரதன்கடவல நகரில் நேற்று முன்தினம் (16) பகல் இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மரதன்கடவல 30 வீட்டுத்தொகுதியை வசிப்பிடமாகக் கொண்ட 74 வயதுடைய ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

பிரேத பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக சடலம் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் மரதன்கடவல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று வீதம் (17.04.2025)

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 185.3127 | 194.8020 |
| கனேடியன் டொலர் | 210.7833 | 219.6958 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 39.4561 | 42.0094 |
| யூரோ | 333.1014 | 346.3132 |
| ஜப்பான் யென் | 2.0558 | 2.1363 |
| சிங்கப்பூர் டொலர் | 222.4555 | 232.3942 |
| ஸ்ரேலிங் பவுன் | 387.7881 | 402.2418 |
| சுவிஸ் பிராங் | 357.6549 | 374.0253 |
| ஐ.அ. டொலர் | 294.3851 | 303.0313 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 792.2284 |
| குவைட் | குவைட் தினார் | 973.9045 |
| ஓமான் | ஓமான் றியால் | 775.6730 |
| கட்டார் | கட்டார் றியால் | 81.8503 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 79.5807 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 81.2999 |

# தமிழன் வணிக உலகம்
Thamilan Business World

www.thamilan.lk businessthamilan@gmail.com

## PayMaster இன் புத்தாக்க கண்டுபிடிப்பு HOPPR அறிமுகம்



இலங்கையிலுள்ள விருது பெற்ற முன்னணி டிஜிட்டல் கட்டண செயலியான PayMaster ஆனது, HOPPR இனை அறிமுகப்படுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது. இது ஓர் அதிநவீன வாகன சவாரி சேவை அம்சமாகும். இது சாரதிகள் மற்றும் வாடிக்கையாளர்கள் முதல் அனைத்து பங்குதாரர்களுக்கும் டிஜிட்டல் கொடுப்பனவுகள் மற்றும் கடன் அணுகல் மூலம் நிதிச் சுதந்திரத்தை வழங்குவதன் மூலம் சந்தையை மாற்றியமைக்கவுள்ளது.

HOPPR ஆனது, வெறுமனே வாகன சவாரி சேவைக்கப்பால், நிதி வலுவூட்டலுக்கான ஒரு கருவியாகும். இது PayMaster உடன் ஒன்றிணைந்து செயற்படுகிறது. இது பயனர்கள் பணத்தைப் பயன்படுத்தாமல் பயணங்களைத் திட்டமிடவும் நீண்ட கால வருமான வழிகளை உருவாக்கவும் வாய்ப்பளிக்கிறது.

தனித்துவமான பரிந்துரைக்கும் முறை மூலமான நிலைபேறான வருமான உத்தியின் அடிப்படையில் இது நிறுவப்பட்டுள்ளது. இங்கு சாரதிகள் மேற்கொள்ளும் பரிந்துரையின் மூலம் இணையும் ஒவ்வொரு பயனருக்கும் வாழ்நாள் முழுவதுமான வருமானத்தைப் பெற முடியும். அதற்கமைய, பயணிகள் மற்றும் சாரதிகள் ஆகிய இரு தரப்பினரும் வெறுமனே ஒரு பங்கேற்பாளர்களாக அன்றி, இத்தளத்தின் மதிப்புமிக்க பங்குதாரர்களாக மாறுகின்றனர் என்பதை இது வலியுறுத்துகிறது. அத்துடன், மாற்று வருமான வழிகளை அங்கீகரிக்கும் AIஇனால் செயற்படுத்தப்படும் கடன் கட்டமைப்பான CREDDYஆனது, HOPPR உடன் இணைக்கப்பட்டுள்ளது.

## தங்க விருதை வென்ற LOLC ஃபைனான்ஸ்




இலங்கையின் மிகப் பெரிய வங்கியல்லாத நிதி நிறுவனமான LOLC ஃபைனான்ஸ் பிஎல்சி (NBFI), அதன் தொழிற்றுறைத் தலைமைத்துவத்தை மீண்டும் நிரூபித்துள்ளதுடன், LankaPay Technnovation விருதுகள் 2025இல் மறுக்கமுடியாத சம்பியனாக உருவெடுத்துள்ளது. டிஜிட்டல் நிதி புதுமை அதிகார மையம் ஐந்து தங்க விருதுகள் மற்றும் ஒரு மெரிட் விருது உட்பட ஆறு மதிப்புமிக்க பாராட்டுகளைப் பெற்றது, இது ஃபின்டெக் நிலப்பரப்பில் அதன் ஆதிக்கத்தை உறுதிப்படுத்துகிறது. குறிப்பிடத்தக்க வகையில், தொடர்ந்து ஆறாவது ஆண்டாக டிஜிட்டல் கொடுப்பனவுகளில் சிறந்து விளங்கும் தங்க விருதையும் வென்றது.

மற்றொரு குறிப்பிடத்தக்க சாதனையில், LOLC ஃபைனான்ஸ் சிறந்த டிஜிட்டல் மூலோபாயத்துக்கான தங்க விருதை வென்றுள்ளது. இது வங்கி மற்றும் NBFI பிரிவுகளில் ஆதிக்கம் செலுத்துகிறது. இந்த வெற்றியானது, டிஜிட்டல் புத்தாக்கத்தில் LOLC ஃபைனான்ஸ் இன் நிலைப்பாட்டை வலுப்படுத்துகிறது. இது டிஜிட்டல் நிதித்துறையில் இலங்கையின் முன்னணி வங்கிகளுடன் போட்டியிடுவது மட்டுமன்றி, முன்னணி வங்கிகளுடன் பிரகாசிக்கும் அதன் திறனை வெளிப்படுத்துகிறது. டிஜிட்டல் நிதிச் சேவைகளை மறுவரையறை செய்வதில், வாடிக்கையாளர் தேவைகள், ஒழுங்குமுறை நிலப்பரப்புகள் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் ஆகியவற்றுடன் தொடர்ந்து மாற்றியமைக்கும் முன்னோக்கு சிந்தனை அணுகுமுறையை நிரூபிக்கும் நிறுவனத்தின் உறுதிப்பாட்டுக்கு இந்த அங்கீகாரம் ஒரு சான்றாக விளங்குகிறது.



**சன்ஷைன் ஹோல்டிங்ஸ் குழுமத்தின் நிறைவேற்று அதிகாரி பதவியிலிருந்த விஷ் கோவிந்தசாமி, அப்பதவியிலிருந்து விலகி, பிரதித் தலைவராக நிறைவேற்று அதிகாரமில்லாத பதவியை வகிப்பதாக நிறுவனம் அண்மையில் அறிவித்துள்ளது. கோவிந்தசாமி தொடர்ந்து குழுமத்தின் ஆலோசகராகப் பணியாற்றுவார். கோவிந்தசாமியை கௌரவமளிக்கும் நிகழ்வாகவும் அவரது தனித்துவமான தொழில்முனைவோர் பயணத்துக்கும் குழுமத்தின் முன்னேற்றத்துக்காக அவர் ஆற்றிய மாபெரும் சேவைகளை கௌரவிக்கும் வகையிலும் அண்மையில் விசேட நிகழ்வொன்று நடைபெற்றது. இந்நிகழ்வில் நாட்டின் முன்னணி தொழிலதிபர்கள், சன்ஷைன் ஹோல்டிங்ஸின் சிரேஷ்ட தலைமை ஊழியர்கள் மற்றும் துறையின் பிற தலைவர்கள் கலந்துகொண்டனர்.**

## Prime Lands Residencies PLC பணிப்பாளர் சபைக்கு சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க நியமனம்



இலங்கையின் முன்னணி ரியல் எஸ்டேட் வடிவமைப்பாளராகத் திகழும் Prime Lands Residencies PLC, தனது பணிப்பாளர் சபையின் அங்கத்தவராக சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்கவை நியமித்துள்ளதாக அறிவித்துள்ளது. சுயாதீன, நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளராக நியமிப்பதற்கு 2025 மார்ச் 27ஆம் திகதி பணிப்பாளர் சபையால் தீர்மானிக்கப்பட்டு, உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகவும் நிறுவனம் அறிவித்துள்ளது.

பொருளாதாரம், ஆளுகை மற்றும் கூட்டாண்மை மூலோபாயம் ஆகிய விடயங்கள் தொடர்பில் பரந்த அனுபவத்தை பேராசிரியர் அமரதுங்க கொண்டிருப்பதுடன், இலங்கையின் சொகுசான வாழிட அனுபவத்தை மாற்றியமைக்கும் முக்கியத்துவம் வாய்ந்த அபிவிருத்தித் திட்டங்களை Prime Lands Residencies PLC முன்னெடுக்கும் நிலையில், இவரின் நியமனம் நிறுவனத்தின் தலைமைத்துவத்தை மேலும் வலிமைப்படுத்தும் வகையில் அமைந்திருக்கும்.

நன்மதிப்பு பெற்ற கல்விமானும் நிர்வாகியுமாக திகழும் பேராசிரியர் அமரதுங்க, தற்போது ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் வியாபார பொருளாதார சிரேஷ்ட பேராசிரியர் மற்றும் தவிசாளராகத் திகழ்கிறார். இவர் இலங்கை பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக் குழுவின் தவிசாளர் மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் உப வேந்தராகவும் பணியாற்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## டேவிட் பீரிஸ் மோட்டார் அறிமுகப்படுத்திய 03 புதிய வகை பல்சர் மோட்டார் சைக்கிள்கள்





இலங்கை மக்களுக்குப் போக்குவரத்துத் தீர்வுகளை வழங்குபவர்களாக 40 வருடங்களுக்கு மேல் நம்பிக்கையைப் பெற்ற இந்நாட்டின் மிகப்பெரிய மோட்டார் நிறுவனமான டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தால் 03 புதிய வகை பஜாஜ் பல்சர் மோட்டார் சைக்கிள்களான பல்சர் N125, பல்சர் N160 Premium மற்றும் பல்சர் NS200 ஆகியவை அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டன. இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட பின்னர் இலங்கையில் இடம்பெற்ற முதலாவதும் பிரம்மாண்டமானதுமான மோட்டார் சைக்கிள் அறிமுக நிகழ்வாக இது அமைந்தது.

நவீன தொழில்நுட்பம், அதிகூடிய பாதுகாப்பு மற்றும் உயர்ந்த செயற்றிறனுடன் கூடிய இந்த மோட்டார் சைக்கிள் மாதிரிகளால் இலங்கையின் மோட்டார் சைக்கிள் துறையில் குறிப்பிடக்கூடிய மாற்றத்தை ஏற்படுத்த முடியும். பல்சர் N125 தவிர ஏனைய அனைத்து மாதிரிகளும் ABS பிரேக் கட்டமைப்பைக் கொண்டிருப்பதுடன், upside-down முன்பக்க ஷொக் அப்ஸோபர் ஊடாக அதிகபட்ச சௌகரியம், பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுகின்றது. எனவே, இந்தப் பிரிவில் சிறந்த மோட்டார் சைக்கிள் மாதிரிகளாக இவற்றை அறிமுகப்படுத்தலாம்.

சிறந்த வடிவமைப்பு, வலுசக்தி மற்றும் விறுவிறுப்பான செயற்றிறன் போன்ற காரணங்களால் உலகம் முழுவதிலும் பெயர் பெற்றுள்ள பல்சர் மோட்டார் சைக்கிள்கள், குறிப்பாக, இளைஞர்களின் வாழ்க்கை முறைக்குப் பொருந்தும் வகையில் சிறப்பாக வடிவமைக்கப்பட்டிருப்பதுடன், மோட்டார் சைக்கிள் ஆர்வலர்கள் அனைவருக்கும் தனித்துவமான உற்சாகமிக்க அனுபவத்தை வழங்குகின்றது.

## காலிமுகத்திடலில் பட்டம் ஏற்றலுடன் கொண்டாடப்பட்ட Hemas Outreach Foundationஇன் World Down Syndrome Day நிகழ்வுகள்



Hemas Outreach Foundation இன் (HOF) World Down Syndrome Day நிகழ்வுகள், ‘Eka Se Salakamu’ (Treat All Alike) சமூக முன்னெடுப்பின் அங்கமாக அண்மையில் முன்னெடுக்கப்பட்டன. காலிமுகத்திடலில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வின்போது பட்டம் ஏற்றும் கொண்டாட்டமும் அடங்கியிருந்தது. விசேட தேவையுடைய சிறுவர்களுக்கான AYATI தேசிய நிலையத்துடன் பணியாற்றி, Down syndrome தொடர்பில் விழிப்புணர்வை மேம்படுத்தல் மற்றும் அந்தக் குறைபாட்டுடன் வாழும் சிறுவர்களுடன் பொழுதைக் கொண்டாடும் வகையில் இந்த நிகழ்வு அமைந்திருந்தது.

மார்ச் மாதம் 21ஆம் திகதி World Down Syndrome Day கொண்டாடப்பட்டதுடன், இந்த நிலையிலுள்ள குழந்தைகளின் எல்லையற்ற ஆற்றல் மற்றும் மீள்தன்மையை மக்களுக்கு நினைவூட்டுவதற்கான ஒரு முயற்சியை இது பிரதிபலிக்கிறது. HOF’இன் கொண்டாட்டத்தில் Trisomy 21இலுள்ள மேலதிக குரோமோசோம்களைப் பிரதிபலிக்கும் வகையில் 100 பட்டங்கள் வடிவமைக்கப்பட்டிருந்ததுடன், விழிப்புணர்வூட்டல் மற்றும் ஏற்றுக்கொள்ளும் திறன் ஆகியவற்றில் சிறுவர்கள், குடும்பங்கள் மற்றும் நண்பர்களை ஒன்றிணைக்கும் வகையில் அமைந்துள்ளது.

Hemas Groupக்கு, Downs syndrome உடன் வாழும் ஒவ்வொரு குழந்தையின் துணிச்சலையும் மகிழ்ச்சியையும் மகிழ்விக்கும் ஒரு சந்தர்ப்பமாக இந்த நிலையைச் சுற்றியுள்ள தவறான கருத்துகளை அவிழ்த்து அவற்றை மாற்றுவதற்கான ஒரு தனித்துவமான முக்கியமான வாய்ப்பாக இந்தக் கொண்டாட்டம் அமைந்திருந்தது.

## தமிழ்-சிங்களப் புத்தாண்டைக் கொண்டாடும் முகமாக 2025 ஆண்டுக்கான SDB இதுறும் சரித்ரயா பதிப்பு வெளியீடு




SDB வங்கியானது தமிழ்-சிங்களப் புத்தாண்டுக் கொண்டாட்டத்தில் அதனது முக்கிய சேமிப்பு பிரசாரமான ‘SDB இதுறும் சரித்ரய’வின் 2025 ஆண்டுக்கான பதிப்பு வெளியீட்டை அறிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றது. இத்தொடக்கமானது விசுவாசமிக்க மற்றும் புதிய வாடிக்கையாளர்கள் என இருவருக்கும் நன்றிகளைத் தெரிவித்து உற்சாகமிகு பரிசுகளுடன் சேமிப்புக் கலாசாரத்தை வளர்த்தெடுப்பதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

தற்போது நடைமுறையிலிருக்கும் இப்பிரசாரமானது கவர்ச்சிகரமான பரிசுத் திட்டங்களுடன் விசேடமாக வடிவமைக்கப்பட்டுள்ள SDB சேமிப்பு சான்றிதழ்களில் முதலிடுவதற்கான தனித்துவமான வாய்ப்பை வாடிக்கையாளர்களுக்கு வழங்குகின்றது. ரூ. 100,000 வைப்பிலிடும் வாடிக்கையாளர்கள் நவீன பயணப்பையொன்றையும் ரூ. 250,000 வைப்பிலிடும் வாடிக்கையாளர்கள் 1.5 லீ ரைஸ் குக்கர் ஒன்றையும் பரிசாகப் பெறுவர். அதேசமயம், கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சங்கங்கள் என்பனவும் பயணப் பை ஒன்றையும் துருப்பிடிக்காத தெர்மோஸ் பிளாஸ்க் ஒன்றையும் முறையே ரூ. 250,000 அல்லது ரூ. 500,000 வைப்புகளுக்குப் பெறுகின்றன. இப்பிரசாரமானது புதுவருட இதுறும் சரித்ரய (சேமிப்பு) இனை விளம்பரப்படுத்தவும் புதிய சேமிப்புகளை ஊக்குவிக்கவும் வாடிக்கையாளர் உறவுகளை வலுப்படுத்தவுமாக நோக்கங்கொண்டுள்ளது. இது அதனது சேமிப்பு மையத்தையும் மற்றும் புதிய வாடிக்கையாளர் பிரிவுகளை அடையவுமான SDB வங்கியின் பரந்த பார்வையுடன் தடையற ஒருங்கிணைக்கின்றது.

இப்பிரசாரம் குறித்து SDB வங்கியின் சிரேஷ்ட வியாபார அதிகாரி திரு.சித்ரால் டி சில்வா கருத்துரைக்கையில், ‘‘SDB வங்கியின் இதுறும் சாரித்ரயவுடன் பாரம்பரியமும் மீளாக்கமும் நிறைந்த இக்காலப்பகுதியில் இலங்கையர்கள் மத்தியில் சேமிப்பின் காலந்தாண்டிய பெறுமதியை விதைக்க நோக்கங்கொண்டுள்ளோம். இத்தொடக்கமானது நிதித் திட்டமிடல் மாத்திரமன்றி எமது வாடிக்கையாளர்களது நம்பிக்கை மற்றும் விசுவாசத்துக்கான எமது பாராட்டுதல்களின் வெளிப்பாடுமாகும்’’ - என்றார்.

## DFCC வங்கி OrionStellar உடன் கைகோர்ப்பு



இலங்கையின் முன்னணி நிதிச் சேவைகளை வழங்கும் DFCC வங்கி, தனது டிஜிட்டல் மாற்றியமைப்பு செயற்பாடுகளின் புதிய முன்னெடுப்பாக தனது நம்பத்தகுந்த Data Center சேவை வழங்குநராக OrionStellar உடன் கைகோர்த்துள்ளது.

இலங்கையின் முதலாவது carrier-neutral, high-density மற்றும் ANSI/TIA Rated-3 சான்றளிக்கப்பட்ட Data Center ஆன OrionStellar, உயர் மட்ட பாதுகாப்பு, தங்கியிருக்கும் திறன் மற்றும் நிலைபேறாண்மை ஆகியவற்றை உறுதிசெய்கிறது. பெருமளவு ஒழுங்குபடுத்தப்பட்ட நிதிசார் சூழலில், உயர்மட்ட நியமங்களை பேணுவதற்கான வங்கியின் அர்ப்பணிப்பை இந்தக் கைகோர்ப்பு வெளிப்படுத்தியுள்ளது.

DFCC வங்கி முன்னெடுக்கும் நிலைபேறாண்மை மற்றும் டிஜிட்டல் மாற்றியமைப்பு புத்தாக்க நடவடிக்கைகளின் நீடிப்பாக இந்த கைகோர்ப்பு அமைந்துள்ளது. OrionStellar இன் வலுச்சிக்கனமான Data Center வடிவமைப்பு என்பது, சூழலுக்கு நட்பான தொழில்நுட்பம் மற்றும் நிலைபேறான வியாபார செயற்பாடுகள் போன்றவற்றுக்கான வங்கியின் நீண்ட கால அர்ப்பணிப்புடன் பொருந்துவதாக அமைந்துள்ளது.

அதனூடாக, சூழலுக்கு பொறுப்பு வாய்ந்த தன்மையிலிருந்து விலகாமல், மேம்படுத்தப்பட்ட வினைத்திறன் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்தக்கூடியதாக இருக்கும். அதிக செயற்பாட்டு செலவுகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின் சிக்கல் தன்மைகள் போன்றன காரணமாக, உள்ளக Data Centerஐ பேணுவது என்பது பெருமளவு சவால்களைக் கொண்டது.

முழுமையாக நிர்வகிக்கப்படும் நவீன வசதிகள் படைத்த தீர்வை வழங்குவதனூடாக இந்தச் சவால்களை இல்லாமல் செய்வதில் OrionStellar கவனஞ்செலுத்தி, எந்நேரமும் உதவிச் சேவைகளை வழங்குகிறது.

## வாகன லீசிங் வசதி ஊக்குவிப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தும் கொமர்ஷல் வங்கி



பல வருட இடைவெளிக்குப் பின்னர் புதிய வாகனங்கள் இறக்குமதி செய்யப்படவுள்ள நிலையில், வாகனங்களைக் கொள்வனவு செய்யவுள்ளவர்களின் விருப்பங்களை நிறைவேற்றும் வகையில் வரையறுக்கப்பட்ட காலத்துக்குக் கவர்ச்சிகரமான லீசிங் திட்டம் மூலம் ஆதரவளிக்கவுள்ளதாக கொமர்ஷல் வங்கி அறிவித்துள்ளது.

2025 மே மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் பெறப்படும் லீசிங் வசதிகளுக்கு சிறப்பு வட்டி வீதங்கள், தனி பயனாக்கப்பட்ட கட்டணத் திட்டங்கள், முதல் ஆண்டு காப்புறுதிக் கட்டணங்களில் கழிவு, கடன் கடிதங்கள் திறக்கப்படும்போது குறைந்தபட்சம் ரூ. 10,000 தரகு கட்டணத்தில் 50% கழிவு, இணைவு கட்டணத்துடன் முதல் ஆண்டு வருடாந்த கட்டணம் தள்ளுபடி செய்யப்பட்ட இலவச கடனட்டை ஆகியவற்றை வழங்கவுள்ளதாக வங்கி தெரிவித்துள்ளது.

மேலும் இந்த வாடிக்கையாளர்களுக்கு லீசிங் வசதிகளுக்கான விரைவான மற்றும் தொந்தரவில்லாத ஒப்புதல் மற்றும் வாகன உதிரிப்பாகங்களுக்கு சிறப்பு விலைக்கழிவுகள் ஆகியவை இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்குமென்று வங்கி தெரிவித்துள்ளது. பதிவு செய்யப்படாத வாகனங்களின் லீசிங் வசதிகளுக்கு இந்தச் சிறப்பு சலுகைகள் பொருந்தும்.

## MMCA இலங்கை ‘முழு நில அமைப்பு’ சுழற்சிப் படைப்புகள்



நவீன மற்றும் சமகால கலைக்கான இலங்கை அருங்காட்சியகமானது (MMCA இலங்கை) தமது ‘முழு நில அமைப்பு’ கண்காட்சியின் மூன்றாவதும் இறுதியானதுமான சுழற்சிப் படைப்புகளை மார்ச் 15ஆம் திகதியன்று ஆரம்பித்தது.

சந்தேவ் ஹன்டி மற்றும் தினால் சஜீவவால் எடுத்தாளப்படும் இக்கண்காட்சியானது 2025 மார்ச் 29ஆம் திகதி அன்று நிறைவுற்றது.

‘முழு நில அமைப்பு’ கண்காட்சியானது இலங்கையின் நில அமைப்பு எவ்வாறு பரந்து விரிந்து சுவாரஸ்யமான விதங்களில் மாற்றப்பட்டுள்ளதென்பதை ஆராய்கின்றது. இக் கண்காட்சியில் பாரம்பரிய முறையில் நிலத்தோற்றத்தைக் காட்சிப்படுத்துவதை கடந்து புதிய முறையில் காட்சிப்படுத்தும் 29 சமகால கலைஞர்களின் படைப்புகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவர்களின் படைப்புகள், நிலத்தைப் பற்றிய கண்ணோட்டங்கள் எவ்வாறு கட்டியமைக்கப்பட்டுள்ளன மற்றும் விவாதிக்கப்படுகின்றன என்பதை உள்ளடக்கியுள்ளன. ‘முழு நில அமைப்பு’ எனும் கண்காட்சியானது நிலத்துடன் எமக்குள்ள உறவை முழுமையாக மீள நோக்க உந்தி மாற்றியமைக்கும் கலைப்படைப்புகளைக் கொண்டுள்ளது.



# வர்த்தகப் போரில் குதித்த அமெரிக்கா - சீனா

## அமெரிக்க வரி விதிப்புக்கு சீன நிறுவனங்கள் பதிலடி: பிரபல சந்தைப் பொருட்கள் மலிவு விலையில் நேரடி விற்பனை

அமெரிக்காவும் சீனாவும் வர்த்தகப் போரில் குதித்துள்ளன. சீனப் பொருட்களுக்கு 245 சதவீத இறக்குமதி வரியை அமெரிக்கா விதித்துள்ள நிலையில், இரு நாடுகளுக்கிடையிலான உறவில் மேலும் விரிசல் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், சீன விற்பனையாளர்கள் தங்கள் வர்த்தக வியூகத்தை மாற்றி விளம்பரம் செய்யத் தொடங்கியுள்ளனர். அமெரிக்காவில் விற்பனையாகும் பிர்கின் மற்றும் லூயிஸ் உய்ட்டன் போன்ற பிரபல பிராண்ட்களின் கைப்பைகள், ஆடைகள், அழகுசாதனப் பொருட்களை லோகோ இல்லாமல் வாடிக்கையாளர்களுக்கு நேரடியாக மலிவு விலையில் விற்பனை செய்வதாக சீன நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

பிர்கின் பிராண்ட் கைப்பைகளை விநியோகிக்கும் ஒருவர்,

''34,000 அமெரிக்க டொலருக்கு விற்கப்படும் கைப்பையின் தயாரிப்புச் செலவு 1,400 டொலர்தான். பிரபல பிராண்ட்களின் பொருட்களைத் தயாரிக்கும் எங்களுக்கு குறைந்த இலாபம்தான் கிடைக்கிறது.

இலாபத்தில் பெரும்பங்கை லோகோ மற்றும் பிராண்ட் நிறுவனங்கள் பெறுகின்றன. 90 சதவீதத்துக்கு அதிகமான விலை லோகோ மற்றும் பிராண்ட்க்காக நீங்கள் செலவு செய்கிறீர்கள். அதைப்பற்றி நீங்கள் கவலைப்படவில்லையென்றால், அதேயளவு தரமான பொருட்களை நீங்கள் எங்களிடம் மலிவு விலையில் பெறலாம்'' என டிக்டொக் வீடியோவில் தெரிவித்துள்ளார்.

100 டொலருக்கு விற்பனையாகும் லூலுலெமன் தயாரிப்புகளை வெறும் 5 டொலருக்கு வாங்க முடியுமென மற்றொரு சீன வியாபாரி தெரிவித்துள்ளார்.

வரியுடன் பொருட்களை அனுப்புவதற்கான செலவை ஏற்றுக்கொள்வதாகவும் சீன விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வரி உயர்வு காரணமாக அமெரிக்கப் பொருட்கள் அனைத்தையும் சீனாவில் போலியாக தயார் செய்வதற்கு சீன அரசும் சட்டபூர்வ அங்கீகாரம் அளித்துவிட்டது. பிரபல பிராண்ட்களின் பொருட்கள் சீனாவில் மலிவு விலையில் உற்பத்தி செய்யப்படும் வீடியோக்கள், பார்வையாளர்களை சீனாவில் பொருட்களை வாங்குவதைத் தூண்டுகின்றன.

# திருநங்கைகளை பெண்களாக வரையறுக்க முடியாது

## பாலின அங்கீகார சான்றுகளை இரத்துச்செய்து பிரிட்டன் நீதிமன்றம் தீர்ப்பு




பிரித்தானியாவில் திருநங்கைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து பாலின அங்கீகார சான்றுகளை இரத்துச்செய்து அந்நாட்டு உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் பதவியேற்றதைத் தொடர்ந்து அங்கு 3ஆம் பாலினத்தவர்கள், ஓரினச் சேர்க்கையாளர்கள் உள்ளிட்டோருக்கு தடை விதித்தார். மேலும், அவர்கள் நாட்டைவிட்டும் வெளியேற்றப்படுவார்கள் எனவும் தெரிவித்தார்.

இதனால் பெரும்பாலான திருநங்கைகள், ஓரினச் சேர்க்கையாளர்கள் ஆகியோர் பிரித்தானியா உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் தஞ்சமடைந்தனர். இதனால் பிரித்தானியாவில் தற்போது திருநங்கைகள் மக்கள்தொகை எகிறி வருகிறது. பிரித்தானியாவில் திருநங்கைகளுக்கு சட்டபூர்வமாக கடந்த 2010ஆம் ஆண்டு அந்த நாட்டு உயர் நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

ஆனால், அவர்களை தனி பாலினம் என வரையறுக்காமல் ஆண் அல்லது பெண் என 2 இனங்களில் ஏதாவது ஓர் இனத்தில் இணைத்துக்கொள்ளலாம். அதற்காக பாலின அங்கீகாரச் சான்றிதழை ஆண் அல்லது பெண் இனத்தில் பதிவு செய்துகொண்டு கட்டாயம் வாங்க வேண்டும் என உயர் நீதின்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. இதனைத் தொடர்ந்து அங்கு வசித்துவரும் பெரும்பாலான திருநங்கைகள் தங்களை பெண்கள் என அடையாளப்படுத்திக் கொண்டு பாலின அங்கீகாரச் சான்றிதழைப் பெற்றுக்கொண்டு வந்தனர். இதனால் இராணுவம், மருத்துவம், விளையாட்டு உள்ளிட்டவற்றில் தங்களுக்கு ஒதுக்கப்படும் இடஒதுக்கீட்டில் திருநங்கைகள் ஆக்கிரமிப்பு செய்வதாக பெண்கள் போராட்டம் நடத்தினர்.

திருநங்கைகள் தங்களுக்கு உண்டான இடஒதுக்கீட்டில் உரிமை கோரக் கூடாதெனக் கூறி பிரித்தானியாவிலுள்ள பெண் உரிமை போராளிகள் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர். இதுதொடர்பாக பெண் நீதிபதி உட்பட 4 பேர் கொண்ட சிறப்பு தனி அமர்வு நீதிபதிகள் விசாரணை நடத்தினர்.

அப்போது பெண்கள் என்னும் வரையறைக்குள் திருநங்கைகளைக் கருதுவது சட்டவிரோதம் என்றும் திருநங்கைகளை பெண்களாக வரையறுக்க முடியாதெனவும் திருநங்கைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து பாலின அங்கீகாரச் சான்றுகளை இரத்துசெய்து தீர்ப்புபளித்துள்ளனர். இந்தத் தீர்ப்புக்கு வரவேற்பளித்து பெண் உரிமை குழுவினர் பிரித்தானிய வீதிகளில் இறங்கி கொண்டாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.



# அணுஆயுத உருவாக்கத்தில் ஈரான்

## சர்வதேச அணுசக்தி நிறுவனம் எச்சரிக்கை

ஈரான் அணு ஆயுதத்தை உருவாக்கும் அபாயகரமான நிலையை நெருங்கியுள்ளதாக ஐ.நாவின் அணுஆயுத கண்காணிப்புக் குழுவின் தலைவர் ரபேல் குரோஸி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஈரான் அணுசக்தித் திட்டம் தொடர்பாக அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஒபாமா ஆட்சிக்காலத்தில் ஒப்பந்தம் செய்யப்பட்டது. ஈரான் அணுஆயுதம் தயாரிக்கக் கூடாது. அதன் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கப்படும் என்பது அந்த ஒப்பந்தத்தின் சாராம்சம்.

பின்னர் அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் பதவியேற்றதும் அந்த ஒப்பந்தத்தை இரத்துசெய்தார். இதன் பின்னர் அந்நாட்டின் மீது பல பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டன. இருப்பினும், ஈரான் தொடர்ந்து அணுஆயுதம் தயாரிப்பதற்கான பணிகளில் ஈடுபட்டுள்ளது. இது தொடர்பாக பேச்சுவார்த்தைக்கு அழைத்தும் ஈரான் மறுப்புத் தெரிவித்தது. இதையடுத்து, அணு ஆயுத தயாரிப்புக்கு எதிரான ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டுமென்று ஈரானுக்கு ஜனாதிபதி ட்ரம்ப் தொடர்ந்து மிரட்டல் விடுத்து வந்தார்.

இந்நிலையில், ஓமான் தலைநகர் மஸ்கட்டில் இருநாடுகளுக்கிடையே பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. ஆக்கபூர்வமான முறையில் பேச்சுவார்த்தை நடந்தாலும், எந்த உடன்பாடும் எட்டப்படவில்லை. இதைத் தொடர்ந்து, நாளை (19) இருநாடுகளிடையே மீண்டும் பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது.

இந்நிலையில், ஈரான் அணு ஆயுதத்தை உருவாக்கும் அபாயகரமான நிலையை நெருங்கியுள்ளதாக ஐ.நாவின் அணு ஆயுத கண்காணிப்புக் குழுவின் தலைவர் ரபேல் குரோஸி எச்சரிக்கை விடுத்துள்ளார். அணு ஆயுத தயாரிப்பு குறித்து ஈரான் அதிகாரிகளுடன் தெஹ்ரானில் பேச்சு நடத்துவதற்கு முன்பாக இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், ஈரான் அணு ஆயுத தயாரிப்புக்குத் தேவையான அனைத்தையும் தயார்நிலையில் வைத்துள்ளது. ஒருநாள் அதனை அவர்கள் இணைப்பார்கள். எங்களிடம் அணு ஆயுதங்கள் இல்லையென்று வாய்மொழியில் சொல்லும் உத்தரவாதங்களை விட, ஆதாரபூர்வமான உத்தரவாதங்களையே சர்வதேச நாடுகள் விரும்புகின்றன. எனவே, நாங்கள் அதனை உறுதிசெய்ய வேண்டும் - என்றார்.



# இஸ்ரேலின் தொடர் தாக்குதலுக்கு இரையாகும் காஸா!

## அதிகரிக்கும் உயிரிழப்புகள்

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் போராளிகளுக்கிடையான போர் நிறுத்த ஒப்பந்தம் மீறப்பட்டு கடந்த மார்ச் 18 முதல் காஸா மீதான தங்களது தாக்குதலில் ஹமாஸ் கிளர்ச்சிப்படையின் மூத்த அதிகாரிகள் 11 பேர் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படும் நிலையில், நேற்று 24 மணிநேரத்துக்குள் காஸா மீது இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலில் 35 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

காஸாமீது கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்டோபர் 07ஆம் திகதி முதல் தாக்குதல் நடத்திவரும் நிலையில், இதுவரையான தாக்குதல்களில் 51,065இற்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன், 1,16,505இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளதாக காஸா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

வடகிழக்கு காஸாவின் அல்-துஃபா பகுதியிலுள்ள ஹஸ்ஸொவ்னா குடும்பத்தின் வீட்டின் மீது நேற்றுமுன்தினம் (16) இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் குழந்தைகள் மற்றும் பெண்கள் உட்பட 10 பேர் கொல்லப்பட்டதாக காஸாவின் பொது பாதுகாப்புத் துறையின் செய்தித் தொடர்பாளர் மஹ்மொத் பசல் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து, வடக்கு காஸாவின் ஜபாலியா பகுதியில் இஸ்ரேல் இராணுவம் 3 பலஸ்தீனர்களைக் கொன்றுள்ளதாகவும் அவர்களது தாக்குதலில் அப்பகுதியில் வாழும் ஏராளமான மக்கள் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தெற்கு காஸாவின் கான் யூனிஸ் பகுதியில் இஸ்ரேலின் ட்ரோன் தாக்குதலில் 2 குழந்தைகள் உட்பட 5 பேர் கொல்லப்பட்டனர். மத்திய நகரமான நுசைராத்தில் உணவு விநியோகிக்கும் கூடாரத்தைக் குறிவைத்து இஸ்ரேல் விமானம் நடத்திய தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

# 96 ஆண்டுகளாக

## ஒரு குழந்தைகூட பிறக்காத நாடு!

வத்திக்கான் நகரம், உலகின் மிகச் சிறிய நாடாகக் கருதப்படும் நிலையில், கடந்த 96 ஆண்டுகளில் இங்கு ஒரு குழந்தைகூட பிறக்கவில்லையென்று தகவல் வெளியாகியுள்ளது.

நூற்றுக்கணக்கானோரின் வீடுகள் இந்த நகரில் இருக்கின்றன. எனினும், இங்கு கடந்த நூறாண்டுகளில் ஒரு குழந்தைகூட பிறந்ததாகப் பதிவாகவில்லை. அதற்குக் காரணம், இந்த நகரில் ஒரு மருத்துவமனைகூட இல்லாததுதான் என்று தெரிய வந்துள்ளது.

உலகின் மிகச் சிறிய நாடுகளில் ஒன்றாக இருக்கும் வத்திக்கான் நகரில் கிறிஸ்தவர்களின் புனித இடமான ரோமன் கத்தோலிக்க திருச்சபை அமைந்துள்ளது. இந்த நகரின் தேசிய எல்லைக்குள் ஒரு மருத்துவமனைகூட அமையப்பெறவில்லை.

அதாவது, 1929ஆம் ஆண்டுதான் சுதந்திரமான இறையாண்மை கொண்ட நாடு என்று வத்திக்கான் நகரம் அறிவிக்கப்பட்டது. அதன்படி, இந்த நகரம் நாடு என அறிவிக்கப்பட்ட பின்னர் ஒரு குழந்தைகூட இங்கு பிறக்கவில்லையாம்.

இங்கு இதுவரை ஒரு மருத்துவமனைகூட அமைக்கப்படவில்லை. இத்தாலியின் தலைநகர் ரோமுக்கு மத்தியில் அமைந்திருப்பதால், இந்த நகரில் யாருக்கேனும் சிகிச்சை தேவைப்படின் உடனடியாக அவர்கள் ரோம் நகருக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள். இதனால், இங்கு மருத்துவமனையின் தேவை இல்லாமல் போயிருக்கிறது.

அது மட்டுமல்ல, இந்த நகரின் பரப்பளவும் மிகச் சிறியது என்பதாலும் அருகிலுள்ள ரோம் நகரின் வளர்ச்சியும் இந்த முடிவுக்கு உறுதுணையாக அமைந்துவிட்டன.

இந்த நகரில் கிட்டத்தட்ட 900 பேர் வாழ்ந்துவரும் நிலையில், இங்குள்ள கர்ப்பிணிகள் ரோம் நகருக்குச் சென்றுதான் குழந்தை பெற்றுக்கொள்கிறார்கள். இதனால், வத்திக்கான் நகரில் இதுவரை ஒரு குழந்தைகூட பிறந்ததில்லையாம்.



# கிராமிய பொறிமுறையை தயார்படுத்துவதற்கு உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முக்கியமானது

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

(எம்.ஏ.அமீனுல்லா )

நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக அரசாங்கம் பாரிய திட்டங்களை முன்னெடுத்துள்ளது. அதற்கான கிராமியப் பொறிமுறையை தயார்படுத்துவதற்கு இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எமக்கு முக்கியமானதென சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கண்டியில் நேற்று முன்தினம் (16) ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மேலும் தெரிவிக்கையில்,

''இந்த நாட்டில் கடந்த காலங்களில் இடம்பெற்ற மோசடிகள், ஊழல்கள், கொலைகள் மற்றும் அரசியல் தவறுகளின் பாரதூரம் வெளிப்பட்டு வரும் வேளையில் தான் பிள்ளையானின் சட்டத்தரணியாக கம்மன்பில மாறியுள்ளார்.

நடந்துள்ள சில கொலைகள் வெறும் அரசியல் படுகொலைகள் அல்ல. அவை சதிச் செயல்களாகும்.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழு மீண்டும் செயற்படுத்தப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் கசிந்த கோப்புகள் குறித்து தற்போது விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. வழக்குகள் பதியப்பட்டு வருகின்றன. குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் விசாரணைகளை தற்பொழுது துரிதப்படுத்தியுள்ளனர்.

சட்டமா அதிபர் திணைக்களத்தினூடாக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழியில் சட்டத்தின்படி தேவையான பணிகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களால் மேற்கொள்ளப்படுகின்றன. அந்த நிறுவனங்களுக்குத் தேவையான வசதிகளை மட்டும் அரசு செய்து வருகிறது.

மோசடி, ஊழல், கொலைகள் மற்றும் அரசியல் குற்றங்கள் மிகவும் தீவிரமானவை. அவை ஒரு வலையமைப்பாக மேற்கொள்ளப்பட்டன.

இன்று கம்மன்பில பிள்ளையானின் சட்டத்தரணியாக மாறியுள்ளார். கம்மன்பில வழக்குகளை விவாதிப்பதை எமது நாட்டு மக்கள் கண்டுகொள்ளவில்லை. ஆனால், பிள்ளையான் தனது சட்டத்தரணியாக கம்மன்பிலவை தெரிவு செய்துள்ளார்.

மேலும் பிள்ளையான் சம்பந்தப்பட்ட வழக்கு ஒன்றையும் கம்மன்பில எடுத்துள்ளார். இவை வெறும் அரசியல் படுகொலைகள் அல்ல. மாறாக, சதிகள் என்றே பார்க்கிறோம்.

மேலும், தேசிய மக்கள் சக்திக்கு அந்த வலையமைப்பை கிராமப்புறங்களுடன் இணைக்க உள்ளூராட்சி அமைப்புகளின் அதிகாரம் தேவை என்பதை மக்கள் புரிந்துகொண்டுள்ளனர். அந்த சக்தியை நாம் பெறுவோம் என்பதில் ஐயமில்லை.

கடந்த இரண்டு அல்லது மூன்று வருடங்களில் மிகவும் பாதிக்கப்பட்ட ஒரு துறை சுகாதாரம். சுகாதாரத்துறை முற்றாக அழிக்கப்பட்டு அதன் அஸ்திவாரங்கள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. சுகாதார அமைச்சின் ஊழியர்கள் வேலை செய்ய முடியாத அளவுக்கு பொறிமுறை உடைக்கப்பட்டுள்ளது. மோசடிகள் மற்றும் ஊழல்கள் தொடர்பில் பல நிறுவனங்களுக்கு பதிலளிக்க வேண்டிய அதிகாரிகளும் ஊழியர்களும் இன்னமும் சுகாதார அமைச்சில் உள்ளனர்.

இன்னும் சில மாதங்களில் மக்கள் எதிர்பார்க்கும் வகையில் சுகாதார சேவைகளை வழங்க முடியும்.

ஆடம்பரமான தீர்வுகளுக்குப் பதிலாக நிலையான தீர்வுகளை வழங்குவதன் மூலம் சுகாதாரத் துறையை நாம் கட்டியெழுப்ப முடியும்''- என்றார்.

# நானுஓயாவில் பயணிகள் அசௌகரியம்



(செ.திவாகரன்)

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு சொந்த ஊர்களுக்குச் சென்றவர்களும் நுவரெலியா, நானுஓயா பகுதிகளுக்கு சுற்றுலா சென்றவர்களும் மீண்டும் கொழும்பு நோக்கித் திரும்புவதற்கு நேற்று முன்தினம் (16 ) முறையான போக்குவரத்து வசதிகள் இன்மையால் கடும் சிரமத்துக்குள்ளாகினர்.

பதுளையிலிருந்து கொழும்பு கோட்டைக்குச் செல்லும் ரயிலுக்காக ஏராளமான பயணிகள் காத்திருந்ததை அவதானிக்க முடிந்தது. எனினும், ரயிலில் அனைவருக்கும் இடவசதி இல்லாமல் கொழும்பு செல்ல எதிர்பார்த்திருந்த பயணிகள் ஏமாற்றத்துக்குள்ளாகினர். பண்டிகை விடுமுறை முடிந்து மீண்டும் தொழில் நிமித்தம் கொழும்பு திரும்பும் பயணிகளின் எண்ணிக்கைக்கமைய போக்குவரத்து சேவைகள் இடம் பெறவில்லை.

இதனால் நானுஓயா ரயில் நிலையத்திலிருந்து கொழும்பு கோட்டைக்கு செல்வதற்கு அதிகமான பயணிகள் வருகை தந்ததால் பயணிகள் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்ததாக தெரிவிக்கப்படுகிறது.

# கண்டி நாத தேவாலய வளாகத்தில் தலைக்கு எண்ணெய் தேய்க்கும் அரச வைபவம்





(எம்.ஏ.அமீனுல்லா)

தலைக்கு எண்ணெய் தேய்க்கும் அரச வைபவம் நேற்று முன்தினம் (16) காலை கண்டி நாத தேவாலய வளாகத்தில் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தலைமையில் இடம்பெற்றது.

சியாம் மஹா நிகாயவின் மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடங்களின் அனுநாயக்க தேரர்களின் ஆசீர்வாதத்துடன் காலை 9.04 மணிக்கு வடக்கு நோக்கிய சுப வேளையில் தலைக்கு எண்ணெய் தேய்க்கும் அபிஷேகம் இடம்பெற்றது.

நல்ல ஆரோக்கியத்தை விரும்புவதற்காக மேற்கொள்ளப்படும் இந்தச் சடங்கு சிங்கள, தமிழ் புத்தாண்டு இறுதியில் ஒரு முக்கிய சடங்காகும்.

மேலும் ஸ்ரீ தலதா மாளிகை வளாகத்தில் அமைந்துள்ள வரலாற்று நாத தேவாலயத்தில் ஒவ்வொரு ஆண்டும் இது செய்யப்படுகிறது.

சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சும் ஆயுர்வேத திணைக்களமும் இணைந்து ஏற்பாடு செய்த இந்தச் சடங்குடன் இணைந்து மகா சங்கத்தினரின் பங்களிப்புடன் யானைக்கு எண்ணெய் தேய்க்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

ஸ்ரீ தலதா மாளிகையின் யானை அணியைச் சேர்ந்த பர்மிய ராஜா மற்றும் மிகாரா ஆகிய யானைகளுக்கு எண்ணெய் தேய்க்கும் நிகழ்வும் ஊடகத்துறை அமைச்சரின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மல்வத்தை பீடத்தின் அனுநாயக்க தேரர்கள், அஸ்கிரிய பீடத்தின் அனுநாயக்க தேரர், கண்டி ஸ்ரீ நாதா தேவாலயத்தின் பிரதான பீடாதிபதி மற்றும் மகா சங்கத்தினர், சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ, பிரதி அமைச்சர் கலாநிதி ஹசங்க விஜேமுனி, மத்திய மாகாண ஆளுநர் பேராசிரியர் எஸ்.பி.எஸ். அபயகோன்,பாராளுமன்ற உறுப்பினர் சமிந்திரனி கிரியெல்ல, கண்டி மாவட்ட செயலாளர் இந்திக்க உடவத்த, ஆயுர்வேத ஆணையாளர் நாயகம் தம்மிக்க அபேகுணவர்தன, நாத தேவல பஸ்நாயக்க நிலமே ஏ.டபிள்யூ.எஸ். பண்டாரநாயக்க உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# உக்குவளையில் சான்றிதழ் வழங்கல்









ஜமாஅத்தே இஸ்லாமி உக்குவளை கிளை,க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுக்கு 'வாழ்க்கையை சிறப்பாக்கிக் கொள்வோம்'எனும் தொனிப்பொருளில் நடத்திய ஐந்து நாள் பயிற்சிநெறி உக்குவளை தாருல் ஹிக்மா மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

பயிற்சிகளை முடித்துக்கொண்ட மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு மேற்படி மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் முஸ்லிம் பாடசாலைகளுக்கான கல்விப் பணிப்பாளர் எம்.உனைஸ் உட்பட பிரதேச முக்கிய பிரமுகர்கள் மற்றும் பெற்றோர் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# வாகன விபத்து: நால்வர் காயம்




டிக்கோயாவில் சம்பவம்



(மஸ்கெலியா நிருபர்)

தனியார் பஸ்ஸும் முச்சக்கர வண்டியும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் நால்வர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை 7.30 மணியளவில் டிக்கோயா பகுதியில் இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் காயமடைந்த நால்வரும் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கண்டி போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

மஸ்கெலியா பகுதியிலிருந்து ஹட்டன் நோக்கிச் சென்ற தனியார் பஸ்ஸும் ஹட்டன் பகுதியிலிருந்து டிக்கோயா பகுதிக்குச் சென்ற முச்சக்கர வண்டியும் மோதியே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை ஹட்டன் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# தென்னிலங்கைக் கட்சிகளை நிராகரிக்கும் அதேவேளை எதற்கு வாக்களிக்க வேண்டுமென்பதிலும் எமக்கு நிதானம் தேவை

## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத் தலைவர் ஐங்கரநேசன் வேண்டுகோள்



(பு.கஜிந்தன்)

''தமிழ்க் கட்சிகள் எல்லாமே உள்ளூராட்சித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்களிக்க வேண்டாம் என்று மக்களைக் கேட்டுவருகின்றன. ஜே.வி.பியை மாத்திரமல்ல, தென்னிலங்கைக் கட்சிகள் எதையுமே நாம் ஆதரிக்க முடியாது. தென்னிலங்கைக் கட்சிகளை நிராகரிக்கும் அதேசமயம், எதற்கு வாக்களிக்க வேண்டுமென்பதிலும் எமக்கு நிதானம் தேவை. தமிழ்த் தேசிய அரசியலை வியாபாரப் பண்டமாக்கி மக்களை ஏமாற்றிப் பிழைக்கும் தமிழ் அரசியற் கட்சிகளையும் மக்கள் அடியோடு நிராகரிக்க வேண்டும்'' - என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத் தலைவர் பொ. ஐங்கரநேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வலி. வடக்கு பிரதேச சபைக்கு சைக்கிள் சின்னத்தில் போட்டியிடுகின்ற தமிழ்த் தேசியப் பேரவையின் வேட்பாளர்களை அறிமுகம் செய்து வைக்கும் கூட்டம் நேற்று முன்தினம் (16) மல்லாகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே பொ. ஐங்கரநேசன் இவ்வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

''ஜனாதிபதித் தேர்தலின்போதும் பாராளுமன்றத் தேர்தலின்போதும் வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்களில் கணிசமானோர் ஜே.வி.பி. என்னும் ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்களித்திருக்கிறார்கள். தமிழ்த் தேசிய அரசியல் பயணத்தில் ஒரு பின்னடைவாக வடக்கு, கிழக்கில் ஜே.வி.பி. காலூன்றியமைக்கு எமது வாக்காளர்களைக் குற்றஞ்சாட்டுவது எவ்விதத்திலும் ஏற்புடையதல்ல. எங்கள் கைவிரல்களாலேயே எங்கள் கண்களைக் குத்துவது போன்று தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளே தென்னிலங்கைப் பேரினவாதக் கட்சிகளுக்குத் தமிழ் மக்களை வாக்களிக்கப் பழக்கினார்கள்.

முள்ளிவாய்க்காலில் யுத்தம் முடிவுறுத்தப்பட்டவுடன் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் சரத் பொன்சேகாவை ஆதரிக்கும் வரலாற்றுப் பிழையான முடிவை எடுத்தார். முள்ளிவாய்க்கால்வரை யுத்தத்தை முன்னின்று நடத்திய சரத் பொன்சேகாவுக்கு தமிழ் மக்களை அவர் வாக்களிக்க வைத்தார். இதன்மூலம் போர்க்குற்றவாளி என்ற குற்றச்சாட்டிலிருந்து நாமே அவரை விடுதலை செய்தோம். இதன் விளைவாகவே தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு எப்போதுமே எதிரான நிலைப்பாடுகளை எடுத்து வந்த ஜே.வி.பிக்கு இன்று தமிழ் மக்கள் வாக்களிக்கத் தலைப்பட்டுள்ளார்கள்.

எம் மத்தியிலுள்ள பல தமிழ்க் கட்சிகள் உதட்டளவில் தமிழ்த் தேசியம் பேசுவனவாகவும் மனதளவில் பேரினவாதக் கட்சிகளை விசுவாசிப்பனவாகவுமே உள்ளன.

மதுபான விற்பனை அனுமதிப்பத்திரங்களை இலஞ்சமாகப் பெற்றும் சர்வதேச நிறுவனங்களிடம் பல கோடிகளைப் பெற்றும், மத்திய அரசின் வரவு - செலவுத் திட்டங்களை ஆதரித்தும் தமிழ்த் தேசிய விரோத நிலைப்பாடுகளை எடுப்பதற்கு இக்கட்சிகள் ஒருபோதும் தயங்கியதில்லை. தமிழ் மக்கள் இத்தேர்தலில் தென்னிலங்கைக் கட்சிகளோடு இப்போலித் தமிழ்த்தேசியக் கட்சிகளையும் சேர்த்தே நிராகரிக்க வேண்டும்''- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# சட்டவிரோத மண் அகழ்வில் ஈடுபட்ட தேசிய மக்கள் கட்சி வேட்பாளர்

## அநுரவின் வரவால் விடுதலையாவாரா?

(பு.கஜிந்தன்)



சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்ட தேசிய மக்கள் கட்சியின் காரைநகர் பிரதேச சபையின் வேட்பாளரொருவர் நேற்று முன்தினம் (16) பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார். இருப்பினும், மணல் ஏற்றிய வாகனம் பொலிஸ் நிலையத்திலேயே உள்ளது. இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை ஜனாதிபதி அநுரகுமாரவின் வருகையையடுத்து வழக்குகளிலிருந்து விடுதலை செய்வதற்கு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது குறித்து மேலும் தெரியவருகையில்,

குறித்த வேட்பாளர் தொடர்ச்சியாக தனியார் மற்றும் அரச காணிகளில் மணல் அகழ்வில் ஈடுபட்டு வந்துள்ளார். இது குறித்து காணியின் உரிமையாளர்கள் வழங்கிய முறைப்பாட்டுக்கமைவாக, அவர் மணல் அகழ்வில் ஈடுபட்டபோது நேற்று முன்தினம் இரவு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். இதன்போது மணல் ஏற்றுவதற்குப் பயன்படுத்திய உழவு இயந்திரமும் மீட்கப்பட்டது. மணலை உழவு இயந்திரப் பெட்டியின் அடியில் ஏற்றிவிட்டு மேலே கட்டிட இடிபாடுகளை ஏற்றி வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஊர்காவற்றுறை பொலிஸாரின் கீழ் இயங்கும் காரைநகர் பொலிஸ் காவலரணில் கடமை புரியும் பொலிஸாராலேயே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக் கப்பட்டது.குறித்த தொகுதிக்கான தேசிய மக்கள் சக்தியின் அமைப்பாளர் நேற்று முன்தினம் இரவு பொலிஸ் நிலையம் சென்று அவரை விடுதலை செய்யுமாறு கோரியும் பொலிஸார் விடுதலை செய்யவில்லை. பின்னர் பிணையில் செல்ல அனுமதித்தனர். இந்நபர் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் என்ற வகையில், நேற்று (17) ஜனாதிபதியின் யாழ்ப்பாணம் வருகையை முன்னிட்டு அவரை வழக்குகளிலிருந்து விடுதலை செய்வதற்கான ஏற்பாடுகளை தேசிய மக்கள் சக்தியின் மக்கள் பிரதிநிதிகள் மேற்கொள்வதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இவ்வாறான செயற்பாடு மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

# புளியம்பொக்கனையில் 85 கிலோவுக்கும் அதிகமான கஞ்சாவுடன் ஒருவர் கைது!



கிளிநொச்சி, புளியம்பொக்கனை பகுதியில் 85 கிலோவுக்கும் அதிகமான கஞ்சாவுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இராணுவத்தினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைவாக சிறப்பு அதிரடிப்படையினர், கிளிநொச்சி பொலிஸார் மற்றும் தர்மபுரம் பொலிஸார் இணைந்து கைது நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

புளியம்பொக்கனை கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வீடொன்றில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த வாகனத்தில் சூட்சுமமான முறையில் மறைத்துவைக்கப்பட்டிருந்த நிலையில், 85 கிலோகிராமுக்கும் அதிகமான கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகித்து பளை பகுதியைச் சேர்ந்த ஒருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் புளியம்பொக்கனை நாகேந்திரபுரம் பகுதியில் தனியார் ஒருவரது வீட்டை வாடகைக்குப் பெற்று அங்கிருந்து கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# இலங்கை - இந்தியாவுக்கு இடையிலுள்ள மணல் திட்டுகளைப் பார்வையிட பொதுமக்களுக்கு அனுமதி

(ஜோசப் நயன்)


தலைமன்னார் மற்றும் இந்தியாவைப் பிரிக்கும் பாக்குநீரிணை பகுதியில் காணப்படும் இலங்கைக்குச் சொந்தமான 6 மணல் திட்டுகளைப் பார்வையிடுவதற்கான அனுமதி பாதுகாப்பு அமைச்சினூடாக கிடைக்கப்பெற்றுள்ளதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

படகுப் போக்குவரத்து செய்யக்கூடிய முதலீட்டாளர்களைப் பெற்றுக்கொள் வதில் காணப்பட்ட தாமதம் காரணமாக குறித்த விடயம் தாமதிக் கப்பட்டிருந்தது.

எனினும், வரும் 22ஆம் திகதி அனைத்து பங்குதாரர்கள் விசேடமாக வன ஜீவராசிகள் திணைக்களப் பணிப்பாளர்கள், பிரதேச சபை மற்றும் முதலீட்டாளர்கள் எல்லா பங்குதாரர்களும் இணைந்து ஒரு கூட்டத்தை ஒழுங்கமைத்துள்ளோம். அதன் பின்னர் குறித்த 6 மணல் திட்டுகளையும் பார்வையிடுவதற்கான ஏற்பாடுகள் மிக விரைவில் இடம் பெறவிருக்கின்றன.



6 மணல் திட்டுக்களில் ஒரு மணல் திட்டில் சுற்றுலாப் பயணிகள் இறங்கி பார்வையிடுவதற்கான ஏற்பாடும் ஏனைய திட்டுக்களை படகில் இருந்தவாறே சுற்றிப்பார்ப்பதற்கான ஏற்பாடுகளும் இடம்பெற்றுள்ளன – என்றார்.

# புத்தாண்டு வெற்றிக்கிண்ணத்தை தனதாக்கியது வட்டுவாகல் உதயசூரியன் வி.க.



(விஜயரத்தினம் சரவணன்)

முல்லைத்தீவு உதைபந்தாட்ட சம்மேளத்தின் அனுமதியுடன் வற்றாப்பளை செந்தமிழ் விளையாட்டுக்கழகத்தால் நடத்தப்பட்ட அணிக்கு 11 பேர் கொண்ட விலகல் முறையிலான தமிழ் புத்தாண்டு உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் வெற்றிக்கிண்ணத்தை வட்டுவாகல் உதயசூரியன் விளையாட்டுக்கழக அணியினர் தனதாக்கிக்கொண்டனர்.

வற்றாப்பளை, செந்தமிழ் விளையாட்டுக்கழக மைதானத்தில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இறுதிப்போட்டியில் முதன்மை விருந்தினராக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பங்கேற்றார்.

வற்றாப்பளை செந்தமிழ் விளையாட்டுக்கழகத் தலைவர் ச.சதீஸ்கரன் தலைமையில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் இரணைப்பாலை சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழக அணியினரும் வட்டுவாகல் உதயசூரியன் விளையாட்டுக்கழக அணியினரும் மோதினர்.

இப்போட்டியின் இறுதிவரை இரு அணிகளும் கோல்கள் எதுவும் பெறாத நிலையில், தொடந்து வழங்கப்பட்ட தண்ட உதை மூலம் 5-4 என்ற கோல் கணக்கில் வட்டுவாகல் உதயசூரியன் விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்று தமிழ் புத்தாண்டு வெற்றிக்கிண்ணத்தைத் தனதாக்கியது.

அந்தவகையில் இறுதிப்போட்டியின் ஆட்டநாயகனாக இரணைப்பாலை சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழக வீரர் டயான்சன் தெரிவுசெய்யப்பட்டதுடன், இத்தொடரின் தொடர் ஆட்டநாயகனாக வட்டுவாகல் உதயசூரியன் விளையாட்டுக்கழக வீரர் சி.இன்சாத் தெரிவுசெய்யப்பட்டார்.

அத்தோடு சிறந்த கோல் காப்பாளராக வட்டுவாகல் உதயசூரியன் விளையாட்டுக்கழக வீரர் பு.அஜித் தெரிவுசெய்யப்பட்டதுடன், இத்தொடரின் மக்கள் மனங்கவர் வீரராக வட்டுவாகல் உதயசூரியன் விளையாட்டுக்கழக வீரர் பு.அபிசன் தெரிவுசெய்யப்பட்டார். அதேவேளை, இத்தொடரின் சிறந்த அணியாக மாத்தளன் ஒற்றுமை விளையாட்டுக்கழக அணியினர் தெரிவுசெய்யப்பட்டனர்.

இறுதிப் போட்டியில் விருந்தினர்களாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் திட்டமிடல் வைத்திய அதிகாரி கே.சுதர்சன், கரைதுறைப்பற்று பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் இ.ஜெகதீசன், முல்லைத்தீவு மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளன உபதலைவர் ரி.குறிஞ்சிக்குமரன், உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் பி.ஜி.கே.டிலான், வற்றாப்பளை கிராம அலுவலர் சு.கரிகாலன், கரைதுறைப்பற்று விளையாட்டு உத்தியோகத்தர் வரதன், வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பிரதம குருக்கள், வற்றாப்பளை மகா வித்தியாலய அதிபர் கே.திருக்குமரன் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# சுப்பர் ஓவரில் த்ரில் வெற்றியீட்டி சாதனை படைத்த டெல்லி

நடப்பு ஐ.பி.எல். தொடரில் முதல் முறையாக சுப்பர் ஓவர் வரை சென்ற போட்டியில் டெல்லி கெப்பிட்டல்ஸ் அணி வெற்றிபெற்றது. இந்த ஆட்டத்தையும் சேர்த்து ஐ.பி.எல். வரலாற்றில் இதுவரை 5 சுப்பர் ஓவர் போட்டிகளில் விளையாடியுள்ள டெல்லி அணி 4 வெற்றிகளைப் பெற்றுள்ளது. இதன்மூலம் ஐ.பி.எல். வரலாற்றில் சுப்பர் ஓவரில் அதிக வெற்றிகளைப் பதிவுசெய்த அணி என்ற மாபெரும் சாதனையை டெல்லி கெப்பிட்டல்ஸ் படைத்துள்ளது. இதற்கு முன்னர் பஞ்சாப் கிங்ஸ் 3 வெற்றிகளைப் பெற்றிருந்ததே அதிகபட்சமாக இருந்தது.

டெல்லியில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி முதலில் பந்துவீச தீர்மானித்தது. இதையடுத்து களமிறங்கிய டெல்லி கெப்பிட்டல்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 188 ஓட்டங்கள் குவித்தது.

189 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி சிறப்பான பதிலடி கொடுத்தது. வெற்றிக்கு கடைசி ஓவரில் 9 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில், டெல்லி அணியின் பந்துவீச்சாளர் ஸ்டார்க் அந்த ஓவரில் 8 ஓட்டங்கள் மட்டுமே விட்டுக் கொடுத்தார்.

இதன்மூலம் ராஜஸ்தான் அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 188 ஓட்டங்கள் மட்டுமே எடுத்ததால் வெற்றியாளரை தீர்மானிக்க சுப்பர் ஓவர் முறை கடைப்பிடிக்கப்பட்டது. முதலில் பேட் செய்த ராஜஸ்தான் அணி 5 பந்துகளில் 2 விக்கெட்டுகளை இழந்து 11 ஓட்டங்கள் எடுத்தது. 12 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் சுப்பர் ஓவரில் களமிறங்கிய டெல்லி அணி 4 பந்துகளில் வெற்றியிலக்கை அடைந்தது.

## IPL - 2025

**இன்றைய போட்டி**

போட்டி இல. - 34

பஞ்சாப் VS பெங்களூரு

பெங்களூரு- இரவு 7.30 மணி

**முடிவு**

போட்டி இல. - 32

டெல்லி - 188/5 (20)

ராஜஸ்தான் - 188/4 (20)

சுப்பர் ஓவரில் டெல்லி அணி வெற்றி

# விளையாட்டுத் துளிகள்

ஐ.பி.எல். கிரிக்கெட் வரலாற்றில் மிக நீண்ட ஓவர் வீசிய பந்துவீச்சாளர்கள் வரிசையில் ராஜஸ்தான் ரோயல்ஸ் வேகப்பந்து வீச்சாளர் சந்தீப் சர்மா இணைந்துள்ளார். புதன்கிழமை டெல்லி அணியுடனான ஆட்டத்தில் கடைசி ஓவரில் அவர் 11 பந்துகளை வீசினார். 2023 தொடரில் முஹமட் சிராஜ், துஷார் தேஷ்பாண்டே, 2025 தொடரில் ஷர்துல் தாக்குர், சந்தீப் சர்மா ஆகியோர் 11 பந்துகளை வீசினர்.

★★★★★★★★★★★★★

2028 ஒலிம்பிக்கில் 128 ஆண்டுகளுக்குப் பின் கிரிக்கெட் போட்டி நடைபெறவுள்ள நிலையில், போட்டி நடைபெறும் இடம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி தெற்கு கலிபோர்னியாவின் பொமோனாவிலுள்ள பேர்கிரவுண்ட்ஸ் என்ற இடத்தில் கிரிக்கெட் போட்டி நடைபெறுமென்று லொஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக் குழு அறிவித்துள்ளது.

★★★★★★★★★★★★★

மொனாக்கோவில் நடைபெற்ற மொண்டி கார்லோ மாஸ்டர்ஸ் சர்வதேச டென்னிஸ் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவின் இறுதிப்போட்டியில் இத்தாலி வீரர் முசெட்டியை வீழ்த்தி ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த நட்சத்திர வீரரான கார்லஸ் அல்காரஸ் சம்பியன் பட்டம் வென்றார்.

★★★★★★★★★★★★★

நோர்வே மற்றும் போர்த்துக்கல் அணிகளுக்கிடையில் அண்மையில் நடைபெற்ற ரி20 தொடரில் போர்த்துக்கல் அணியில் அறிமுகமான 64 வயதுடைய வீராங்கனையான ஜோன்னா சைல்ட், ரி20 கிரிக்கெட்டில் அதிக வயதில் அறிமுகமான இரண்டாவது வீராங்கனை எனும் பெருமையைப் பெற்றார். இதற்கு முன்பு ஜிப்ரால்டரைச் சேர்ந்த சாலி பார்டன் 66ஆவது வயதில் அறிமுகமாகி சாதனை படைத்தார்.

★★★★★★★★★★★★★

ஐ.சி.சியின் மார்ச் மாதத்துக்கான சிறந்த வீரருக்கான விருதை இந்திய அணியின் ஷ்ரேயாஸ் ஐயர் வென்றுள்ளார். சிறந்த வீரர் விருதுக்கான போட்டியில் நியூசிலாந்து அணியின் ரச்சின் ரவீந்திரா மற்றும் ஜேக்கோப் டஃபி இடம்பெற்றிருந்த நிலையில், ஐயர் வெற்றியாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். கடந்த மாதத்தில் நடைபெற்ற சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் 243 ஓட்டங்களைக் குவித்த அவர் தொடரில் அதிக ஓட்டங்களைக் குவித்த வீரராகவும் பதிவானார்.

★★★★★★★★★★★★★

மும்பை வான்கடே கிரிக்கெட் மைதானத்திலுள்ள மூன்று அரங்குகளுக்கு இந்திய அணியின் முன்னாள் தலைவர் ரோகிட் சர்மா, சர்வதேச கிரிக்கெட் பேரவையின் முன்னாள் தலைவர் சரத்பவார், இந்திய அணியின் முன்னாள் தலைவர் அஜித் வடேகர் ஆகியோரின் பெயர்கள் சூட்டப்படவுள்ளன.

★★★★★★★★★★★★★

நடப்பு ஐ.பி.எல். தொடரில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி வெற்றிகளைக் குவிக்க தடுமாறிவரும் நிலையில், ஹைதராபாத் அணிக்கு மேலும் பின்னடைவை ஏற்படுத்தும் விதமாக முன்னணி சுழற்பந்து வீச்சாளரான அடம் ஸம்பா காயம் காரணமாக நடப்பு ஐ.பி.எல். தொடரிலிருந்து விலகியுள்ளார். அவருக்குப் பதிலாக கர்நாடகாவைச் சேர்ந்த ரவிச்சந்திரன் ஸ்மரன் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.




# ஒரே போட்டியில் அடுத்தடுத்து இரு உலக சாதனைகள் படைத்த அலெக்னா

அமெரிக்காவில் நடைபெற்ற சர்வதேச பரிதி வட்டம் எறிதல் போட்டியில் ஆடவர் பிரிவில் 22 வயதான லிதுவேனியாவின் மைக்கோலஸ் அலெக்னா ஒரே போட்டியில் அடுத்தடுத்து இரு உலக சாதனைகள் படைத்தார்.

முதல் வாய்ப்பில் 74.89 மீற்றர் எறிந்த இவர், தனது சொந்த உலக சாதனையை முறியடித்தார். நான்காவது வாய்ப்பில் அதிகபட்சமாக 75.56 மீற்றர் எறிந்த அலெக்னா, மீண்டும் தனது சொந்த சாதனையை முறியடித்து புதிய உலக சாதனை நிகழ்த்தினார். கடந்த ஆண்டு இவர் 74.35 மீற்றர் எறிந்து 38 ஆண்டு கால உலக சாதனையை தகர்த்தமை குறிப்பிடத்தக்கது. பாரிஸ் ஒலிம்பிக்கில் வெள்ளி வென்ற அலெக்னா, உலக சம்பியன்ஷிப் (ஒரு வெள்ளி, ஒரு வெண்கலம்), ஐரோப்பிய சம்பியன் ஷிப் (ஒரு தங்கம், ஒரு வெண்கலம்) போட்டிகளில் பதக்கம் வென்றுள்ளார்.




# இரு ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்ட சலாஹ்வின் ஒப்பந்தம்

எகிப்து நாட்டின் பிரபல உதைபந்து வீரரான முஹமட் சலாஹ்வின் லிவர்பூல் உதைபந்து கழகத்துடனான புதிய ஒப்பந்தம் மேலும் இரு ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டுள்ளது. ஆண்டுக்கு 20 மில்லியன் யூரோ சம்பளமாக இவ்வாறு 2 ஆண்டுகளுக்கு புதிய ஒப்பந்தம் நீடிக்கப்பட்டுள்ளது.

32 வயதாகும் முஹமட் சலாஹ் 2017 முதல் லிவர்பூல் அணிக்காக விளையாடி வருகிறார். அதில் 394 போட்டிகளில் 243 கோல்களும் 111 தடவைகள் கோல்கள் அடிக்கவும் உதவியுள்ளார். ரசிகர்களால் எகிப்திய அரசன் என அழைக்கப்படும் இவர் இந்தாண்டுக்கான பேலன் தோர் (தங்கப் பந்து) விருது வாங்குவார் என்ற நம்பிக்கையில் இருக்கிறார்.

நடப்பு பிரீமியர் லீக்கில் 73 புள்ளிகளுடன் முதலிடத்தில் இருக்கும் லிவர்பூல் அணி சம்பியன் பட்டம் வெல்லும் முனைப்பில் இருக்கிறது. இதற்கு சலாஹ் முக்கியமானவர் என்பதால், அவரது ஒப்பந்தம் நீடிக்கப்பட்டமை முக்கியத்துவம் பெறுகிறது.

## PSL - 2025

**இன்றைய போட்டி**

போட்டி இல. - 08

கராச்சி VS குவெட்டா

கராச்சி - இரவு 8.30 மணி

**முடிவு**

போட்டி இல. - 07

இஸ்லாமாபாத் - 202/6 (20)

முல்தான் - 155/10 (18.4)

இஸ்லாமாபாத் 47 ஓட்டங்களால் வெற்றி

மாணவர்களின் கல்வி வழிகாட்டியான ஜூனியர் தமிழன் ஏப்ரல் மாத சஞ்சிகைகள்

தற்போது விற்பனையில்...




- ☑ புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்
- ☑ வினாத்தாள் I, II வழிகாட்டிகள்
- ☑ தமிழ், கணிதம், சுற்றாடல் பாட செயலட்டைகள் (தவணைகளின் அடிப்படையில்)
- ☑ திறன் அடிப்படையிலான நுண்ணறிவு விளக்கங்கள்
- ☑ தரம் - 5 சுற்றாடல் பாடத்தொகுப்பு - 04, 05
  - இசைக்கருவிகளின் சுற்றாடல்
  - இரு வினாக்களை அடக்கிய ஒரு வினாக்களின் தொகுப்பு
- ☑ நுண்ணறிவுத்தொடர் 2 - கட்புலனறிவு
- ☑ விஞ்ஞான பரிசோதனைகள்
- ☑ சிங்கள, ஆங்கிலப் பாட பயிற்சிகள்




ரூபா 100/= ரூபா 120/= ரூபா 120/=

- ☑ மாணவர்களின் சித்திரங்கள்
- ☑ கதைக்குள் ஒரு கணிதப்புதிர் - 04, குறுக்கெழுத்துப்போட்டி
- ☑ சிறுவர் திருக்குறள் சிறுகதை

தேர்ச்சிபெற்ற ஆசிரியர்களால் தொகுத்து வெளியிடப்படுகிறது

மேலதிக விபரங்களுக்கு :

011 5 200 900 | 074 1684643 | 0777 983308 | Junior Thamilan

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo –07